நாவாந்துறை ...
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: இருபது

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை 22 ஞாயிற்றுக்கிழமை (07.12.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:011

# ஆள்கடத்தல், காணாமற்போதல்

# இலங்கையில் இவ்வருடம் மிக அதிகம்

## ஐ.நா. உப குழு கூட்டத் தொடரில் கண்டனம்

ஜெனீவா, டிசெம்பர் 07

இலங்கையில் ஆள்கடத்தல், காணாமற்போகச் செய்தல் ஆகியன இந்த வருடத்தில் - 2008 இல்- மிகவும் அதிகரித்திருக்கின்றன. இதுகுறித்து ஐக்கியநாடுகள் சபையின் காணாமற் போதல் குறித்து ஆராயும் உப குழு கண்டனம் தெரிவித்துள்ளது.

நவம்பர் 26 ஆம் திகதி தொடக்கம் இம்மாதம் நான்காம் திகதிவரை நடைபெற்ற ஆள் கடத்தல் மற்றும் வல்வந்தமாகக் காணாமற் போகச் செய்தல் தொடர்பான ஐ.நா. உப குழுவின் 86 ஆவது கூட்டத் தொடரில், இலங்கையில் நிலைமை மேன்மேலும் மோசமடைந்து வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்று ரத்து

யாழ்ப்பாணம், டிசெ.07

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று ரத்துச் செய்யப்பட்டுள்ளது.யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி மேஜர் பேர்டி பெரேரா இதனைத்தெரிவித்தார்.

காலநிலை சீரில்லாத காரணத்தால் சேவை ரத்துச்செய்யப்பட்டுள்ளது என்றும் சேவை மீண்டும் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதனை இப்போது தெரிவிக்க முடியாது என்றும் அவர் மேலும் கூறினார். (அ-1)

## குடாநாட்டின் சகல பகுதிகளிலும் மீண்டும் நேற்று மாலையிலிருந்து கனத்த மழையும் காற்றும்

### கடலை அண்டிய பகுதிகளில் வசித்தோர் உட்புறங்களுக்குள் விரைந்தனர்

யாழ்ப்பாணம், டிசெ.7

குடாநாட்டின் சகல பகுதிகளிலும் நேற்று மாலை 6.30 மணிக்குப் பின்னர் நள்ளிரவுவரை சிலநிமிட இடைவேளைகளுடன் - விட்டு விட்டு - கனத்த மழை தொடர்ந்து பெய்தது. அடிக்கடி பலத்த காற்றும் வீசியது.

இதனால் பல இடங்களில் மீண்டும் வெள்ளம் தேங்கியதாக எமது பிரதேசச் செய்தியாளர்கள் அறிவித்தனர். இரவு எட்டுமணிக்குப் பின்னர் மழைவீழ்ச்சி மேலும் அதிகரித்தது.

கடலை அண்டிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் கடற்கொந்தளிப்பு ஏற்படலாம் என்ற அச்சத்தால் நேற்று நண்பகலுக்குப் பின்னரே உட்பகுதி(20 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் சூறாவளி எச்சரிக்கை!

சென்னை, டிசெ.07

தமிழ்நாட்டில் கரையோர மாவட்டங்களில் சூறாவளி வீசலாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று பிற்பகல் 2 மணி முதல் அடுத்த 48 மணி நேரத்துக்குள் சூறாவளி தாக்கும் அபாயம் உள்ளதாக சூறாவளி எச்சரிக்கை நிலையம் அறிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவில் சென்னைக்கு தென்கிழக்கே 750 கிலோ மீற்றர் தூரத்தில் நிலை கொண்டுள்ள தாழமுக்கம், தமிழ்நாட்டின் கரையில் தூத்துக்குடிக்கும், நாகபட்டினத்துக்கும் இடையில் அதிராம்பட்டினத்தைக் கடக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (20 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலியில் மோதல்

கொழும்பு, டிசெ.7

கிளாலிப்பகுதியில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக நேற்று முன்தினம் 3 தடவைகள் படையினர் தாக்குதல்களை நடத்தினர் என்று பாதுகாப்புத் தரப்பு தெரிவித்தது.

காலை 9.50 மணிக்கு முதலாவது மோதலும்பிற்பகல் 1.25க்கு இரண்டாவது மோதலும் இடம்பெற்றுள்ளன.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாத நெருக்கடி நிலை!

### உதவக் கோருகிறது கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கம்

கிளிநொச்சி, டிசெ.07

வன்னியில் தொடரும் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உணவு, உடை உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய முடியாத நெருக்கடியான சூழ்நிலை எழுந்துள்ளது. இத்தருணத்தில், அவலப்படும் மக்களுக்கு உதவிகளை வழங்க முன்வருமாறு, பொருளாதாரவளம் கொண்டோர்களுக்கு, உதவி அமைப்புக்களுக்கும் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது கிளிநொச்சி செஞ்சிலுவைச்சங்கம்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 பாதையின் அரைவாசி இப்போது படையினர் வசம் வந்துவிட்டதாக அறிவிப்பு



கொழும்பு, டிசெ.07

நாட்டின் ஏனைய பகுதிக்கும் யாழ். குடாநாட்டுக்கும் இடையிலான ஏ-9 தரைப்பாதையில் இது வரை 30 கிலோ மீற்றரை படையினர் கைப்பற்றிவிட்டனர். இன்னமும் 30 கிலோ மீற்றர் தூரமே இருக்கின்றது.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்காரா இவ்வாறு நேற்றுத் தெரிவித்திருக்கிறார்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கு ஜி.சீ.ஈ வினாத்தாள்கள் நேற்று எடுத்துச் செல்லப்பட்டன

யாழ்ப்பாணம், டிசெ.07

வன்னியில் - கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டங்களில் - ஜி.சீ.ஈ (சாதாரண) பரீட்சைகள் நாளை ஆரம்பமாகவிருக்கின்றன.

இந்தப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் இரண்டு மாவட்டங்களுக்கும் நேற்று எடுத்துச்செல்லப்பட்டன என்று கிளிநொச்சி அரச அதிபர் நா.வேதநாயகன் நேற்றிரவு தெரிவித்தார்.

பரீட்சை வினாத்தாள்களை எடுத்துச் செல்ல ஓமந்தை சோதனை நிலையத்தில் அனுமதிக்கப்படவில்லை என்று வெளியான தகவல்கள் குறித்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் இடம்பெயர்ந்துள்ள இடங்களில் உள்ள பாடசாலைகளில் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன. (20 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புத் துறைமுகத்தை தாக்கப் புலிகள் திட்டமாம்

கொழும்பு, டிசெ.7

கொழும்புத் துறைமுகத்தைத் தாக்கி அழிக்க விடுதலைப்புலிகளின் 10 உறுப்பினர்கள் கொழும்புக்குள் ஊடுருவியுள்ளனர் என்று (20 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சிக்கு மேற்கே நேற்று மோதல்

கொழும்பு, டிசெ.7

கிளிநொச்சிக்கு மேற்கே அடம்பன் பகுதியில் நேற்றுக் காலை முன்னேறிய படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை இடம்பெற்றது என்று பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்தது.

முன்னேறிவரும் 57 ஆவது படையணியினர் மீது நேற்று அதிகாலை 3 மணிக்கு விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதலை நடத்தினர்.

படையினர் ஆட்லறி, பல்குழல் பீரங்கிகள் கொண்டு (20 ஆம் பக்கம் பார்க்க)

## தெருவோரப் பண்டங்களால் தேடாதீர் நோய்களை!

- தெருவோரத்தில் விற்கப்படும் தின்பண்டங்கள், நீராகாரங்கள் சுகாதாரத்திற்குக் கேடானவை.
- அவற்றை உண்பதனால் அல்லது குடிப்பதனால் தொற்று நோய்கள் ஏற்படலாம். எனவே அவற்றை வாங்கியுண்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- இயன்றளவு வீட்டில் சமைத்த உணவுகளையே உண்ணுங்கள்.
- வீதியோரங்களில் வெட்டி விற்கப்படும் காய், பழங்களையும் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- உள்ளூரில் அனுமதியின்றித் தயாரித்து விற்கப்படும் யூஸ் பைக்கற்றுக்களை அருந்த ...

சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

அனுசரணை: Care International

care

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# 10ஆவது பிறந்த நாளில் பாராட்டி வாழ்த்துகிறோம்



அச்சுவேலி தெற்கு அச்சுவேலியைச் சேர்ந்த இரவிச்சந்திரன் - கலாவதி தம்பதியரின் செல்வப் புதல்வன்

**இ.ஹரிலக்ஷன்**

[யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்]

2008 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 138 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தில் சித்தியடைந்ததோடு இன்று (07.12.2008) தனது 10 ஆவது பிறந்த நாளையும் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவர் கல்வியில் மேன்மேலும் உயர்வு பெற எல்லாம் வல்ல காட்டுமலைக் கந்தன், அவ்வொல்லைப் பிள்ளையார் துணை வேண்டி வாழ்த்துகின்றோம்.

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. குடும்பத்தினர்.

# STUDY IN LONDON



ISO CERTIFIED INSTITUTID

WITHIN 3 WEEKS

MINIMUM O/L

MEMBER OF UCAS COLLEGE & UNIVERSITY

EMPLOYMENT PASS

HND,BBA,BA,BSc,MA,MSc,BEng,B.Com, MBBS, PhD,IT. LLM,LLB,PGDip,MPharm,computer& ect

LAWYER
Mr. M.S.M.Zahir
Attorney . At .Law
Notary public
Commissioner for company secretary

EDUCATION LONE

வெளிநாட்டில் கல்விகற்க விரும்பும் மாணவர்களின் நலன் கருதி திருகோணமலையிலும் City College International திறக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு தேவையான அனைத்துவசதிகளையும் செய்து தருவதோடு Sponsor ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

**CITY COLLEGE International**

E-mail : icclanka@gmail.com Web : city college lanka.com,www.icclanka.com

தமிழ் மொழிமூல அழைப்புக்கு - 077 12 50 789 - 0772 955 977

NO:- 07.2nd Floor ,W.A Silva Mawatha Wellawatte ,Colombo- 06 Tel: 0114 594 104,

No:- 85, College Street, Trincomalee. Tel: 0264 90 98 55, Hotline: 0772 955 977


# மரண அறிவித்தல்

## திருமதி கனகராணி இரத்தினசபாபதிப்பிள்ளை

[முன்னாள் பதில் அதிபர், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி]



கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகராணி இரத்தின சபாபதிப்பிள்ளை 05.12.2008 வெள்ளிக்கிழமை கொழும்பில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை குமாரசாமி-காலஞ்சென்ற செல்லம்மா குமாரசாமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா - காலஞ்சென்ற ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் இரத்தினசபாபதிப்பிள்ளையின் (முன்னாள் ஆசிரியர், St.Patrics College, Jaffna) அன்பு மனைவியும், Dr.கேசவன் (W.H.O, Colombo), Dr.வாசவன் (Chest Hospital, Ragama), அனோஜன் (பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு தாயும் Dr.வைதேகி கேசவன் (National Hospital, Colombo), சந்திரவதனி வாசவன் (சட்டத்தரணி), Dr.பிரசாந்தினி அனோஜன் ஆகியோரின் அன்பு மாமியும் நிகேதனா, நிவாசி, திவ்வி..ன் ஆகியோரது அன்புப் பாட்டியும் K.ஆனந்தவடிவேல், தங்கராணி, அரிராஜசிங்கம், இந்திராணி பாலசந்திரன், S.K. தங்கவடிவேல் ஆகியோரது பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரது பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக பொரளை ஜயரத்தின மலர்ச்சாலையில் இன்று (07.12.2008) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1 மணி முதல் பி.ப. 4 மணி வரையும் பின் நாளை (08.12.2008) திங்கட்கிழமை காலை 8 மணி முதல் வைக்கப்படும். தகனக்கிரியைகள் நாளை (08.12.2008) திங்கட்கிழமை மதியம் 12 மணிக்கு இந்துசமய முறைப்படி பொரளை ஜயரத்தின மலர்ச்சாலையில் மேற்கொள்ளப்பட்டு பொரளை கனத்தை பொது மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

27 B, சேனாநாயக வீதி,
தெஹிவளை. T.P.011 5024505

தகவல்:
Dr.R.கேசவன்.





யாழ்ப்பாணத்தில் கிடைக்கும் இடம்

SIVA NARUMANAB POONGA
No:288, Hospital Road, Jaffna.
Tel: 021 2222567

Manufactured By: Bio Extracts (Pvt) Ltd.
11A, Milepost Avenue, Colombo 3, Sri Lanka.
Marketed By: [illegible] Pharmaceuticals (Pvt) Ltd.


# கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.07

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் புலமைப்பரிசில் பரீட்சையில் நூறு புள்ளிகளுக்கு மேல்பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கலந்துகொள்வார்.


## வீடு விற்பனைக்கு

மத்தியூஸ் வீதியில் 2 பரப்புடன் சகல வசதிகளும் கொண்ட கல்வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு

51 1/1, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.

# ஐடியல் அக்கடமி

சிரணிச்சந்தி, சண்டிலிப்பாய்

நீராவியடி, யாழ்ப்பாணம்

இடைப்பிட்டி, காரைநகர்

யாழ். வீதி, மானிப்பாய்

தரம் 6 முதல் O/L,A/L வரை
கல்வியாண்டு -2009
ஆரம்பம்:- 10.12.2008 புதன்

| | |
|---|---|
| சண்டிலிப்பாய் | 3.00 pm |
| காரைநகர் | 6.00 am |
| யாழ்ப்பாணம் | 9.00 am |
| மானிப்பாய் | 1.30 pm |

கணித ஆசானும் நிர்வாகியும்
திரு- V.N- பத்மநாதன்


# 22 ஆம் நாள் நினைவில்......

## அமரர் செ. சதீஸ்



அன்பின் உறைவிடமாக-வலி.தென் மேற்கு மக்களின் சமூக சேவகனாக செயற்பட்டு அமரத்துவம் அடைந்த அன்பு குலவிளக்கு செ.சதீஸ் (S.D.O)இன் ஆத்மா சாந்திபெற வணங்குகின்றோம். சாந்தி!

நவாலி.

திரு. திருமதி
கதிரமலை-ஜெயராணி
(சித்தப்பா குடும்பம்).

# மரண அறிவித்தல்

## சிதம்பரப்பிள்ளை மகாலிங்கம்



திக்கரை, களபூமியை வசிப்பிடமாகக் கொண்ட சிதம்பரப்பிள்ளை மகாலிங்கம் 05.12.2008 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - பூமணி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தில்லை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

திக்கரை, களபூமி,
காரைநகர்.

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## செயலமர்வு ஒத்திவைப்பு

தீவக வலயக் கல்வி அலுவலகத்தால் வண்ணை நாவலர் வித்தியாலயத்தில் இன்றும் எதிர்வரும் 13 ஆம் திகதியும் நடத்தப்படவிருந்த விசேட கல்விச் செயலமர்வுகள் பிற்போடப்பட்டுள்ளதாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# மரண அறிவித்தல்கள்

## செல்வன் குகராசா ராகுலன்



வசாவிளான் தெற்கு, வசாவிளானைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி தோப்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட குகராசா ராகுலன் 05.12.2008 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் குகராசா-நந்தினி தம்பதியரின் அன்பு மகனும் சிந்துஜா (யா/வே.ம.உ.பா), ராகவன் (ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கந்தலிங்கம், அன்னம்மா, நடராசா, சரஸ்வதி ஆகியோரின் அன்புப் பேரனும் நாகரத்தினம் (சுவிஸ்), குகநேசன் (லண்டன்), சோதி (சுவிஸ்), குமுதினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மருமகனும் சர்வலோகநாயகி (வவுனியா), குமுதினி (மானிப்பாய்), கருணாகரன் (வவுனியா), உருத்திரவிஜயகுமார் (மானிப்பாய்) ஆகியோரின் அன்புப் பெறாமகனும் விந்துஜா, டினேஸ், சரண்யா, அசோக் ஆகியோரின் மைத்துனரும் பரணி, யதுஷன், கினோயா, யதுர்சிகா, டிலானி, டிலக்சி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் சற்குணராசா, கண்ணகி ஆகியோரின் பெறாமகனும் சாரதாதேவி, வித்தியநிர்வதி ஆகியோரின் மருமகனும் சாரதாமணி, கந்தசாமி ஆகியோரின் மருமகனும் பரணி, யதுஷன் ஆகியோரின் அண்ணனும் வித்தியசாகரன், கார்த்திகா, சுஜீவன், மகிந்த, ஸ்ரீவைஸ்ணவி ஆகியோரின் மச்சானுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.12.2008) சனிக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி, தோப்பு
தொ.பே.077 8036216 (80526)

தகவல்:
குடும்பத்தினர்.

## செல்லையா சிவபாலன்



பண்ணாலை, தெல்லிப்பழையைச் சேர்ந்த முன்னாள் தபால் தந்திப் பரிசோதகரும் அபுதாபியில் தபால் தந்தி அத்தியட்சகராகப் பணியாற்றியவருமாகிய செல்லையா சிவபாலன் நேற்றுமுன்தினம் (05.12.2008) வெள்ளிக்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - சின்னம்மா தம்பதியினரின் மூத்த புதல்வரும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் பகீரதன் (Singapore), சிவரதி (Australia) ஆகியோரின் அன்புத் தந்தையும் கேதீஸ்வரன் (Australia), பூங்கோதை (Singapore) ஆகியோரின் அன்பு மாமனாரும் வர்ஷினி (Australia), கேஷனி (Australia) ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற சின்னத்தம்பு (தபால் அதிபர்) - காமாட்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் மகேஸ்வரி (ஓய்வுபெற்ற மருந்தாளர்), சண்முகசுந்தரம், லகுதாதேவி, தவமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் குமாரதேவி, மகேஸ்வரன், காலஞ்சென்ற சோமசுந்தரம் (MLT உத்தியோகத்தர்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(07.12.2008) ஞாயிற்றுக்கிழமை ஜயரத்தின மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நாளை (08.12.2008) திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

115/6, W.A SILVA MW,
Colombo - 06
011 2502867

தகவல்:
சி.பகீரதன்
(மகன்).

## லயன் தணிகாசலம் ஜெயநாதன்

(உரிமையாளர் கமக்காரர் மாளிகை, சுன்னாகம், இணுவில்- உழவர் களஞ்சியம், திருநெல்வேலி)



இணுவில் கிழக்கைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தணிகாசலம் ஜெயநாதன் 05.12.2008 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி தணிகாசலம்- கனகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான மானிப்பாயைச் சேர்ந்த திரு. திருமதி துரைசிங்கி-பத்மநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயப்பிரதாதேவியின் அன்புக் கணவரும் அனுசா (கனடா), ஜெனனி (நுண்கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), பிரதீஷா (உயர்தொழில் நுட்ப நிறுவனம் H.N.D.A (M) முதலாம் வருடம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராசேந்திரத்தின் வளர்ப்புத் தந்தையும் ஜெயபாலனின் அன்புச் சகோதரனும் விஜயசீலன் (கனடா), Dr.சிவசம்பவன் (கொழும்பு), வித்தியா ஆகியோரின் அன்பு மாமனும் சாயிசன் (கனடா), றாம் டிலக்ஷன், பாணுறேகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் லலிதாதேவி (நியூசிலாந்து), சிங்கவரோதயன் (நியூசிலாந்து), Dr.ரவிராஜன் (லண்டன்), சூரியகுமார் (மொறிசியஸ்), நிஸ்கலாரூபி (அவுஸ்திரேலியா), பத்மசிலோஜனா (கனடா), பத்மராஜன்(யாழ். மாநகர சபை), சந்திரிக்கா (லண்டன்), சாரதாதேவி ஆகியோரின் மைத்துனரும் Dr.மகாதேவா (நியூசிலாந்து), அமிர்தினி (நியூசிலாந்து), Dr.கௌரிமனோகரி (லண்டன்), வஜயந்திமாலா (மொறிசியஸ்), சிறிரஞ்சன் (அவுஸ்திரேலியா), ஜெயதேவன் (கனடா), நிறைஞ்சனி (பிரதேசசபை, புத்தூர்), விக்கிநல்லையா (லண்டன்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

A.M. School Lane,
இணுவில் கிழக்கு, இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே.: 060 221 6252

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரணாப் வருகை பிரயோசனம் தருமா?

## ஈழத் தமிழர்களுக்கு நீதிசெய்வதற்கு இப்போதாவது முயல்வாரா நாராயணன்?

கடந்த மாத இறுதியில் மூன்றுநாட்கள் இந்தியாவின் மும்பாய் நகரில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் நடத்திய வெறியாட்டம் புதுடில்லி அரசியல் தலைமையை ஒரு கலக்குக் கலக்கி, உலுப்பு உலுப்பியிருக்கின்றது.

உள்துறை அமைச்சர் சிவராஜ் பாட்டீல் பதவியைத் துறக்கவேண்டியவரானார். நாட்டின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனும் பதவிவிலக முன்வந்தாராயினும், அவரைப் பதவியில் தொடருமாறு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கேட்டுக்கொண்டமையால் அவர்



தொடர்ந்து பணியில் நீடிக்கின்றார்.

நாராயணன் தமது பொறுப்பில் நீடித்தாலும் கூட, புதுடில்லியில் பாதுகாப்புக் கட்டமைப்பில் அவரின் அதிகாரமும், செல்வாக்கும் பொலபொலத்துப் போயிருக்கின்றன என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் பதவி என்பது ஓர் அரசியல் நியமனம். அமைச்சரவை அந்தஸ்துள்ள ஓர் அமைச்சரின் நிலையில் கணிக்கப்படும் பதவி.

ஆட்சியிலிருக்கும் காங்கிரஸ் கட்சியின் தெரிவாக - அரசியல் நியமனமாக - நாராயணன் இப்பதவிக்கு வந்திருந்தாலும் கூட, இந்தியாவின் பாதுகாப்புத்துறையில் பல்வேறு அரச உயர்நிலைகளை அலங்கரித்து, அவற்றைத் தாண்டியே அவர் இந்நிலைக்கு உயர்ந்திருக்கிறார். இந்தியத் தேசிய உளவு அமைப்பான 'றோ' மற்றும் ஐ.பி. (உள்ளகப் புலனாய்வுத்துறை) போன்ற நிறுவனங்களின் தலைவராக முன்னர் செயற்பட்டவர் நாராயணன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே தேசிய பாதுகாப்பு ஆலோசகர் என்ற பதவிக்கு அரசியல் நியமனமாக நாராயணன் அமர்த்தப்பட்டபோதும், பாதுகாப்புத் துறையில் நிரந்தர சேவையில் இருக்கும் அரச அதிகாரிகள் மற்றும் படைத்தளபதிகளால் அவர் பாதுகாப்புத்தர அரச உயரதிகாரிக்குரிய மரியாதையுடனும் செல்வாக்குடனும் இதுவரை கருதப்பட்டார். அவரது பதவி நியமனத்தை ஓர் அரசியல் நியமன மாகவோ, அரசியல்வாதிகளின் தாளத்துக்கு ஆடும் - நிலையாகவோ ஆரம்பத்தில் ஏனைய உயர் அதிகாரிகள் கருதவில்லை.

**- வி.சிவராம் -**

ஆனால், காலப்போக்கில் - கடந்த மூன்று, நான்கு அண்டுகளில் - அவரின் செயற்பாடுகள், அடுத்த மட்ட அதிகாரிகள் மத்தியில் கடும் அதிருப்திக்குள்ளாகின என்று கூறப்படுகின்றது.

நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுப்பதைவிட்டு, காங்கிரஸ் தலைமையின் விருப்புக்கு முன்னுரிமை கொடுக்கும் - அரசியல்வாதிகளின் தாளத்துக்கு ஆடும் சாதாரண நபராக அவர் செயற்படுகின்றார் என்ற கருத்து நிலைப்பாடு புதுடில்லி பாதுகாப்பு வட்டாரங்களில் தலைதூக்கத் தொடங்கின.

மும்பைத் தாக்குதலை அடுத்து, அதிருப்தியுற்ற இந்திய உயர்வட்டாரம் ஒன்று பின்வருமாறு கூறியது:-

*''இந்தியாவைப் பொறுத்தவரை எதிரிகளின் ஆபத்து வடக்கில்தான் அதிகம். தெற்கில் அல்ல. ஆனால், அரசியல்வாதிகளின் விருப்புக்குத் தாளம் போடுவதற்காக தெற்கில் அதிகம் ஆபத்து இருப்பதைப் போல காட்டப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பாரிய விவசாய நிலங்களில் கிருமிநாசினி தெளிக்கப் பயன்படுத்தும் சாதாரண - சிறிய - விமானங்களைத்தான் விடுதலைப் புலிகள் வைத்திருக்கின்றார்கள். அதனால், இந்தியாவுக்கு ஒன்றும் பெரிய ஆபத்து இல்லை. ஆனால், ஏதோ பேராபத்து இருப்பது போலக் காட்டப்பட்டு தென்னிந்தியா முழுவதும் விமான எதிர்ப்பு நடவடிக்கைகள் பெரும் செலவில் பலப்படுத்தப்பட்டன. 'சுப்பசொனிக்' விமானங்களை எதிர்கொள்ளத் தயாராவது போல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 'ராடர்கள்' கட்டமைப்புகள் பல இடங்களிலும் பொருத்தப்பட்டு நுணுக்கமாக நிலைமைகள் கண்காணிக்கப்பட்டன. வான் கண்காணிப்பு தரம் பலமடங்கு உயர்த்தப்பட்டது.*



*''உண்மையில் ஆபத்து வடக்குப் பக்கத்தில் இருந்துதான். தேவையில்லாமல் - அரசியல் சலசலப்புகளுக்காக - தெற்கில் பொருத்திய ராடர் க்கட்டமைப்புக் கவனிப்புகளை வடக்கிலும் மேற்கிலும் செலுத்தியிருந்தால் மும்பைத் தாக்குதலுக்கு வந்த இஸ்லாமியத் தீவிரவாதிகளைத் தடுத்திருக்க வாய்ப்புக் கிட்டியிருக்கும்.''* - என விசனத்துடன் கூறியது அந்த வட்டாரம்.

தேசியநலனை விட, காங்கிரஸ் கட்சியின் அரசியல் நலனுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஒருவர் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் பதவியில் அமர்ந்திருப்பது பொருத்தமற்றது என்ற அதிருப்தி புதுடில்லியில் அதிகார வர்க்கத்தினிடையே வளர்ந்துவருவது நாராயணனின் அதிகாரத்துக்கும் செல்வாக்குக்கும் பின்னடைவே.

இந்தப் பின்புல யதார்த்தத்தோடுதான் கடந்த வியாழனன்று புதுடில்லியில் தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தலைமையில் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்த சமயம், அந்தச் சந்திப்பில் நாராயணனும் உடனிருந்தமையை நாங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

கடந்தவருடம் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து தமிழக முதல்வருடன் நேரடியாகப் பேசுவதற்காகத் தனது பிரதிநிதியாகத் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நாராயணனை சென்னைக்கு அனுப்பியிருந்தார் பிரதமர் மன்மோகன் சிங்.

நாராயணனும் தமிழர் என்பதால் அவருடன் தமிழக முதல்வர் கருணாநிதி சுத்தத் தமிழில் அச்சமயம் உரையாடினார்.

*''ஏனப்பா! அப்போது ராஜீவின் காலத்திலும் இலங்கைத் தமிழர் பிரச்சினையை நீதான் குழப்பினாய். இப்போதாவது அப்பிரச்சினை தீர்வதற்கு நடவடிக்கை எடுக்கமாட்டாயா?''* - என்று ஆதங்கத்துடனும் விசனத்துடனும் தமிழக முதல்வர் நேரடியாகவே அப்போது கேட்டார் என்று கூறப்படுகின்றது.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் இடையில் ஒரேயொரு தடவைதான் நேரடிச் சந்திப்பு நிகழ்ந்தது.


1987 ஒகஸ்ட் 29ஆம்திகதி ராஜீவ்காந்தி கொழும்புக்கு வந்து அப்போதைய இலங்கை ஜனாதிபதி கே.ஆர்.ஜெயவர்த்தனாவுடன் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். அதற்கான அன்றையதினம் விடிகாலையில், ராஜீவ்காந்தி புதுடில்லியிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் - முதல்நாள் இரவு 11 மணியிலிருந்து அதிகாலை 2மணி வரை - புதுடில்லியில் பிரதமர் இல்லத்தில் ராஜீவ் - பிரபா சந்திப்பு நிகழ்ந்தது. அச்சந்திப்பில் புலிகளின் ஆலோசகர் அன்டன் பாலசிங்கமும், தமிழக அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனும் அப்போது கூடவிருந்தனர் என்று கூறப்பட்டாலும், அவர்களை விடவும் முக்கிய ஒரு நபரும் அங்கு - அந்தப் பேச்சுகளின்போது - பிரசன்னமாகியிருந்தார். அவர் வேறு யாருமல்லர். அப்போது இந்திய உள்ளாய்வுப் புலனாய்வுத்துறையின் தலைவராகவும் ராஜீவுக்கு மிக நெருக்கமானவராகவும் இருந்த நாராயணன்தான்.

அதே நாராயணன்தான் இப்போது பிரதமர் மன்மோகன்சிங்குக்கும், சோனியா காந்திக்கும் மிக நெருக்கமானவராக இருந்து, தேசிய ஆலோசகர் பதவியை அலங்கரித்து வருகின்றார்.

இலங்கை விவகாரம் தொடர்பாக புதுடில்லி அரசியல் தலைமை எடுக்கக்கூடிய எந்த முடிவும், எந்தத் தீர்மானமும் நாராயணனின் வழிகாட்டுதலிலேயே அமையும் என்பது இன்றைய உறுதியான நிலை.

இப்போதும் கூட இலங்கையில் யுத்தநிறுத்தம் ஏற்படுத்தவேண்டும் என்ற தமிழகத்தின் வலியுறுத்தலை கொழும்புக்கு நேரடியாக எடுத்துரைப்பதற்காகத் தமது பிரதிநிதியாக வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்ப பிரதமர் மன்மோகன்சிங் தீர்மானித்துள்ளார். பிரணாப் முகர்ஜி எச்சமயத்திலும் இலங்கைக்கு விஜயம் செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கட்டத்தில் இலங்கை விடயத்தில் இந்தியா ஏதேனும் செய்தாகவேண்டும் எனில், அது கொழும்புடன் மட்டும் தொடர்பாடல் வைத்து எட்டக்கூடிய விடயமல்ல. போரில் சம்பந்தப்பட்ட மற்றைய தரப்பான விடுதலைப் புலிகளுடனும் ஏதோ ஒரு மட்டத்தில் இந்தியா



புரிந்துணர்வுக்கு - இணக்கப் பாட்டுக்கு - வந்தால்தான் இவ்விவகாரத் தில் இந்தியா ஏதேனும் ஆக்கபூர்வமான பங்குபற்றுதலை ஆற்றமுடியும் என்பது தெளிவு.

அத்தகைய காய்நகர்த்தல் எதையாவது செய்வதாயின் அதில் முக்கிய கடமையாற்ற வேண்டியவர் நாராயணன்தான்.

பிரணாப் முகர்ஜியின் உத்தேச இலங்கை விஜயம் பிரயோசனமாக அமைவதற்குக் கூட, பின்புலத்தில் நாராயணனின் காய்நகர்த்தல்கள்தான் பக்கபலமாக அமையவேண்டும்; அமையமுடியும்.

செய்வாரா நாராயணன்?

முதல்வர் கருணாநிதி முன்னர் கேட்டமை போல -

*''ஏனப்பா நாராயணா! முன்னர் (ராஜீவ்காந்தி காலத்தில்) இவ்விடயத்தைக் குழப்பியடித்த தவறுக்குப் பிராயச்சித்தமாக இப்போதாவது ஈழத்தமிழருக்கு நியாயம் செய்வதற்காக நீதியாக நடந்துகொள்வீர் களா?''* - என்று சக தமிழர் என்ற உரிமையோடு நாராயணனைப் பார்த்துக் கேட்கவேண்டிய நிலையில் ஈழத்தமிழர்கள் உள்ளனர்.

காங்கிரஸ் கட்சி தன்னுடைய தற்போதைய ஆட்சியின் கடைசி அந்தத் தில் நிற்கிறது. அடுத்த ஆண்டு நடுப்பகுதி யில் வரப்போகின்ற புதிய அரசு காங் கிரஸினுடையதாக இருக்குமா? அதில் நாராயணனுக்கு இந்தப் பதவி நீடிக்குமா? என்பவையெல்லாம் கேள்விக்குறியே; சந்தேகத்துக்குரியவையே.

எனவே, ஈழத்தமிழருக்கு நியாயம் செய்வதற்கு நாராயணனுக்குக் கிடைத்திருக்கும் கடைசிச் சந்தர்ப்பமாகவும் இது இருக்கக்கூடும். செய்வாரா நியாயம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23.12.2008 அன்று புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற விழாவில்
பட்டம் பெற்ற மாணவர்களை

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**North Lanka IIT** நிறுவனத்திலே கணினிப் பட்டப்படிப்பை பூர்த்திசெய்து **Trinity University** இனது சான்றிதழைப் பெற்ற பட்டதாரிகளை மேலும் பட்டங்களைப் பெற்று சாதனை படைக்கவேண்டும் என்று பாராட்டி வாழ்த்துகின்றோம்!!!

North Lanka IIT சமூகம்.

# North Lanka IIT வழங்கும்

## மாபெரும் புலமைப் பரிசில் திட்டம் 2009

(குறைந்த செலவில் பட்டதாரியாகும் அரிய சந்தர்ப்பம்!

SUCCESS MAKES PERFECT

Course Fees Free!!!

போட்டிப் பரீட்சை மூலம்
உங்கள் திறமைக்கேற்ப
25% இருந்து 100% வரை
கற்கைநெறிக்கட்டணம்
இலவசம்!!!!

**1.B.Sc. in Computer Science**
(2 Years கற்கைநெறி முழுவதும் எமது நிறுவனத்திலேயே பூர்த்தி செய்து பின் M.Sc. வரையும் கற்கமுடியும்)

**2.B.Sc. in Multimedia- 1st Year**
(2nd, 3rd Year பின்வரும் நாடுகளில் பகுதிநேர வேலை வாய்ப்புடன் தொடரலாம் Netherland/ New Zealand/ U.K )

**3.Diploma in**
- Software Development
- MS Office
- DTP
- Internet and e-mail
- Hardware Engineering

O/L பரீட்சைக்குத் தோற்றுபவர்களும் விண்ணப்பிக்கமுடியும்!

**விண்ணப்ப முடிவுத் திகதி:- 23-12-2008**

விண்ணப்பப் படிவத்தினை எமது நிறுவனத்தில் பெற்றுப் பூர்த்திசெய்து ரூபா 250.00யை செலுத்தி நேரில் பதிவு செய்யவேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு

வாரநாட்களில்
பிரதான வீதி, சங்கானை
T.P.No. 060 221 4305

வாரஇறுதி நாட்களில்
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம்(முன்பாக), யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மரணத்தை எதிர்ப்பவர்கள்...!

இந்திய நகரங்களுக்குத் தீவிரவாதத் தாக்குதல்கள் புதிய விடயமல்ல.மும்பை முன்னரும் இலக்கு வைக்கப்பட்ட இடம்தான்.

1993 மார்ச் மாதம் மும்பையின் பல முக்கிய கட்டடங்களுக்கு முன்னால் இடம்பெற்ற தொடர்ச்சியான கார்க் குண்டுத் தாக்குதல்களில் 257 பேர் கொல்லப்பட்டனர்.

இதற்கு முன்னதாக டிசம்பர் 1992 இல் மும்பை இந்து - முஸ்லிம் கலவரத்தை சந்தித்திருந்தது.

பின்னர் 2006 இல் மும்பையின் பயணிகள் புகையிரதங்களில் வெடித்த தொடர்குண்டுகள் காரணமாக 183 பேர் கொல்லப்பட்டனர்.




இந்தியாவின் ஏனைய நகரங்களும் தொடர்ச்சியாக இலக்குவைக்கப்பட்டன. குறிப்பாக புதுடில்லி பல தடவை தாக்குதல்களுக்குள்ளாகியுள்ளது.

2005 ஒக்டோபரில் தீபாவளிக்கு முன்னதாக புதுடில்லியில் சந்தைகளில் இடம்பெற்ற தொடர்குண்டுவெடிப்பு களில் 60இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர்.

இவ்வருடம் ஜூலை மாதம் குஜராத் தின் அஹமதாபாத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களில் 59பேர் பலியாகினர்.

அஹமதாபாத் குண்டு வெடிப்பில் முன்னரை விட கொடூரத்தன்மை காணப்பட்டது. குண்டுவெடிப்புகளில் சிக்கிக் காயமடைந்தவர்களை, அம்புலன்ஸ்களில் ஏற்றிவரும்வேளை மருத்துவமனைகளின் அருகில் தாக்குதல் இடம்பெற்றது.

இவை அனைத்தையும் விட மாறு பட்ட பாணியிலானது மும்பை நவம்பர் 2008 தாக்குதல்.

வெடிகுண்டுகளுக்கு பதில் இம்முறை துப்பாக்கி பிரயோகம், கைக்குண்டுத் தாக்குதலையும் மேற்கொண்டுள்ளனர்.

இந்திய நகரங்களுக்கு இந்த வகைத் தாக்குதல் புதியது. 2001 டிசம்பரில் இந்திய நாடாளுமன்றத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மாத்திரம் இவ்வாறான பாணியில் அமைந்திருந்தது. துப்பாக்கிகள், கைக்குண்டுகள் சகிதம் நுழைந்த ஐவர் கொண்ட குழுவொன்று தாக்குதலை மேற்கொள்ள முயன்றது.

எனினும், இந்தியாவின் கட்டுப்பாட்டி லுள்ள காஷ்மீரில் இவ்வாறான தாக்குதல் கள் இடம்பெறுவது வழமை. இருவர் கொண்ட குழுக்கள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட பின்னர் கைக்குண்டு வீச்சினை மேற்கொள்வர்.

இவ்வாறான தாக்குதல்களை மேற் கொள்பவர்கள் பிடாயீன்கள் (Fidayeen) என அழைக்கப்படுகின்றனர். பிடாயீன்கள் என்பதற்கு 'மரணத்தை எதிர்ப்பவர்கள்' என்பது அர்த்தம்.

காஷ்மீரில் பலதடவைகள் இவர்கள் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். இந்தத் தாக்குதல்கள் மூன்று நாள்களுக்கு மேல் தொடர்ச்சியாக நீடித்துள்ளன. பொதுமக்களை பயணக் கைதிகளாக வைத்து தாக்குதல் மேற்கொள்ளப்படுவதால் படையினர் திருப்பி தாக்குவது கடினம்.

இவ்வகைத் தாக்குதல்களை காஷ்மீரின் ஹிஸ்புல் - முஜாஹிடின் போன்ற உள்ளூர் அமைப்புகள் ஆரம்பிக்கவில்லை.

மாறாக 1990 இன் பின்னர் காஷ்மீர் கிளர்ச்சியில் தம்மை இணைத்துக்கொண்ட பாகிஸ்தானின் தீவிரவாத அமைப்புகளே ஒருவகை அதிர்ச்சியூட்டும் பாணியிலான இந்த பிடாயீன் தாக்குதல்களை மேற்கொள்ள ஆரம்பித்தனர்.

லக்ஸ்பர் - இ-தொய்பா அமைப்பு காஷ்மீரைச் சேர்ந்த சில இளைஞர்களுக்கு இவ்வகைத் தாக்குதல்களுக்கான பயிற்சியை அளித்த போதிலும், பாகிஸ் தானைச் சேர்ந்தவர்களே அனேகமாக இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

2001 இல் காஷ்மீரின் சட்டசபை மீது ஜய்ஸ்-இ-முகமட் எனும் அமைப்பு இவ்வாறான பிடாயீன் வகை தாக்குதலை மேற்கொண்டிருந்தது.

எனினும், சட்டசபைக்குள் சிக்கிய உறுப்பினர்களை மீட்பதில் படையினர் வெற்றிகண்டனர்.

இந்திய நாடாளுமன்றம் மீதான தாக்குதல்களுக்கான ஒத்திகையாக இது இடம்பெற்றிருக்கலாம் என்ற கருத்து இந் திய புலனாய்வு அமைப்புகள் மத்தியில் காணப்படுகின்றது.

இதன்பின்னர் 2002 காந்திநகரில் உள்ளஅக்ஸர்டா கோவில் மீது லக்ஸ்ஷர் -இ-தொய்பா அமைப்பு இவ்வாறான தாக்குலொன்றை மேற்கொண்டது. இதில் 29 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

ஜம்மு காஷ்மீரில் உள்ள அரச ஊடகப் பிரிவின் அலுவலகம், இந்துமத அமைப் பின் அலுலுவலகங்கள் உட்பட பலவற்றின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இறுதியாக 2006 இல் ஸ்ரீநகரின் நியு ஸ்டான்டட் ஹோட்டல் மீது இந்த வகைத் தாக்குதல் இடம்பெற்றது.

எனினும், பணயக் கைதிகளாக வைக்கப் பட்டிருந்தவர்களை வெற்றிகரமாக வெளி யேற்றிய பொலிஸார் தாக்குதலை மேற் கொண்ட மூன்று தீவிரவாதிகளையும் சுட்டுக்கொன்றனர்.

காஷ்மீரில் மேற்கொள்ளப்பட்ட

**- ரஜீவன் -**

ஒவ்வொரு தாக்குதலிலும் பயன் படுத்தப் பட்ட அதே உத்திகளே மும்பையிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட கட்டடமொன்றுக்குள் நுழைவதற்காக முதலில் பிடாயீன்கள் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோ கத்தை மேற்கொள்வார்கள். கைக்குண்டுத் தாக்குதலும் இடம்பெறும். உள்ளே நுழைந்ததும் தங்களால் முடிந்தளவுக்கு முற்றுகையை நீடிப்பார்கள் என்கின்றனர் பாதுகாப்பு ஆய்வாளர்கள்.

பிடாயீன்களின் ஒவ்வொரு தாக்கு தலும் பொதுமக்கள் மத்தியில் அச்சத்தை உண்டுபண்ணுவதில் வெற்றி கண்டுள் ளன என்பதும் அவர்களின் கருத்து.

காஷ்மீரில் 2006 இல் அரசியல் பேரணியொன்றின்போது இடம்பெற்ற தாக்குதலில் காயமடைந்தவர். கே.ராஜேந்திரா. காஷ்மீரின் முன்னாள் பொலிஸ் மா அதிபர்.

பிடாயீன்களுக்கு எதிராக புதிய தந்திரோபாயத்தை வகுக்கவேண்டிய அவசியம் உணரப்பட்டிருப்பதாக அவர் கூறுகின்றார்.

''இவ்வாறான தாக்குதல் இடம்பெறும்போது வெளியிலிருந்து வரும் உதவிக்காக காத்திருப்பதை விட உள்ளேயே இதனை எதிர்கொள்ளக் கூடிய குழுக்களை அமைப்பதன் அவசியத்தை உணர்ந்தோம், இதற்கான குழுக்களை உருவாக்கினோம்'' என்கிறார் அவர்.

இந்திய- பாகிஸ்தான் உறவுகளில் ஏற்பட்ட முன்னேற்றத்துக்குப் பின்னர் காஷ்மீரில் இவ்வகைத் தாக்குதல்களை குறைவடைந்துள்ளன.

எனினும், மும்பையில் தாக்குதலை மேற்கொண்டுள்ளதன் மூலம் பிடாயீன் உத்தியைப் பயன்படுத்துவதற்கு புதிய - ஆனால் இன்னமும் ஆபத்தான தள மொன்றைத் தீவிரவாதிகள் கண்டு பிடித்துள்ளனர்.

மேலும், இந்தியாவின் நகர பயங்கர வாதத்தில் இது ஒரு புதிய அத்தியாய மாகவும் காணப்படுகின்றது.

இதுவரை காலமும் சந்தைகளிலும் புகையிரதங்களிலும் வெடித்த குண்டு களினால் கொல்லப்பட்டவர்கள் மத்திய தர வர்க்கத்தினர், தொழிலாளர்கள்.

எனினும், இம்முறை தீவிரவாதிகள் தமது தாக்குதல்களை இந்தியாவின் உயர்தர வர்க்கத்தினர் மற்றும் மேற்குல கத்தினர் மத்தியில் மேற்கொண்டுள்ளனர்.

மும்பை ஹோட்டல்களில் தீவிரவாதி கள் அமெரிக்க, பிரிட்டன் பிரஜைகளை தேடினார்கள் என வெளியான தகவல்கள் இந்தத் தாக்குதல்களை மேற்கொண்ட வர்கள் இந்தியாவில் முஸ்லிம்களுக்கு எதிரான பாரபட்சம் குறித்து அதிகம் அக்கறை கொண்டிருக்கவில்லையோ என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது.

மேலும் தாக்குதல் மேற்கொள்ளப் பட்ட விதம் இத்தகைய தாக்குதல்கள் மூலம் உலகின் கவனத்தை ஆகக் கூடிய ளவுக்கு ஈர்ப்பதையும் நோக்கமாக கொண்டிருந்ததை புலப்படுத்தியுள்ளது.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசூதிய சேமிப்புத் திட்டத்தில் தரம் 5 மாணவனுக்கு அதிர்ஷ்டம்

மந்திகை,டிசெ.7

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியின் பரிசூதிய சேமிப்புத் திட்ட அதிர்ஷ்டம் பார்க்கும் நிகழ்வில் முதலாம் பரிசான 50ஆயிரம் ரூபா தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவனொருவனுக்குக் கிடைத்துள்ளது.

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கல்விச் சாதனையாளர்கள் கௌரவிப்புக்காக பலேநாக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வருகை தந்திருந்த அல்வாயைச் சேர்ந்த ரமணன் தவயோகம் என்பவருக்கு இந்த அதிர்ஷ்டம் கிடைத்தது. இந்த விழாவிலேயே சங்கக் கிராமிய வங்கியின் பரிசூதிய சேமிப்புத் திட்ட அதிர்ஷ்டம் பார்க்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

துன்னாலையைச் சேர்ந்த வி.கேதீஸ்வரன் இரண்டாம் பரிசுக்கான 25ஆயிரம் ரூபாவைப் பெற்றார். புலோலியைச் சேர்ந்த எஸ்.இளமதி மூன்றாம் பரிசுக்கான 10ஆயிரம் ரூபாவைப் பெற்றுக் கொண்டார். தலா ஆயிரம் ரூபா கொண்ட 15 ஆறுதல் பரிசுகளும் வழங்கப்பட்டன.

(202-218)


**விற்பனைக்கு** சண்டிலிப்பாய் லீலா பேக்கரிக்கு நேர்முன் ஒழுங்கையில் (Driver) சின்னப்புவின் காணியிலுள்ள முதிர்ந்த பனை மரங்கள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.நாகராசா, சின்னப்பிள்ளையார் ஒழுங்கை. V.M.வீதி, பருத்தித்துறை.

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ, 1974 ஆம் ஆண்டு, மார்கழியில் பிறந்த, நட்சத்திரம் பூசம், கிரக பாவம் 8 1/4, தற்போது லண்டனில் Computer Science கல்வி கற்று பட்டம் பெற்ற மணமகனுக்கு, லண்டனில் உயர் கல்வி கற்பதற்கு அனுமதி பெற்று செல்லக் கூடிய, கிரக பாவம் குறைந்த மணமகள் தேவை. தென்மராட்சி விரும்பத்தக்கது.
தொடர்பு 060 221 2961

**இதோ!**
சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!
தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்.
**சித்தாரா**
**அதிமதுரம் ஆடாதோடை சிரப்**
யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No: 6382) AR/PR/NO: 228
யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(குறிப்பு: சத்திரச்சந்திக்கு அண்மையில்)
(அ/555276)

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# திருமண அழைப்பு

நிகழும் மங்களகரமான சர்வதாரி வருடம் கார்த்திகைத் திங்கள் 23ஆம் நாள் (08.12.2008) திங்கட்கிழமை பிற்பகல் 12.03 மணி முதல் 12.33 மணிவரையுள்ள கும்ப லக்கினமும் ரேவதி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

திரு.திருமதி அம்பிகைபாலன் ஜெகதாம்பிகை
தம்பதியரின் செல்வப் புதல்வன்
திருவளர் செல்வன் **சசீந்திரன்**
(கஜானி ஜுவலறி, பருத்தித்துறை)
அவர்களுக்கும்

திரு.திருமதி சுந்தரலிங்கம் பாக்கியலஷ்சுமி
தம்பதியரின் கனிஷ்ட புத்திரி
திருவளர் செல்வி
**உஷாநந்தினி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் (நாச்சிமார் கோயில்) திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்துசிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே நாடும்:

திரு.திருமதி அம்பிகைபாலன் குடும்பத்தினர்,
இல.11, கன்னார லேன், நல்லூர்,
யாழ்ப்பாணம்.
திரு.திருமதி சுரேஸ்குமார் றாபி குடும்பத்தினர்,
திரு.திருமதி பாஸ்கரன் கலா குடும்பத்தினர்,
திரு.திருமதி பரமேஸ்வரன் ஜெயந்தி குடும்பத்தினர்.

(இரு வீட்டார் அழைப்பு)

திரு.திருமதி சுந்தரலிங்கம் குடும்பத்தினர்,
பூநாறி லேன், கொக்குவில் மேற்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
திரு.திருமதி பிரபாகரன் புவனேஸ்வரி குடும்பத்தினர்,
திரு.திருமதி சுதாகரன் உதயகுமாரி குடும்பத்தினர்,
திரு.திருமதி தயாகரன் சுபாசினி குடும்பத்தினர்.
திரு.திருமதி முரளிதரன் நிஷாந்தினி குடும்பத்தினர்.

# Vacancy

*Schweizerische Eidgenossenschaft,*
*Confederatior Suisse, Confederazione Svizzera,*
*Confederaziun svizra.*

SDC-Swiss Agency for Development and Cooperation is a government organization of the Swiss Ministry of Foreign Affairs. We are looking for a suitable candidate for the following position in Field office Jaffna.

## ACCOUNTANT/ ADMINISTRATOR

The ideal candidate should have completed atleast intermediate level in CIMA or similar course in the field of accounts with minimum three years experience in similar position in an INGO/ NGO

**Main duties and responsibilities:**

- Managing the daily and monthly financial and administrative tasks
- Submitting monthly financial statements and fund transfer request to head office
- Maintaining and updating computerized database systems including budget preparation, pay roll and project payment.
- Managining the daily and monthly human resources tasks
- Updating office inventory

**Other requirements**

- High level of fluency in both English and Tamil
- Strong organisational skills, ability to interact effectively with international and national personnel
- Excellent computer skills, including expertise in MS Word, Excel and Out look
- Previous working experience with accounting softwares
- Excellent people interaction skills and a demonstrated ability to support a team effectively
- Ability to work independantly and as part of a team

Appointment will be one year contract, renewable
Attractive and negotiable salary with medical benifits awaits for the right candidate.

***Please send your application with the covering letter and expected salary within 10 days to: Swiss Agency for Development and Cooperation***

521/11, Point Pedro Road, Nallur, Jaffna.

*Only short listed candidates will be contacted*



"மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட நான், ஒரு வர்த்தகவியல் பட்டதாரி. செலிங்கோ லை.'.பில் சேர்ந்துகொண்ட பின்பே துரிதமாக வாழ்க்கையில் முன்னேறினேன். 2002ஆம் ஆண்டில் விற்பனை ஆலேசகராக இணைந்த நான், குறுகிய காலத்திற்குள் முன்னேறி இப்பொழுது மட்டக்களப்புக் கிளையில் பதில் உதவி விற்பனை முகாமையாளர் பதவியை வகிக்கின்றேன். என்னைப் போல வாழ்க்கையில் முன்னேற உங்களுக்கும் விருப்பமா?"

ரி.எம்.எஸ். சுசிலன்
பதில் உதவி விற்பனை முகாமையாளர் மட்டக்களப்பு கிளை

# வாழ்வில் வெற்றியீட்ட எங்களுடன் இணையுங்கள்

## விற்பனை மேற்பார்வையாளர்கள் / விற்பனை ஆலோசகர்கள்

விற்பனை பணிகளில் அனுபவம் வாய்ந்த, உற்சாகமான விற்பனை மேற்பார்வையாளர்களும் விற்பனை ஆலோசகர்களும் எமக்குத் தேவைப்படுகின்றனர். நீங்கள் 45 வயதிற்கு உட்பட்டவராகவும் சிறந்த தலைமைத்துவ ஆற்றல், தொடர்பாடல் திறமை, தகவல் தொழில்நுட்பத் தேர்ச்சி என்பவற்றைக் கொண்டவராகவும் இருந்தால், எம்முடன் இணைந்து வாழ்க்கையில் வெற்றியீட்டுங்கள். உங்கள் திறமைக்கேற்ப விசேட பயிற்சி, தலைமைத்துவ ஊக்குவிப்பு மற்றும் வெளிநாட்டுப் பயண வாய்ப்புக்கள் உங்களுக்கு வழங்கப்படும். நீங்கள் அதிகூடிய மாதாந்த வருமானத்தைச் சம்பாதிப்பதோடு வேறு பல அனுகூலங்களையும் பெறுவீர்கள்.

**உங்கள் விண்ணப்பப் படிவத்தை இன்றே செலிங்கோ லை.'.ப் கிளையொன்றில் பெறுங்கள்.**

*விண்ணப்பத்தைத் தபாலில் அனுப்பும்போது, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விற்பனை அணி" என்று குறிப்பிடவும். ஈ-மெயில் மூலம் அனுப்புவதாயின், Subjectஇல் Sales Force என்று குறிப்பிடவும்.*

"நான் 19 வருடங்களுக்கு முன் செலிங்கோ காப்புறுதி நிறுவனத்தில் விற்பனை ஆலோசகராகவே இணைந்தேன். இதிலிருந்து படிப்படியாக முன்னேறி, இன்று வியாபார அபிவிருத்தி முகாமையாளராக உயர்ந்துள்ளேன். வாழ்க்கையில் முன்னேற விரும்புவோருக்கு செலிங்கோ காப்புறுதி நிறுவனம் ஒரு சிறந்த களமாகும். நீங்களும் இதில் இணைந்து முன்னேறுங்கள்."

T. விஜயநாத்
வியாபார அபிவிருத்தி முகாமையாளர்



செலிங்கோ லை.:.ப்

செலிங்கோ இன்சுவரன்ஸ் பிஎல்சி

*சிறியதோ பெரியதோ எதையுமே காப்பது - செலிங்கோ*

134, காலி வீதி, கொழும்பு 3. கம்பனிப் பதிவு இலக்கம் PQ 24 தொலைபேசி: (011) 2 461 461 ஈ-மெயில்: jobs@ceylife.lk இணையத்தளம்: www.ceylincolife.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மோட்டார் சைக்கிளில் வலம்வர அணித்தலைவர் டோனிக்குத் தடை



இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் டோனி மோட்டார் சைக்கிள் பிரியர். விதம் விதமான மோட்டார் சைக்கிள்களில் வலம் வருவது அவருக்குப் பிடிக்கும். கடந்த மார்ச், ஏப்ரல் மாதம் ஐ.பி.எல்.'20 ருவென்ரி' போட்டி சென்னையில் நடந்தது.

அப்போது சென்னை 'சூப்பர் கிங்ஸ்' அணித்தலைவர் டோனி 30 லட்சம் ரூபா மதிப்புள்ள அதிக என்ஜின் திறன் கொண்ட 'கவாசாகி' மோட்டார் சைக்கிளில் சென்னை நகரில் வலம் வந்தார்.

இந்தியா-இங்கிலாந்து இடையேயான முதல் டெஸ்ட் சென்னையில் 11 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் போட்டியின்போது டோனி சென்னை நகரில் மோட்டார் சைக்கிளில் வரத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புக் கருதி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் பாதுகாப்பு நிபுணர் ரெக்டிகாசன் சென்னையில் பொலிஸ் ஆணையாளர் ராதாகிருஷ்ணனை சந்தித்து ஆலோசனை நடத்தினார். இதைத் தொடர்ந்து இரு அணி வீரர்களுக்கும், மிக முக்கிய பிரமுகர்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு வழங்குவது என்று பொலிஸார் முடிவு செய்துள்ளனர்.

வீரர்கள் முழுக்க முழுக்கப் பொலிஸ் பாதுகாப்பு வளையத்தில் இருப்பார்கள். வீரர்கள் ஹோட்டலில் இருந்து விளையாட்டு மைதானத்துக்கு மட்டும் அழைத்துச் செல்லப்படுவார்கள். வேறு எந்த நிகழ்ச்சிகளிலும் வீரர்கள் பங்கேற்க அனுமதி வழங்கப்படவில்லை. கொமாண்டோ படை பாதுகாப்பில் வீரர்கள் இருப்பார்கள்.★

# நெருக்கடிக்குள் அப்துர் ரசாக்



கிரிக்கெட் அணியின் இடது கை சுழற்பந்து வீச்சாளர் அப்துர் ரசாக் பந்து வீசும் முறை விதிகளுக்கு உட்பட்டதாயில்லை என்பதால் சர்வதேச கிரிக்கெட் பேரவை அவரை விளையாடத் தடை விதித்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் மேற்கொண்ட பரிசோதனைகளின் அடிப்படையில் ரசாக்கின் பந்து வீச்சு ஐ.சி.சி. நிர்ணயித்த விதிகளை மீறுவதாயிருப்பது தெரிய வந்துள்ளதாக ஐ.சி.சி. கூறியுள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் நியூசிலாந்திற்கு கிரிக்கெட் பயணம் மேற்கொண்டிருந்தபோது நடுவர்கள் டேரல் ஹார்ப்பர், அசோக டி சில்வா ஆகியோர் அப்துர் ரசாக் பந்து வீச்சு குறித்து புகார் தெரிவித்தனர்.

தற்போது சர்வதேசக் கிரிக்கெட்டில் விளையாடத்தடை விதிக்கப்பட்ட இவர் மேல்முறை யீடு செய்ய வாய்ப்பிருக்கிறது. இந்த மேல்முறை யீட்டு மனுவும் தோல்வியில் முடிந்தால், அவர் தன் பந்து வீச்சு முறையை திருத்திக் கொண்டு மீண்டும் பரிசோதனைக்குக் கோரலாம். 2004 ஆம் ஆண்டு இவர் மீது இதே குற்றச்சாட்டு எழுந்து தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

# டெஸ்ட் அணியில் மீண்டும் யுவராஜ்



இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியில் யுவராஜ் சிங் மீண்டும் இடம்பிடித்துள்ளார்.

அண்மைக்காலமாக இந்திய டெஸ்ட் அணியில் இடம்பிடிக்கத் தவித்து வந்த யுவராஜ் சிங் இங்கிலாந்துடனான ஒருநாள் தொடரில் தொடர்ந்து இரண்டு சதங்களைப் பெற்றதை அடுத்தே டெஸ்ட் அணியில் இடம்பிடித்துள்ளார். அவர் அண்மையில் ஓய்வுபெற்ற கங்குலியின் இடத்தை நிரப்புவார் என இந்திய தேர்வுக்குழு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இது தவிர அறிவிக்கப்பட்ட 15 பேர்கொண்ட இந்திய அணியில் சுழல்பந்து வீச்சாளர் பிரக்கியான் ஒஜாவுக்கு மீண்டும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. ஒஜா அண்மையில் நடந்த இலங்கையுடனான டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியில் இணைக்கப்பட்டிருந்தாலும் அவர் இதுவரை ஒரு டெஸ்டில்கூட விளையாடியதில்லை. எனினும் இடதுகை வேகப்பந்து வீச்சாளர் ஆர்.பி.சிங்கிற்கு அணியில் இடம் கிடைக்கவில்லை. இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி வரும் 11 ஆம் திகதி சென்னையில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அணி விவரம்

மஹேந்திர சிங் டோனி (தலைவர் வி.கா.), விரேந்தர் ஷேவாக், கௌதம் காம்பீர், ராகுல் டிராவிட், சச்சின் டெண்டுல்கர், வி.வி.எஸ். லக்ஷ்மன், எஸ்.பத்ரினாத், ஹர்பஜன் சிங், அமித் மிஷ்ரா, சஹீர்கான், இஷான்ட் ஷர்மா, முனாப் படேல், எம்.விஜே, யுவராஜ் சிங், பிரக்யான் ஒஜா.★

# 2011 உலகக் கிண்ணக் கிரிக்கெட் இந்தியாவில் நடைபெறுமா?



[illegible]பையில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து கிரிக்கெட் வருமானம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் 2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டி இந்தியத் துணைக் கண்டத்தில் நடக்குமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

4-ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் உலகக் கிண்ணம் கடைசியாக 2007 ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளின் நடந்தது. 2011 ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ணத்தை இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகள் இணைந்து நடத்துகின்றன.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) கூட்டம் அடுத்த வாரம் தென்னாபிரிக்காவில் நடக்கிறது. அப்போது உலகக்கிண் ணத்தை இந்தியாவில் நடத்த முடியுமா என விவாதிக்கப்படும் என்று 'டெய்லி ரெலிகிராப்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை ஆஸ்திரேலியா, நியூசிலாந்துக்கு மாற்றுவது குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் என்று தெரிகிறது.

2015 ஆம் ஆண்டுக்கான உலகக்கிண்ணப் போட்டி ஆஸ்திரேலியா, நியூசிலாந்தில் நடத்த ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு இருந்தது.

மும்பை தாக்குதல் சம்பவம் எதிரொலியாக இந்தியாவுக்குப் பதிலாக அங்கு நடத்த முடிவு மேற்கொள்ளப்படலாம். ஐ.சி.சி. கூட்டத்தில் இந்தியாவில் உலகக்கிண்ணத்தை நடத்த ஆஸ்திரேலியா எதிர்ப்புத் தெரிவிக்கும்.

# ரொனால்டோவிற்கு தங்கப்பந்து விருது





ஆண்டின் சிறந்த ஐரோப்பிய கால்பந்து வீரருக்கான தங்கப்பந்து விருது போர்த்துக்கல் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோவிற்குக் கிடைத்துள்ளது. இங்கிலாந்து கால்பந்து கழகமான மன்செஸ்டர் யுனைடெட் அணிக்கு விளையாடும் வீரர்களில் 4 ஆவது வீரராக ரொனால்டோ இந்தப் பரிசைத் தட்டிச் சென்றுள்ளார்.

பிரான்ஸ் கால்பந்து பத்திரிகை வெளியிட்டுள்ள வாக்கெடுப்பு முடிவுகளில் பார்சிலோனா வீரர் லியோனல் மெஸி இரண்டாம் இடத்திலும் லிவர்பூல் வீரர் டோரஸ் 3 ஆம் இடத்திலும் உள்ளனர்.

ரொனால்ட்டோ தொடர்ந்து இரண்டாவது முறையாக இங்கிலாந்தின் சிறந்த கால்பந்து வீரராகத் தேர்வு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பருவகாலத்தில் அவர் 42 கோல்களை அடித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# இலவச மருத்துவ ஆலோசனை

# எடை குறைவும் அதிகரிக்க உணவுமுறைகளும்

# கண் அழுத்த நோயை நேரகாலத்துடன் கண்டறிந்து சிகிச்சை பெறுவது அவசியம்

**கேள்வி:** பெண். வயது 18. முகத்தில் பருக்களால் அவதிப்படுகின்றேன். எத்தனையோ மருந்துகள் உபயோகித்தும் பலனில்லை. பரிகாரம் கூறவும்.

**பதில்:** இந்த வயதில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பருக்கள் வருவது இயற்கையானதே. வளர் இளம்பராயம் என்கின்ற இந்த பருவநிலையில் உடலில் சுரக்கப்படுகின்ற ஹோர்மோன்களின் விளைவுகளால் இந்தப் பருக்கள் எற்படுகின்றன. இந்த ஹோர்மோன்கள் முகத்தின் சருமத்தில் காணப்படும் Sebaceous Glands என்கின்ற சுரப்புகளின் தன்மையை மாற்றுவதால் சுரப்புகள் இலகுவில் வெளியேறாமல் சுரப்புகளின் வாசல் அடைபட்டு பருக்களாக மாறுகின்றன. முகத்தை அடிக்கடி கழுவி சுரப்புகளின் வெளியேற்றத்துக்கு உதவுவோமானால் பருக்கள் குறையும். அதேவேளையில் பருக்கள் ஒருசிலருக்கு அதிகமாக ஏற்படுவதுண்டு. இதற்குக் காரணம் ஹோர்மோன்களின் கோளாறுகளோடு அதிகளவு கொழுப்பு சம்பந்தமான, சர்க்கரைச் சத்து அதிகமான உணவுகளை உண்பதும் ஆகும். பருக்களை நசித்து அருகிலுள்ள சுரப்புகளில் தொற்றுகள் ஏற்படுத்துவதும் முக்கியமான காரணங்கள். இப்படி அதிகமாக பருக்கள் ஏற்படும்போது - பருக்களில் சீழ்கட்டி தொந்தரவு தரும்போது - Antibiotics போன்ற மருந்துகள் இவற்றைக் கட்டுப் படுத்த உபயோகப்படுத்தப்படுகின்றன. இவை பூச்சுகளாகவும் மாத்திரைகளாகவும் உபயோகப்படுத்தப்படுகின்றன.

***

**கேள்வி:** பெண் வயது 16. எனது நிறை 30 கிலோகிராம். நிறை அதிகரிக்க வழி கூறுங்கள். எனக்கு அடிக்கடி கண்கள் அரிக்கின்றன. அடிக்கடி தடுமல் வருகின்றது. பரிகாரம் கூறவும்.

இலவச மருத்துவ ஆலோசனை தொடர்கள்
நீங்களும் கேள்விகளை அனுப்பி மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம்.
நீண்ட கால அனுபவம் உள்ள பிரபல டாக்டரும் விஞ்ஞானத்துறை எழுத்தாளருமான
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம் பதில் தருகிறார்.
இலவச மருத்துவ ஆலோசனை
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**பதில்:** உங்கள் வயதுக்கு 30 கிலோகிராம் நிறை சரியா என்று கூறுவது கஷ்டம். நிறைக்கும் உயரத்துக்கும் தான் தொடர் புண்டு. பொதுவாக 18 வயதின் பின்னர் உங்கள் உயரத்தை சென்ரிமீட்டர் அளவில் அளவிட்டு அதிலிருந்து 100 ஐக் கழிக்க வருவதுதான் கிட்டத்தட்ட இருக்கவேண்டிய நிறை. எனவே, உங்கள் உயரம் தெரியாமல் உங்கள் நிறைபற்றி அபிப்பிராயம் கூறமுடியாது.

எனினும், உங்கள் நிறை, உங்கள் வயதை ஒத்தோருக்குக் குறைவானதே. நிறையை அதிகரிக்க சில உணவுமுறைகளை கைக் கொள்ளவேண்டும். கலோரிகள் அதிகம் உள்ள உணவுகளைச் சேர்க்கவேண்டும். அதற்கு முன்னர் உங்கள் நிறைகுறைவுக்கு நோய் சம்பந்தப்பட்ட காரணங்கள் ஏதாவது உண்டா என்பது வைத்தியர்களால் அறியப்படவேண்டும். அப்படி எதுவித காரணங்களும் காணப்படவில்லை எனில், நான் முன்னர் கூறியவிதமாக உணவுமுறைகளில் மாற்றம் கொண்டு வரப்படவேண்டும்.

கலோரிகள் அதிகமாக உள்ள பொருள்களில் கொழுப்பு உணவுகள் - உதாரணமாக பட்டர், நெய் போன்றவை - நிறைய கலோரிகள் தரும். அதுபோல் மாச்சத்துள்ள உணவுகளும் கலோரிகளைத் தரும். அதேவேளை தசைகளின் வளர்ச்சிக்கு புரத உணவுகளான இறைச்சி, பருப்பு, முட்டை என்பவைகளை சேர்த்துக்கொள்வது அவசியம்.

இதுதவிர தினமும் அரைமணிநேரமாவது உடற்பயிற்சி தேவை. தேவையான அளவு தூக்கம் புதிய கலங்கள் விரைவாக வளர உதவும். எதற்கும் Nutrionist என்கின்ற உணவியல் நிபுணரின் ஆலோசனையும் உங்கள் விஷயத்தில் உதவும்.

கண்கள் அரிப்பது, தடுமல் அடிக்கடி ஏற்படுவது என்பவை உடல் பலவீனத்தாலும் ஏற்படலாம். உடலின் எதிர்ப்புச் சக்தி குறைவதால் தடுமல், ஒவ்வாமை போன்ற நோய்கள் அடிக்கடி ஏற்படலாம். மேலும் கண்கள் அரிப்பதற்கு பார்வைக் கோளாறும் காரணமாயிருக்கலாம். கண் வைத்தியரிடம் ஆலோசனை பெறவும்.

***

**கேள்வி:** பெண் வயது 38. திருமணமாகி இரண்டு குழந்தைகள் உள்ளன. சிறுநீர் கழிக்கும்போது எரிவு, கடுப்பு, இரத்தக்கசிவு ஏற்படுகின்றது. பரிகாரம் கூறவும்.

**பதில்:** உங்களுக்கு சிறுநீரக, சிறுநீர்ப்பை சம்பந்தமான கோளாறுகள் இருக்கலாம். சிறுநீரகத்தில் கற்கள், சிறுநீரகத்தில் வளர்ச்சிகள் என்பன இப்படியான குணங்குறிகளைத் தரும். அதுபோல சிறுநீர்ப்பையில் (Bladder) கற்கள் மற்றும் Pappiloma போன்ற வளர்ச்சிகளும் இதேநிலையைத் தோற்றுவிக்கும். அத்துடன், சிறுநீரகத் தொற்று, சிறுநீர்ப்பைத் தொற்று (Infections) என்பவற்றாலும் இரத்தக்கசிவு, எரிவு, கடுப்பு ஏற்ப[illegible] சிறுநீர்ப் பரி[illegible] செய்யப்படவேண்டும். இப்பரிசோதனையில் சிறுநீரில் சிறிய கற்கள் - Oxalate என்கின்ற கனிமவகை சேர்ந்த கற்கள் - இருப்பதைக் கண்டறியலாம். அத்துடன், தொற்றுகளையும் கண்டறியமுடியும். தொற்றுகள் இருந்தால் அதற்குரிய மருந்தைத் தேர்ந்தெடுப்பதற்கு Urine for Culture and Antibiotics Sensitivity என்கின்ற பரிசோதனை செய்யப்பட வேண்டும். இப்பரிசோதனை மூலம் எந்தரக தொற்று ஏற்பட்டுள்ளது, அதற்கு தகுந்த மருந்து எது என்பதைக் கண்டறிந்து குணமாக்கலாம்.

இந்த இரண்டு பரிசோதனைகளிலும் கோளாறு எதுவும் காணப்படாவிடின் Scan பரிசோதனை, எக்ஸ் கதிர் பரிசோதனை என்பவை செய்யப்பட வேண்டும். எனவே, தகுந்த சத்திர சிகிச்சை வைத்தியர் அல்லது விசேட சிறுநீரக வைத்திய நிபுணர் Urogenital Surgeon அல்லது Urologist என்பவரின் ஆலோசனை பெறுவது அவசியம்.

***

**கேள்வி:** பெண் வயது 19. தொண்டையில் சளி இருப்பது போன்று அரிப்பாக இருக்கின்றது. ஆனால், இருமல் இல்லை. தொண்டையில் இருக்கும் சளி வெளியில் வருவதும் இல்லை. காலையில் எழும்பும்போது தொண்டை வரண்டு வலி இருக்கின்றது. இதற்குக் காரணம் என்ன? பரிகாரம் கூறவும்.

**பதில்:** நீங்கள் நேராகவே Ceiling Fan னின் கீழ் தூங்குபவரா? இப்படி மின்விசிறியின் கீழ் தூங்குபவர்களின் அறையில் தூசி துகள்கள் இருப்பின் அல்லது வீதிக்கருகில் உங்கள் படுக்கை அறை இருப்பின் மின்விசிறி இயக்கம் காரண மாக தூசி துணிக்கைகள் சுழன்று உயரத் திற்கு எடுத்துச்செல்லப்பட்டு திரும்பவும் நிலத்தை நோக்கி விசிறியடிக்கப்படுகின் றன. இப்படி விசிறியடிக்கப்படும் தூசி துணிக்கைகள் நேரே கீழ் படுத்திருப்பவரால் சுவாசிக்கப்பட்டு தொண்டையில், நாசியில் அழற்சி ஏற்படுகின்றது. மின்விசிறியின் இந்த இயக்கத்தை அறையில் உள்ள கதிரை, மேசைகளில் ஒரே இரவில் தூசிபடிந்திருப்பதன் மூலம் புரிந்துகொள்ளலாம். இது தொண்டைவலி ஏற்படுவதற்கு ஒரு காரணம்.

[illegible] தொண்டையில் Adenoids என்ற [illegible]களின் வளர்ச்சி, பீனிசம் என்கின்ற Sinusitis ஆகியவை நோய் காரணமாக படுத்திருக்கும்போது பின்நாசி வழியாக சுரப்புகள் கசிந்து தொண்டை, சுவாசக்குழாய்களினுள் சென்று அழற்சியை உருவாக்குகின்றன. இதனை Post Nasal Dropping என்று கூறுவார்கள். இதனால், எந்தநேரமும் தொண்டைக்குள் சளி இருப்பது போன்ற உணர்வு இருக்கும். எனவே, நீங்கள் முதலில் ENT Surgeon எனப்படும் காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணரின் ஆலோசனை பெற்று காரணத்தைக் கண்டறிவது அவசியம்.

***

**கேள்வி:** ஆண். வயது 65. எனக்கு கண் அழுத்த நோயான குளுகோமா (Glaucoma) ஏற்பட்டு பலதடவைகள் சிறுசிறு சத்திர சிகிச்சைகள் செய்யப்பட்டன. ஆனால், எனது பார்வை குறைந்து வருகின்றது. டாக்டர்கள் கண் அழுத்த நோயினால் கண்நரம்புகள் பழுதாகிவிட்டன என்று கூறினார்கள். பரிகாரம் கூறவும்.

**பதில்:** குளுகோமா நோயினால் கண் நரம்புகள் பாதிக்கப்பட்டால் பார்வை திரும்பிவர எதுவும் செய்யமுடியாது. இதனால்தான் கண் அழுத்த நோயை நேரகாலத்தோடு கண்டறிந்து சிகிச்சை செய்வதுதான் கண் பார்வையை பாதுகாக்க ஒரே ஒரு வழி. உங்களது நிலையில் தற்பொழுது பார்வை திரும்பிவராது. ஆனால், ஓர் அறிவுரையை இங்கு தெரிவிக்க விரும்புகிறேன். குளுக்கோமா ஒருவிதத்தில் பரம்பரை நோய். குளுக்கோமா நோயாளியின் இரத்த சம்பந்த உறவுகள் அவரது குழந்தைகள், சகோதரங்கள் என்போர் குளுக்கோமா நோய்க்கான பரிசோதனைகளை எடுக்கவேண்டும். முக்கியமாக 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் இதனை நிச்சயம் மேற்கொள்ளவேண்டும்.

***

**கேள்வி:** ஆண். வயது 32. மூன்று வருடத்திற்கு முன்னர் மோட்டார் சைக்கிள் விபத்தில் வலதுகையின் தொழிற்பாடுகளை இழந்துவிட்டேன். ஆனால், அந்தக் கை மிளகாய் அரைத்துப் பூசியது போல் எந்தநேரமும் எரிவாக இருக்கின்றது. கடந்த மூன்று வருடங்களாக இந்த எரிவால் கஷ்டப்படுகின்றேன். டாக்டர்கள் வலிநீக்கும் மாத்திரைகளை தருகின்றார்கள். ஆனால், அவற்றால் எந்தவித பலனும் இல்லை. இடதுகையின் உதவியில்லாமல் வலதுகையை உயர்த்தவோ, வேறுபணி செய்யவோ முடியவில்லை. பரிகாரம் கூறவும்.

**பதில்:** நீங்கள் தந்த குணங்குறிகளை வைத்து பார்க்குமிடத்து விபத்தின்போது Brachial Plexu என்ற கைகளுக்கு செல்லும் நரம்புக்கூட்டம் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்பது தெளிவாகின்றது. இந்த நரம்புக்கூட்டத்திற்கு ஏற்படும் பாதிப்பால் கை பலவீனமடைந்து 'பாரிசவாத' தன்மை (Paralysis) பெறுகின்றது. இதனால், அதன் இயக்கம் முற்றாக நடைபெறாமல் போகின்றது. அத்துடன், விரல்கள் செயல் இழக்கின்றன. தொடுகை உணர்வு, வலி உணர்வு, வெப்ப உணர்வுகள் அறியப்படும் திறன் அற்றுப் போகின்றது. மேலும் இதனால், Causalgia என்ற எரிவுநிலை (உங்களுக்கு ஏற்பட்டது போல்) உருவாகின்றது. ஊசியால் குத்துவது போன்ற வலி உணர்வு, எரிவு உணர்வு என்பன இந்த Causalgiaவின் பிரதிபலிப்புகள்.

ஒருசிலருக்கு இந்த உணர்வு தாங்கக் கூடிய நிலைக்கும் அதிகமாக இருப்பதால், பயனில்லாத அந்தக் கையை வெட்டிவிட்டால் என்ன என்றுகூடத் தோன்றும். வெட்டும்படி சத்திரசிகிச்சை நிபுணர்களை கையெடுத்துக் கும்பிட்டு வேண்டுவர். ஆனால், அப்படிச் செய்தாலும் அது உதவப்போவதில்லை. ஏனென்றால், இந்த எரிவு உணர்வுகளுக்கு காரணம் பயனற்ற கையில் இல்லை. அதற்குமேல் நரம்பு உருவாகும் இடத்தில்தான் காரணம் இருப்பதால் கையை வெட்டினாலும் கையிருந்த இடத்தில் இந்த வலி உணர்வுகள் இருக்கத் தான் செய்யும். இதனைத்தான் Phantom Limb அதாவது, 'மாய கை' உணர்வு என்பார்கள். உங்களுக்கு விபத்து நேர்ந்து 3 வருடங் களுக்கு மேலாகிவிட்டதால் எதுவித சத்திர சிகிச்சையும் பலன்தரமாட்டாது என்பது எனது அபிப்பிராயம். எதற்கும் ஒரு நரம்பி யல் நிபுணரின் ஆலோசனை பெறுவது நல்லது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதியதும் மழையே யாச்சு!

விதியே விதியே தமிழர் சாதியை
என்செய நினைத்தாய் என்றனன் பாரதி
ஆதி திராவிடர் வழிவழி வந்த நாம்
அன்பொடு அறநெறி கொண்டு வாழ்ந்தவர்
தீதிலா ஒழுக்கமும் திறமுடை பண்பெலாம்
திக்கெட்டும் பரப்பி வாழ்ந்தது எம்மினம்
ஓதியே பற்பல ஓதரும் பாக்களை
ஒப்பரும் பக்தியோடு ஓதித் திளைத்தனர்
ஆதியாம் பரம்பொருள் ஐயனை வேண்டியே
அவனடி பரவியே வாழ்ந்தது தமிழினம்
கதி நீயெனக் கண்நீர் சொரிந்தவர்
கண்ணீர் மல்கிட வைத்தனை விதியே!

★★★★★★

இடியதை இடித்து நீ எச்சரித்திலை
இருள் கவிந்திட இடி இடித்திலை
கொடிய மழையதைக் கொட்டிட முன்னர்
காரிருள் கிழித்து மின்னினை இல்லை
குடிமக்களைக் கொன்றிட எண்ணியோ
கூதல் காற்றாய் குலுங்கிட வைத்தனை
விடிய முன் வெள்ளம் வீறிட் டெழுந்து
வீடு வாசலை நிறைத்தது எங்ஙனம்?
குடிசைகள் சாய்ந்து குழந்தைகள் அலற
கடிய வெள்ளம் கொன்றது பலரை
நாடியே கோவிலை நண்ணிட மக்கள்
நல்லைக் கந்தனை சூழ்ந்தது வெள்ளம்

★★★★★★

பற்பல பெருமரம் பாறியே வீழ்ந்தது
பல பல குடிசைகள் மூழ்கின நீரில்
நற்பெரு வயல்களில் விளைந்த நெற்பயிரெலாம்
நாணிக் கோணி நலிந்து வீழ்ந்தன
முற்றிலும் உழைப்பால் முளைத்த இப்பயிர்
முழுவதும் கடலெனும் வெள்ளத்தில் மூழ்கின
பெற்ற பிள்ளை போல் பேணிய வாழைகள்
பேதலித்து சாய்ந்தன குலையுடன்
அற்புதம் இதுவென அக மகிழ்ந்தனை விதியே
ஆவினம் தன்னை அலற ஏன் வைத்தாய்
பற்பல கூட்டினை கட்டிய பறவைகள்
பார்த்தே பதறச் சாய்ந்தன பழ மரம்

★★★★★★

அழித்து எம்மை அடிமை ஆக்கி
அனாதையாக்கி விரட்டி ஓட்ட விட்டனை விதியே!
பழி யென்ன செய்தார் மக்கள்
பகர்ந்திடு விதியே நீயும்
விழி யெல்லாம் கண்ணீர் மல்க
விடிந்தது வெள்ளக் காடாய் மாற
அழிந்தது வடகிழக்கு என்றால்
ஐயனே ஆதுவுன் விருப்பமாச்சோ
பழியெல்லாம் உனக்காம் அன்றி
பைந்தமிழ் இனத்துக் கல்ல
அழித்தொழிப்பது உன்விருப்பே என்றால்
ஆரிடம் இனி நாம் செல்வோம்?

★★★★★★

சாலைகள் பலதை தடுத்தரன் பலர்கட்ட
சரிவர வெள்ளம் ஓடிடவில்லை
சாலவும் சிறந்த மாநகர சபையார்
சரியாய் வடிகால் அமைத்தது மில்லை
காலையும் மாலையும் குப்பை கூளத்தை
களவாய் தெருக்களில் குவித்தனர் மக்கள்
வேலையற்ற வீணர்கள் பொலித்தீன் பையை
வீதிகள் தோறும் வீசி எறிந்தனர்
நலம் பெறு பட்டினம் நமதென எண்ணார்
நாலாபுறமும் வெட்டினர் வீதியை
மலசல கூடக் கழிவதும் கூட
மறைவாய் வீதியில் மறைத்தே எறிந்தனர்
நிலமகள் இவற்றால் நிம்மதி இழந்தே
நலம் பெற என்றே நாடினாள் மழையை

★★★★★★

விதியதே வலியதென்று நீயும்
வித்தகா விளம்பி நின்றால்
துதி செய்து உன்னைப் பாடி நாமும்
தொழுவதில் பயன் தானேது?
அதி உயர் விதியின் மேன்மை
ஆழிப் பேர் அலையே என்றார்
மதிமிகு இளைஞர் இதனைக் கேட்டால்
மதிப்பரோ ஈசா உன்னை
அதிபதி உலகுக் கெல்லாம் என்று
அன்று நாம் படித்த பாடம்
விதியதே வலிய தென்ற பின்னர்
வியக்கவே வைத்தனையோ?



- விகடகவி.



தமிழ் பத்திரிகை உலகில், கோபு என்று பலராலும் அறியப்பட்ட மிக மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம்.கோபாலரத்தினம் ஓர் ஆக்க இலக்கியக்காரருமாவார். ஸ்ரீரங்கன் என்ற புனைபெயரில் பல ஆக்கங்களைத் தந்துள்ள இவர் கிழக் கிலங்கையைப் பூர்வீகமாகவும் யாழ்.பெருமாள்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொண்டவர். வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் வீரகேசரிப் பத்திரிகையில் பத்திரிகையாளராகப் பயிற்சி பெற்று அங்கேயே உதவி ஆசிரியராகவும் பணிபுரிந்தவர். அக்காலத்தில் பல சிறுகதைகளை அப்பத்திரிகையில் எழுதினார். சுதந்திரன் பத்திரிகையிலும் அவரது சிறுகதைகள் வெளிவந்தன.

அறுபதுகளில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஈழநாடு தினசரியில் செய்தி ஆசிரியராகப் பணியாற்றிய வேளையில் எஸ்.எம்.ஜீ., ஊர்சுற்றி ஆகிய புனை பெயர்களில் காத்திரமான அரசியல் விமர்சனங்களையும் விவரணக் கட்டுரைகளையும் வரைந்தவர். பின்னர் அந்தப் பத்திரிகையின் பிரதம ஆசிரியராகப் பதவி வகித்த எஸ்.எம். கோபாலரத்தினம் ஈழமுரசு, ஈழநாதம் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகவும் பிற்காலத்தில் பணி யாற்றினார். "ஈழத்து மண்ணில் இந்தியச் சிறை" என்ற நூலை எழுதிய அவர் தமிழ்ப் பத்திரிகைத் துறையில் ஜாம்பவான்களில் ஒருவராக விளங்கியவர். இவரது 'தறி' என்ற சிறுகதை ஈழநாடுப் பத்திரி கையில் வெளிவந்து அவருக்குப் புகழ் சேர்த்தது.

பத்திரிகைத் துறையில் அவரிடம் பயின்ற பலரும் பின்னர் பிரபல பத்திரிகையாளர்களாக மிளிர்ந்தனர்.

இப்போது தமிழகத்தில் தங்கியுள்ள அவர் தமது முத்து விழாவை அண்மித்துக் கொண்டிருக்கிறார்.

''சுதந்திரன்'' வார இதழின் 24.02.1963 இல் வெளியான அவரது ''நாடற்றவீரன்'' சிறுகதையை இங்கு பிரசுரிக்கின்றோம்.

## சிறுகதை
# நாடற்றவீரன்

ராமசாமி 'நாடற்றவன்'! இது இலங்கை அரசாங்கம் அவனுக்குச் சூட்டியுள்ள பட்டம். அவனுக்கு மட்டும் என்ன? இந்தப் பட்டம் கொடுத்த பத்து லட்சம் பேர்களில் ராமசாமியும் ஒருவன்.

இந்தியாக்காரன். ஊரார் இப்படித்தான் அழைத்தனர்.

ராமசாமிக்கு இந்தியாவைத் தெரியாது.

இந்தியாவைப் பற்றி பத்திரிகைகளில் அவனுக்குத் தெரிந்த படிப்பைக் கொண்டு படித்திருக்கிறான். இந்தியத் தலைவர்களைப் பற்றி மற்றவர்கள் சொன்னதைக் கேட்டிருக்கின்றான்.

''இந்தியா தானப்ப நமது தாய்நாடு. என்னிடை காலத்தில்தான் நான் போக முடியலேன்னாலும் நீ நானாச்சும் நம்ப நாட்டுக்குப் போய்ச் சேர்ந்திடு'' என்று அவன் அப்பா ஐந்து வருடங்களுக்கு முன் மண்டையைப் போடுவதற்கு முன் சொன்னது மட்டும் அவன் நினைவை விட்டு நீங்காமலே இருந்தது!

'தாய்நாடு.'

அவன் மனதில் அடிக் கடித் தோன்றிய ஒரே வார்த்தை!

தனக்குத் தெரியாத நாடு! தனக்கென யாரும் இல்லாத நாடு! இது அவன் மனதில் எப்பொழுதும் குடிகொண்டிருக்கும் கவலை.

ராமசாமி ஒன்றும் தெரியாத சிறுவனல்ல. வயது இருபதைத் தாண்டிவிட்ட இளங்காளை. வெயிலிலும், மழையிலும், பனிக் குளிரிலும் உழைத்து முறுக்கேறிய உடல். நினைத்ததைச் செய்து முடிக்கும் வைராக்கியம் கொண்ட பார்வை.

ராமசாமிக்கு இன்னும் மணமாகவில்லை. அவனுக்கு அந்த எண்ணமுமில்லை!

தந்தை சென்ற ஆறாவது மாதத்திலே தாயும் பிரிந்து சென்ற பின் அவனுக்கு மனதிலிருந்த ஒரே சிந்தனை தாய் நாட்டுக்குப் போக வேண்டுமென்பதுதான்.

தாய்நாடு அவனைப் பொறுத்தவரையில் அவன் பிறந்த இலங்கையல்ல. அவன் சொன்னாலும் அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராகவில்லை. அவன் பிறக்காவிட்டாலும் அவன் பரம்பரையைப் பெற்றெடுத்த - பரதேசிகளாகவிட்ட பொழுதிலும்கூட இந்தியாதான் அவன் தாய்நாடு.

தாய் நாட்டிற்கு எப்படிப் போவது? போய் என்ன செய்வது? யாரிடம் போவது? இத்தனை கேள்விகளும் அவனது மனதில் அடிக்கடி எழுந்த போதிலும் தாய் நாட்டிற்குப் போயே தீர வேண்டும் என்ற உறுதி மட்டும் குறையவில்லை.

'பாரதம் எங்கள் தாய்நாடு. தாய் நாட்டின் மீது சீனர்கள் படையெடுத்து விட்டார்கள். பகைவர்களைத் தாய் நாட்டிலிருந்து விரட்ட நாட்டுப்பற்றுள்ள ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்'. இந்தியத் தலைவர்கள் விடுத்த இந்த அறிக்கை, இந்தியா மீது சீனா படையெடுத்துவிட்டது என்ற செய்தியைக் காட்டிலும், ராமசாமிக்கு தாய் நாட்டு உணர்ச்சியைத் தட்டியெழுப்பிவிட்டது.

தாய்நாட்டைக் காக்கத் தானும் போக வேண்டும் என்ற எண்ணம். நீந்திப் போனால்தான் தாய் நாட்டைக் காக்க முடியும் என்ற நிலைக்கு அவன் வந்துவிட்டான்.

'சீனாக்காரன் இன்னும் போகலியா? நம்ம பயலுக இன்னும் சும்மாதான் இருக்காங்களா?' இது ராமசாமி யாரைக் கண்டாலும் கேட்கும் கேள்வி!

'இந்தியத் துருப்புக்கள் பின்வாங்கி வருகின்றன. சீனர்கள் இந்தியப் பிரதேசத்திற்குள் மேலும் மேலும் முன்னேறுகின்றனர்.' என்ற செய்தியைப் பத்திரிகைகளில் படித்தால் அவன் மனம் நிலை கொள்ளாது தவிக்கும்.

எந்த நேரமும் சீனாக்காரனை இந்திய மண்ணிலிருந்து விரட்டியடிக்க வேண்டும் என்பதுதான் அவனது சிந்தனை. தான் போனால்தான் சீனாக்காரனை விரட்டியடிக்கலாம் என்ற மனப்பிரமை!

தேயிலைக் கொழுந்தைக் கிள்ளும் போதுகூட, 'சீனக்காரனின் தலையை இப்படித்தான் கிள்ளுவேன்' என்று சொல்லிக் கொண்டே இருப்பான். பிரட்டில் கட்டி வெட்டும்போதும் உரம் போடும்போதும் 'சீனாக்காரனை வெட்டிக் குழி தோண்டிப் புதைக்கிறேன்' என்பான்.

தோட்டத்தில் நண்பர்களைப் பார்த்து, 'வாங்கடா சண்டைக்குப் போவோம்' என்று கேட்பான்.

'ராமசாமிக்குப் பைத்தியம் பிடிச்சிட்டுப் போலிருக்கடா' என்று அவன் நண்பர்கள் பேசுமளவிற்கு அவனுக்குத் தாய் நாட்டுப் பற்று வெறியாகிவிட்டது.

'கணக்குப் பிள்ளை ஐயா! எனக்கு இனி இங்க இருக்க சரிப்பட்டு வராதுங்க. என்னை எப்படியாச்சும் ஊருக்கு அனுப்பி வைச்சிட ஏதாச்சும் செஞ்சீங்கண்ணா நீங்கள் நல்லாயிருப்பீங்க.' இப்படிக் கணக்குப் பிள்ளையிடம் கெஞ்சினான்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



# தமிழ் இலக்கியத்தில் இறைவணக்கத்துக்குரிய சிறப்பும் - இயல்பும்

பக்தியுள்ள மங்கை இறைவனை வணங்குகிறாள். தனக்கு அறிவான குழந்தை பிறக்க வேண்டுமென இறைஞ்சுகிறாள். குழந்தை, பள்ளிக்கூடப் பையனாகும் போது, தேர்வுக்காலங்களில் இறை வனைப் பயபக்தியுடன் தொழுகிறான். அவன் தேர்வுத்தாளில் பிள்ளையார் சுழியோ 'ஓம்' என்னும் பிரணவ மந்திரத்தையோ தவறாமல் போடுகிறான். தேர்வில் வெற்றி பெற்று வேலை தேடும் போதும், திருமணத்தின்போதும் கடவுளை மறக்காமல் நினைக்கின்றான். எந்தவொரு மங்கல நிகழ்ச்சி யும் மஞ்சள் பிள்ளையாருடன் தொடங்குகிறது. மனிதன், மரணத்தின் மடியிலிருக்கும்போதும், இறைவனுக்கு அழைப்புக் குரல் கொடுக்கப்படுகிறது.

இவ்வாறு வாழ்வில் பிறப்பிலிருந்து இறப்புவரை மனிதன் இறைவனை வணங்கு கிறான். இந்தநிலை தமிழிலக்கியத்திலும் அமைந்துள்ளது.

தொல்காப்பிய நூற்பா ''வாழ்த்தியல் வகையே நாற்பாவுக்கும் உரித்தே'' (தொல். இளம் 415) எனக் கூறுகிறது. (தொல். பொருள். இளம்105) எங்கும் நிறைந்த கடவுளைத் தனக் கும் பயன்படும் படி முன்னிலையாக்கி வாழ்த்தும் முறை யும் ஏற்பட்டது. தொல்காப்பியப் புறத்திணையியலில் ''பாடாண்பகுதி கைக்கிளைப் புறனே, நாடுங்காலை நாலி ரண்டுடைத்தே' (தொல்.புறத் 25) என்ற நூற் பாவில், எட்டு வகையாகக் கூறப்படும் வாழ்த்தில், கடவுள் வாழ்த்தும் ஒன்றாகக் கருதப்படுகிறது.

கடவுள் வாழ்த்துப் பாடல் ஏன் அமைக்கப்படுகிறது என்னும் வினாவிற்கு அகநானூற்றில் விளக்கம் கிடைக்கிறது. ''இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு அன்பொடு புணர்ந்த ஐந்திணையும் நுதலிய இந்நூல் உலகின் கண் அழிவின்றி நின்று நிலவுதற் பொருட்டும்'' இன்பமாகிய இந்நூல் நுதலிய அகப்பொருளைப் பயின்று அதனை இவ்வுலகத்தே இனிதே துய்த்து வாழ்கின்ற மக்கள் நமக்கு அவ்வின்பத்தைத் தனக்கு இயல்பாக உள்ள பேரருள் காரணமாக உணர்த்தி வருகின்ற கடவுள் உண்மையை உணர்ந்து, அவன் செய்துவரும் நன்றியைப் பேணி


## கடவுள் வாழ்த்துப் பாடலுக்கு அகநானூறு தரும் விளக்கம்

இறைவனைப் பாடும் சிறப்புக் காரணமாக எந்தப்பா வகையினாலாவது அவனைப் பாடலாம் என்ற விதி ஏற்பட்டது போலும். இறை வனை மட்டுமல்லாது முனிவரையும் மற்ற வரையும் வாழ்த்தும் முறையிருந்தமையும் இந்நூற்பா விலிருந்து தெரி கிறது. பின் னர் அந்தணர், ஆனிரை, மழை, முடி யுடை வேந் தர், உலகு என்ப வற்றை வாழ்த்தும்முறை ...யும் ஏற்பட் ...மையையும், தொல்காப்பிய நூற்பா உரையால் உணரமுடிகிறது.

அவன்பால் அன்பு செய்தற் பொருட்டும் இந்நூலின் முடிந்த பயனாய அந்தமில் இன் பத்து அழிவில் வீடு என்னும் பேரின்பப் பெருவாழ்வினை எய்து உய்தற் பொருட்டும் இந்நூற்குப் புறத்துறுப்பாகக் கடவுள் வாழ்த்துப் பாடப்பட்டது'' என்று அகநா னூற்றில் கடவுள் வாழ்த் துப் பாடலின் கீழ் விளக்கம் கூறப்படுகிறது. ''கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன், நற்றாள் தொழாஅ ரெனின்'' என்ற வள்ளுவனின் புரட்சிக்குறளும் மேற் கூறிய கருத்தினை அரண் செய்கிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வயல்வெளி நடுவே பக்தர்களுக்கு அருள் புரிந்து வந்த சுழிபுரம் நெல்லியான் நாகதம்பிரான் ஆலயம், பெரு மழையால் உண்டான வெள்ளத்தில் அநாதையாய் நிற்பதைப் படத்தில் காணலாம். (படமும் தகவலும்: காந்தன்)



"ஆற்றங்கரை மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் வீழும்" என்பது ஔவையின் வரிகள். இப்போது பெய்த கடும் மழையால் ஆலய மரங்கள் பலவும் அடியோடு வீழ்ந்து விட்டன. யாழ்.நாச்சிமார் கோயிலில் கிளைபரப்பி நின்ற மருதமரம் பாறுண்டு கிடப்பதையும் அதை அப்புறப்படுத்தும் முயற்சியில் இளைஞர்களும், படையினரும் ஈடுபட்டிருப்பதையும் இங்கு காணலாம்.
(படமும், தகவலும்: அதிரன்)

# வண்ணப் படங்களின் பதிவுப் பெட்டகம்



கடல் இடம்பெயர்ந்து வந்துவிட்டதோ? என்று பார்ப்போரை எல்லாம் பயங்கொள்ள வைத்த, சண்டிலிப்பாய் ஐந்துகண் மதவடியில் பாய் தோடும் மழை வெள்ளத்தைபே இங்கு காண்கிறீர்கள். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இவ் வீதியால் போக்குவரத்தை மேற்கொண்ட மக்கள், கிளாலிக் கடலில் பயணம் செய்த ஞாபகம் வருவதாகக் கூறிக்கொண்டனர். (படமும் தகவலும்:அதிரன்)




பெரு மழையோடு வந்த புயல் 'நிஷா'வால் மரங்களெல்லாம் மின் கம்பங்கள் மீது சாய, குடாநாடு முழுவதும் மூன்று நாள்களாக மின்சாரம் தடைப்பட்டிருந்தது. எரிபொருளுக்கும் பலத்த தட்டுப்பாடு. இவ் வேளையில் 90 களின் ஆரம்பத்தில், எரிபொருள் சிக்கனத்தைப் பேணுவதற்காக யாழ்ப்பாணத்தவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட குப்பி விளக்குத்தான் மக்களுக்கு மீண்டும் ஆபத்பாந்தவனாய் ஒளி கொடுத்தது. கொட்டும் மழையிலும் குப்பி விளக்கொளியில் படித்துக் கொண்டிருக்கிறாள் ஒரு சிறுமி! (படமும் தகவலும்: நேசன்)



பெருமழை காரணமாக யாழ்.குடாநாடு முழுவதும் பெருஞ்சேதங்கள் உண்டாகின. அவ்வாறு சேதத்துக்குள்ளாகிய வீடொன்றினைப் படத்தில் காண்கிறீர்கள். முன்னரெல்லாம் பாரிய அழிவுக்கு உவமையாக 'யானை புகுந்த வீடுபோல' என்று சொல்லுவதுண்டு. இப்போது அதனை மாற்றி 'வெள்ளம் புகுந்த வீடு போல' என்று சொல்லத் தோன்றுகின்றதல்லவா? (படமும் தகவலும்: கலைஞன்)



பண்ணைப் பாலம் உடைந்ததை அடுத்து அந்த வீதியால் வாகனங்கள் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் தீவுப்பகுதி மக்கள் யாழ்.நகருக்குச் செல்வதற்காகப் பண்ணைப் பகுதியில் கடலைக் கடக்கப் பாதைச் சேவை நடைபெற்று வந்தது.
கடந்த வாரம் இடம்பெற்ற 'நிஷா' இந்தப் பாதையில் மீண்டும் படகுச் சேவை இடம்பெறவைத்தது. பழைமையை நினைவூட்டுவதைப் படத்தில் காணலாம்.
(படமும் தகவலும்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு - சிஷ்யன்






கமல் ரசிகர்களுக்கு ஓர் இனிப்பான செய்தி.

கே.பாலச்சந்தரின் கவிதாலயா நிறுவனம் கமல்ஹாசனை வைத்துப் புதியபடம் ஒன்றைத் தயாரிக்கவுள்ளது. மிக நீண்ட இடைவெளிக்குப் பின்னர் குருவும், சிஷ்யரும் இப்படத்தின் மூலம் இணைகின்றனர். சமீபத்தில்தான் இன்னொரு சிஷ்யரான ரஜினிகாந்தை வைத்து குசேலன் படத்தைக் கவிதாலயா கொடுத்தது என்பது நினைவிருக்கலாம். எனினும் அப்படம் படுதோல்வியடைந்தது வேறுகதை! கமல்ஹாசனும், கவிதாலயாவும் கடைசியாக இணைந்தது 20 ஆண்டுகளுக்கு முன்பு வெளியான 'உன்னால் முடியும் தம்பி' படத்தில். அதன் பின்னர் இரு பெரும் இமயங்களும் இணையவில்லை.

மர்மயோகி படம் தற்போதைக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் 'தலைவன் இருக்கிறான்' என்ற படத்தை கமல்ஹாசன் தொடங்கவுள்ளார். அநேகமாக இந்தப் படத்தை முடித்துவிட்டு குருவின் படத்துக்குக் கமல் வருவார் எனத் தெரிகிறது.★

# சினிமாவில் அப்துல்கலாம்?




இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும், விஞ்ஞானியுமான அப்துல்கலாமை சினிமாவில் நடிக்கவைக்கப் பலரும் முயன்றனர். எனினும் அவர்களின் கோரிக்கைக்கு அப்துல்கலாம் செவிசாய்க்கவேயில்லை.

''நீங்கள் சினிமாவில் நடிக்காவிட்டாலும் பரவாயில்லை. சினிமா சம்பந்தமான நிகழ்ச்சியிலாவது தலைகாட்ட வேண்டும்'' என்று அவரிடம் 'ஒளியும் ஒலியும்' என்ற புதிய படத்தின் இயக்குநரான சக்தி செல்வம் ஒற்றைக் காலில் நின்றார்.

இப்போது அதற்குப் பலன் கிடைத்திருக்கிறது. ஒளியும் ஒலியும் படத்தின் பாடல் வெளியீட்டு விழாவில் கலாம் கலந்து கொள்ள இருக்கிறார்.

அப்படியானால் இனி சினிமாவில் நடிக்கவும் அப்துல்கலாம் வருவாரா? என்பதே ரசிகர்களின் இப்போதைய எதிர்பார்ப்பாகும்.★

# ஹரிஸின் கொள்கை



ஏ.ஆர்.ரஹ்மானிடம் உதவியாளராக இருந்து, இப்போது தன் இசையால் தமிழ் ரசிகர்களைக் கொள்ளை கொண்டவர் ஹரிஸ் ஜெயராஜ். அவர் பழைய பாடல்களை ரீ-மிக்ஸ் செய்வதில்லை என்பதைத் தனது கொள்கையாக வைத்திருக்கிறார்.

''ஒரு பாடலை ரீ-மிக்ஸ் செய்வதென்பது அந்தப்பாடலின் உண்மையான இசையமைப் பாளருக்குத்தான் பெருமை. இன்னும் 15 வருடங்கள் கழித்து என் பாடலை யாராவது ரீ-மிக்ஸ் செய்தால் அது எனக்குப் பெருமைதான். ஆனால் பழைய பாடலொன்றைக் கொடுத்து ரீ-மிக்ஸ் செய்யும்படி யாரும் கேட்டால் நிச்சயமாக அதைநான் விரும்பமாட்டேன். ஏனெனில் என்னைப் பொறுத்தவரை ரீ-மிக்ஸ் என்பது தரந்தாழ்ந்த செயல்'' என்று தன் கொள்கைக்கு நியாயமும் கூறுகின்றார் ஹரிஸ் ஜெயராஜ்.★

# ஹோசிமின் புதியபடம்



இயக்குநர் ஷங்கரின் சிஷ்யரான ஹோசிம், 'பெப்ரவரி 14' என்ற படத்தினை இயக்கி இருந்தது உதயன் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அப்படத்தின் தோல்வியோடு திரையுலகப் பக்கமே எட்டியும் பார்க்காது ஒதுங்கியிருந்தார் ஹோசிம்.

இப்போது எல்லோரையும் கவரக்கூடிய வித்தியாசமானதொரு கதையோடு மீண்டும் திரையுலகில் புகுந்திருக்கிறார்.

இவர் இயக்கப்போகும் இந்தப் படத்தை ரஜினிகாந்தின் மகள் சௌந்தர்யா தயாரிக்கவுள்ளார். இப்படத்தில் முக்கிய வேடத்தில் ராஜ்கிரண் நடிக்கவுள்ளதாகத் தெரிகின்றது★

# திரைவிமர்சனம்

## பூ



சொல்லாமலே, ரோஜாக்கூட்டம் போன்ற வித்தியாசமான கதையம்சம் கொண்ட வெற்றிப்படங்களைத் தந்த சசியின் இயக்கத்தில், மிக நீண்டகால இடைவெளிக்குப்பின் ஸ்ரீகாந்த் நடித்து வெளிவந்திருக்கும் படம் 'பூ'.

சிறு வயது முதலே இதயங்களால் இணைந்திருக்கின்றனர் ஸ்ரீகாந்தும், நாயகி பார்வதியும். எனினும் விதியின் விளையாட்டால் இவர்களின் காதல் இடைநடுவிலேயே கலைகின்றது. தனக்கு வேறொருவருடன் திருமணமான போதும் தன் மாமன் மகனும், முன்னாள் காதலனுமான ஸ்ரீகாந்தின் நினைப்பாகவே இருக்கிறார் பார்வதி. இறுதியில் இவர்களின் கதை என்னவானது என்பதையே 'பூ' திரைப்படம் சொல்லவருகின்றது.

தன்னுடைய முன்னைய படங்களைப் போலவே மிக அழுத் தமான - வித்தியாசமான - கதையைத் திறம்படப் படமாக்கியிருக்கிறார் இயக்குநர் சசி. ஒவ்வொரு காட்சி யிலும் சசியின் அக்கறை பளிச் சிடுகின்றது. முடிவுக் காட்சி யில் தமிழ் சினிமாவின் நம்பிக்கை நட்சத்திரங் களில் தானும் ஒருவன் என்பதை சசி ஆணித் தரமாக நிரூபித்துள்ளார்.

நடிகர் ஸ்ரீகாந்தும், அறிமுக நடிகை பார்வதியும் தமது திறமை முழுவதையும் வெளிப்படுத்தி, போட்டி போட்டுக்கொண்டு நடித்திருக்கிறார்கள். எந்தக் காட்சியிலும் இருவரும் குறைவைக்கவில்லை.



''சூ! சூ! மாரி.......'' ''மாமன் எங்கிருந்தா.........'' போன்ற பாடல்கள் மனதைத் தாலாட்டுகின்றன. ஒளிப்பதிவும் படத்தின் இன்னொரு பலம் என்று கூறலாம். அந்தளவிற்கு எல்லாக் காட்சி களும் கவிதை போல வந்துள்ளன. கதை, நடிப்பு, நெறியாள்கை, இசை, ஒளிப்பதிவு எனப் பல நிறைவான அம்சங்களைப் 'பூ' கொண்டிருந்தாலும், 'ஆட்டோகிராப்', 'அழகி' போன்ற சில படங்களின் சாயல் - சிற்சில இடங்களில்- தென்படவே செய்கின்றது. இது படத்தின் முக்கியமான குறையாகும்.

அத்தி பூத்தாற்போல தமிழ் சினிமாவில் எப்போதாவது வரும் நல்ல படங்களில் ஒன்றாக மலர்ந்திருக்கிறது 'பூ'!★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்ற வீரன்..............

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

'டேய் ராமசாமி உனக்கென்னடா பைத்தியமா பிடிச்சிருக்கு! இந்தியாவில் போய் நீ என்னேல செய்வே! உனக்கு யார்ஏல அங்கிருக்கா'?

'யாரும் இருந்தா என்ன, இல்லாட்டிப் போனா என்ன ஐயா! நான் போறத்துக்கு ஏதாச்சும் செய்து குடுங்க.'

'அங்கியே வழியில்லாமத் தானடா இங்க கள்ளத் தோணியில் வர்ராங்க: நீயேன் போகணும் என்கிறா.'

'எவன் வந்தா என்னங்க? நான் போயி சண்டையில சேரணும்! சீனாக் காரனை ஒழிக்கணும்.'

'ஓகோ! சண்டையில சேரப் போறீங் களா! சண்டை முடிஞ்சிப் போயிட்டா என்ன செய்வீங்க? எங்கே போவீங்க? போ! போ! வேலையைப் பாரு!' கிண்டலும் மிரட்டலும் கலந்த தொனியில் பேசினார் கணக்குப்பிள்ளை. பேச்சை நிறுத்திவிட்டு அவர் தன் வேலையில் மூழ்கிவிட்டார்.

ராமசாமிக்கு மனம் அமைதியடைய வில்லை.

'சண்டை முடிஞ்சிப் போனால்?...... சண்டைக்குப் போய்த் திரும்பியா வரணும். எத்தனை பசங்களைச் சுட்டுத் தள்ளணுமோ அத்தனை சீனனைச் சுட்டித்தள்ளிப்புட்டு நாமளும் போறது தானே!' என்று முணுமுணுத்த படியே தேயிலைக் கொழுந்தை மளமளவென்று கிள்ளினான். சீனன் தலையைக் கிள்ளுவதாக அவனுக்கு நினைப்பு!

தோட்டத் தொழிற்சங்கத் தலைவர் முத்தையாப்பிள்ளை சந்தாத் தொகை சேர்க்க வந்திருந்தார்.

சந்தா தொகையைச் செலுத்திய ராமசாமி, ''இந்தியப் பாதுகாப்பு நிதி''க்கும் ஏதோ கொடுத்தான். ''என்னை இந்தியாவிற்கு அனுப்பி வைக்க ஏதாச்சும் செஞ்சுதாங்க'' என்று கேட்டான்.

அவரும் அவனைப் பைத்தியக் காரனாக்கி ''பேசாமை இங்கேயே கிட'' என்று உபதேசம் செய்தார்.

ராமசாமி திருப்தியடையவில்லை.

''ஏங்க நான் இந்தியக்காரன்னு சொன்னா என்னை அனுப்பி விட்டு வானுங்களா? அப்படித்தானுங்க, இல்லியா'' என்று தனது புத்திசாலித்தனத்தை வெளியிட்டான். "அதெப்படியப்பா முடி யும்? உனக்குத்தான் ஊரிலே யாரும் இல்லையே? சொந்த ஊர் எதெண்ணு கூட தெரியாது? உன்னை இந்தியசர்க் கார் ஏத்துக் கொள்ளணுமே!''

''திருநெல்வேலி ஜில்லாவில் பாஞ்சாலங் குறிச்சிதான் நம்ம ஊரெண்ணு எங் கப்பா சொல்லியிருக்காங்க.''

''பாஞ்சாலம் குறிச்சியா?அதுதான் தம்பிக்கு வீரம் துடிக்குது! சரி! பாஞ் சாலங் குறிச்சிதான் உன்னுடைய ஊர் எண்ணா இந்திய சர்க்கார் அதை ஏற்றுக் கொள்ளணுமே!''

''என்னங்க! என்னட ஊரை நான் சொன்னாலும் நம்ப மாட்டாங்களா?''

''உனக்குச் சொன்னாப் புரியுதில்லை. நான் சொல்லிறதைக் கவனியப்பா. நீ இந்தியன். இந்தியாவுக்குப் போகணு மின்னா உன் செலவில்லாமலே இலங்கை அரசாங்கம் உன்னை அனுப்பி வைச்சிடும். ஆனால் நீ இந்தியாதான் என்பதை இந்திய சர்க்காருக்கு நிரூபிக்க வேண்டும். நீ எந்த ஊரில் பிறந்தாயோ அந்த ஊரில் உனது பிறப்புப் பதிவு இருக்க வேண்டும். அந்தத் தகவல்களை யெல்லாம் நீ இந்திய சர்க்காருக்கு அதாவது இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷன் காரியாலயத்திற்குத் தெரிவிக்க வேண்டும். அதுமட்டும் போதாது, நீ அந்த ஊரில் பிறந்தாய் என்பதற்கு அந்த ஊர் முன்சீப்பிடமிருந்து அத்தாட்சிக் கடதாசி வாங்கிக் குடுக்கணும். இறப்புப் பதிவுக் கொப்பி எடுத்துக் கொடுக்கணும்'',

''அப்போ அது சரிவராதுங்க'' என்று அலுப்புடன் பதில் சொல்லிவிட்டு அங்கிருந்து ராமசாமி நகர்ந்து விட்டான்.

தாய் நாட்டிற்குப் போக வேண்டும், சீனரை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற சிந்தனை மட்டும் ஓயவில்லை.

''கள்ளத்தோணி''

இது எல்லோருக்கும் அடிக்கடி உபயோகிக்கும் வார்த்தைதான். ஆனால் அந்த வார்த்தை அவன் மனதில் இப்போது முக்கியமானதாகப்பட்டது.

அடுத்த கணம் முகத்தில் பழைய வாட்டம்!

''கள்ளத்தோணி அங்கிருந்துதானே இங்க வருது. இங்கேருந்து யாரும் போனதாக இல்லியே.''

இங்கிருந்தும் போனதாக..........

''இந்தியாவுக்கு இலங்கையிலிருந்து கள்ளத் தோணியில் செல்லும் காலம் விரைவில் வரும்'' என்று யாரோ ஒரு தலைவர் எப்பொழுதோ ஒரு கூட்டத்தில் சொன்னதுதான் இது.

தாய் நாட்டுக்கு எப்படிப் போவது?

ராமசாமிக்குப் பைத்தியமே பிடித்து விடும் போலிருந்தது.

வந்தவர், போனவர், நின்றவர், எல்லாரிடமும் மார்க்கம் கேட்டான். யாரும் சொல்வதாக இல்லை.

''ஏனப்பா இவ்வளவு கஷ்டப்படுகிறாய்? நவரத்தின சாமியாக மாறி விடேன்'' ஒரு நண்பன் யோசனை கூறினான்.

''நவரத்தினசாமி! அது என்னால் முடியுமா?''

''ஏன் முடியாது! பாக்குத் தொடுவாய் பன்னிரண்டு மைல் தானேப்பா! நீந்த முடியாதா! நவரத்தினசாமியைவிட நீ என்ன துணிச்சல் இல்லாதவனா?'' நண்பன் உருவேற்றினான்.

''சரி! பார்ப்போம்'' என்று கூறிவிட்டு கால்போன போக்கில் சென்று கொண் டிருந்தான்.

பாக்குத் தொடுவாயை நீந்திக் கடப்பதுதான் ஒரேவழி. எப்படி நீந்துவது? முடியுமா? முடியாதா? இதே சிந்தனை தான். ஒரு முடிவுக்கும் வந்து விட்டான்.

இந்தியாவின் வட கிழக்குப் பகுதிக்குள் சேருவதற்கு முதற்படியாக இலங் கையின் வட பகுதியான யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்துவிட்டான்.

காலை மாலையாகி இரவாகியும் விட்டது.

வல்வெட்டித்துறைக் கடற்கரை. அங்குமிங்கும் நடந்தான். கடலில் இறங்கி நீந்த வேண்டியதுதான்

அதோ ஒரு படகு! நம்மைப் போலவே வேறு யாரும் சீனரை எதிர்த்துச் சண்டையிடக் கிளம்புகிறார்களோ!

சேச்சே! படகு சும்மா நிற்கிறது! படகில் போனால்..........! படகுக்காரன் பார்த்தால்! இந்த நேரத்தில் யார் வரப் போறாங்க.

படகை நாமே செலுத்திக்கொண்டு போனால்! ஆமாம், அதுதான் சரி.

கடலில் இறங்கி நடந்தான்.

'ஏய் நில்.'

ராமசாமி திரும்பினான். 'டுமில்' துப்பாக்கிச்சூடு.

ராமசாமி வீழ்ந்தான்.

இந்தியாவின் வடகிழக்கு எல்லையில் சீனரை எதிர்த்துப் போராடப் புறப்பட்ட ராமசாமி இலங்கையின் 'சிங்க ரெஜி மென்ட்' சிப்பாய்களின் குண்டுக்குப் பலியாகினான்.

'வல்வெட்டித்துறையில் துப்பாக்கிச் சூடு. கள்ளக் கடத்தல்காரர் சுடப்பட்டு மாண்டார்' என்ற பத்திரிகை 'விற்கும் பையன் பஸ் நிலையத்தில் சத்தம் போட்டு வியாபாரம் செய்தான்.

*(நன்றி: சுதந்திரன் சிறுகதைகள்)*

# தமிழ் இலக்கியத்தில்....

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**சமயப் பொதுமை**

தொல்காப்பியத்தில் ஆசிரியர் கடவுளை வாழ்த்தும் முறை யைக் குறிப்பிடினும் தன் நூலில் அவர் கடவுள் வாழ்த்துப் பாட வில்லை. இது சிந்தனைக்குரியது. சங்க இலக்கியம் பல்வேறு புலவர்களால் பாடப்பட்ட உதிரிப் பாடல்களின் தொகுப்புகள். அப்பாடல்கள், தொகுக்கப் பெற்ற காலத்தில் கடவுள் வாழ்த்துப் பாடல் அமைக்க வேண்டும் என்ற நம் பிக்கை எழுந்துவிட்டதால், பாரதம் பாடிய பெருந்தேவ னாரே எல்லாச் சங்கப் பாடல்களுக்கும் கடவுள் வாழ்த் துப்பாடல் எழு திச் சேர்த்துள்ளார். அப்பாடல்களில் ஐங்கு றுநூறு, அகநானூறு, புறநானூறு ஆகியவற்றில் சிவனையும், நற்றிணை யில் திருமாலையும் குறுந்தொகை யில் முருகனையும் அவர் வாழ்த்தியுள்ளதால், அவர் சிவ பக்தர் என்பதும் ஆயினும், சமயப் பொதுமை உடையவர் என்பதும் அறிய முடிகிறது. அவர் காலத்தில் மேற்கூறிய கட வுளரை வணங்கிய நிலைமையும் அவற்றில் சிவவழிபாடு மிக்கிருந்த தன்மையும் புலனாகிறது என்று கருத இடமுண்டு.

பதிற்றுப் பத்தில் முதல் பத்து கிடைக் காமையால் கடவுள் வாழ்த்தினைப்பற்றி அறியவாய்ப் பில்லை. பரிபாடல் திரு மாலைப் பற்றிய பாடலொடு ஆரம்பிப் பதால் கடவுள் வாழ்த்துப் பாடலைச் சேர்க்கவில்லை. கலித்தொகையில் உள்ள சிவனைப் பற்றிய வாழ்த்துப் பாடல் யார் பாடியது என்று தெரியவில்லை. இதற்கு நச்சினார்க்கினி யர் சிறந்த உரை விளக்கம் எழுதியுள்ளார். பாரதம் பாடிய பெருந்தே வனார் பாடிய பாடல்கள் அனைத்திலும் ஒருமுறை வைப்பு அமைந்துள்ளது. கடவுளர்களின் தன்மை சிறப்பாகப் போற்றப்படுவதோடு உலகம் உய்ய அருள் புரிய வேண்டும் என்ற ஆசிரியரின் வேண்டுதலும் அதில் புலனாகிறது. (எ.கா. ''ஏமவைகல் எய்தின் றாலுலகே'' - குறுந்) பாரதம் பாடிய பெருந் தேவனார் நற்றிணையில் ஏழு அடிகளிலும், குறுந் தொகையில் ஆறு அடிகளிலும், ஐங்குறுநூற்றில் மூன்று அடிகளிலும், கலித்தொகையில் பதினேழு அடிகளிலும், பரிபாடலில் அறுபத்தைந்து அடிகளிலும், அகநானூற்றில் பதினாறு அடிகளிலும், புற நானூற்றில் பதின்மூன்று அடிகளிலும் கடவுள் வாழ்த்தைப் பாடியுள்ளார்.

இந்த அடிவரையறைச் சிற்றெல்லை, பேரெல்லை கடவாமல் அவர் பாடியுள்ளமை குறித்தற்குரியது. அதேபோன்று கலிப்பாவினால் பாடப்பட்டுள்ள கலித்தொகையில் கலிப்பாவாலும் அகவற் பாவால் பாடப்பட்டுள்ள பிற தொகை நூல்களில் அகவற் பாவாலும் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை முருகனைப் பற்றியதாதலின், அதுவே கடவுள் வாழ்த்துப் பாடலாக அமைகிறது. அதனால், பாரதம் பாடிய பெருந்தேவனார் அந்த நூலுக்குத் தனியாகக் கடவுள் வாழ்த்துப்பாடல் பாடவில்லை.

சிலப்பதிகாரத்தில் கடவுள் வாழ்த்து மாற்றம் பெறுகிறது. பல நிலைகளில் புதுமை செய்த இளங்கோவடிகள் இங்கும் புதுமை செய்கிறார். கடவுளரை வாழ்த்தி வந்த போக்கு, அரசனோடு தொடர்புடைய இயற்கையை வாழ்த்தும் முறையில் மாற்றம் பெறுகிறது. பிரசாரக் காவியமாகிய மணிமேகலையில் புத்தருக்கோ மற்ற கடவுளருக்கோ கடவுள் வாழ்த்து அமையவில்லை. சீவக சிந்தாமணியிலும் சூளாமணியிலும் அருகனை வாழ்த்துவதோடு அவையடக்கமும் கூறப்படுகிறது. நீலகேசியில் அருகக் கடவுள் வாழ்த்தப்படும் நிலை காணப் படுகிறது. பல்லவர் காலத்திற்குப் (கி.பி.6 ஆம் நூற்றாண்டு) பிறகு விநாயகர் வழி பாடு ஏற்பட்டதால், விநாயகர் வாழ்த்தும் இடம் பெறலாயிற்று.

நன்னூலில் பிண்டி நீழலில் உள்ள அருகக் கடவுளை வாழ்த்திய நிலை பிறகே வருகிறது. புறப்பொருள் வெண்பாமாலையில் விநாயகர் வாழ்த்துக் காணப்படுகிறது. சிவனைப் பற்றிய திருமந்திரத்தில் கூட விநாயகரைவாழ்த்தியமை, விநாயகருக்கு ஏற்றம் கொடுத்த அக்காலச் சமுதாயச் சூழலைப் படம் பிடிப்பதாக உள்ளது.

பிரபந்த நூல்களில் பிள்ளைத் தமிழில் காத்தற் கடவுளாகிய திருமாலைக் காப்புப் பருவத்தில் வாழ்த்துகின்றது. மற்றைய பிரபந்தங்களில் நூல் இனிது முடிய விநாயகரையும் அறிவுக் கடவுளாகிய சரஸ்வதி யையும் வாழ்த்தும் அமைப்புக் காணப்படுகிறது.

பெருங்காப்பியமாம் கம்பராமாயணத்தில் திருமால், இராமபிரான், சடகோபர், அனுமன், கலைமகள், விநாயகர் ஆகிய பலரையும் வாழ்த்தும் முறை அமைகிறது.

**இக்காலத்தில் இறை வாழ்த்து**

இருபதாம் நூற்றாண்டு இலக்கியங்களில் கடவுள் வாழ்த்து மாற்றம் பெறுகிறது. பாரதியார் நாட்டினை அதிகமாக மதித்ததால் நாட்டு வாழ்த்து பாடுகிறார். பின்னால் வரும் பாரதிதாசன் போன்றவர்களும் புதுக்கவிதை பாடுபவர்களும் தாய் மொழிப்பற்றின் விளைவாகத் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடுகின்றார்கள். இதற்கு மனோன் மணியம் நாடகம் எழுதிய பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களும் காரணம் எனலாம். 'நீராடுங் கடலுடுத்த' எனத் தொடங்கும் தமிழ்மொழி வாழ்த்துப்பாடலால் கவிவாணரிடையே ஓர் எழுச்சியும் மாற்றமும் விளைந்தன. அதன் விளைவாக இன்று அரச விழாக்களில் கூடக் கடவுள் வாழ்த்து, தாய்மொழி வாழ்த்து, நாட்டு வாழ்த்து (இறுதியில்) என வாழ்த்துகள் இடம்பெறுகின்றன.

புதுக்கவிதையில் கடவுள் வாழ்த்தோ மொழி வாழ்த்தோ இடம் பெறுவதில்லை. கடவுளை விட கவிஞர்கள் தம்மீது அதிக நம்பிக்கை கொண்டிருப்பது ஒருவேளை காரணமாக இருக்கலாம்.

இறைவணக்கம் எல்லா வகையான பாவகையாலும் பாடப்பட்டது. முதலில் உலகம் உய்யும் பொருட்டு அமைக்கப் பட்டது. பிறகு எடுத்துக்கொண்ட நூல் இனிது முடியும் பொருட்டு இயற்றப்பட்டது. இயற்கையை இறைமை நிலைமைக்கு உயர்த்தும் நிலைமை ஏற்பட்டது. கடவுள் ஒருவனை வணங்கும் வணக்கம், கடவுள் பலரை வணங்குவதாக மாற்றம் பெற்றது. சிவனையும் பிற கடவுளரையும் வணங்கும் முறை மாறி விநாயக வணக்கம் சிறப்பான இடம்பெற்றது. மனிதனையும் (சடகோபர்) இறைவனாக்கி வணங்கும் முறையும் இருந்தது. நாட்டையும் மொழியையும் இறைநிலைக்கு உயர்த்தி வணங்கும் முறை அண்மைக்காலத்தில் தோன்றியது.

இவ்வாறு இறைவணக்கப் பாடல்கள் சமய மாறுபாட்டையும் சமுதாய மாறுபாட்டையும் அறிவிப்பதாக அமைந்துள்ளன.

*******************

## 1920 ஆம் ஆண்டு முதன் முதல் யாழ்ப்பாணத்தில் தேங்காய் எண்ணெய் ஆலை ஆரம்பிக்கப்பட்டது

**1920 டிசம்பர் 09**

1920 ஆம் ஆண்டு டிசம்பர் 09 ஆம் திகதி இந்திரை எண்ணெய் ஆலை என்ற பெயரில் (Inthirai oilmill) தேங்காய் எண்ணெய் ஆலை ஒன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. சி. எஸ்.கந்தையாச் செட்டியார் இந்த எண்ணெய் ஆலையை ஆரம்பித்தார். 60,000 ரூபா மூலதனத்தில் இந்த எண்ணெய் ஆலை ஆரம்பிக்கப்பட்டது. அப்போது அரசாங்க அதிபராக இருந்த சேர் வில்லியம் துவைனம் ஆலையைத் திறந்து வைத்தார். யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தேங்காய் எண்ணெய் ஆலை இதுவே. பிற்காலத்தில் பொன்னம்மா ஆலை என்று இது வழங்கப்பட்டதாகக் கூறப் படுகின்றது. தற்போது யாழ்ப்பாணத்தில் காணப்படும் எண்ணெய் ஆலைகளுடன் ஒப்பிடுகையில் இந்த ஆலை மிகவும் பிரம் மாண்டமானதாக இருந்திருக்கும் என்றே ஊகிக்க முடிகிறது. காரணம் 1920 ஆம் ஆண்டு 1/4 சதம் 1/2 சதம் பாவனையி லிருந்த காலத்தில் 60,000 ரூபா முதலீட்டில் எண்ணெய் ஆலை என்றால் அது ஒரு தொழிற்சாலையாகவே இருந்திருக்க வாய்ப்புண்டு. ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் பல ஐரோப்பியர்கள் பளையில் தென்னந்தோட்டங்களை வாங்கி தேங்காய் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தனர். ஐரோப்பியர்கள் மட்டுமல்ல மேற்கிந்தியத்தீவுகளைச் சேர்ந்த ஹார்டி (Hardy) என்ற வர்த்தகரும் பளையில் தென்னந்தோட்டம் வாங்கித் தேங்காய் வியாபாரத்திலீடுபட்டு வந்தார். இலங்கைத் தேயிலை உலகின் முதற்றரத் தேயிலையாகக் கருதப்படுவது போல் இலங்கைத் தேங்காய் எண்ணெயும் உலகின் முதல் தரமான தேங்காய் எண்ணெயாகக் கருதப்படுகிறது, அல்லது கருதப்பட்டது. மேலைநாட்டு மருத்துவ நிறுவனங்கள் மருந்து உற்பத்திக்கு இலங்கைத் தேங்காய் எண்ணெயையே பயன்படுத்தின (Pune ceylon cocoanutoil). யாழ்ப்பாணத்தில் உள்நாட்டு யுத்தம் தொடங்க முன்னர் கச்சதீவு அந்தோனியார் உற்சவத்தில் தேங்காய் எண்ணெய் பண்டமாற்றாக இந்தியாவிலிருந்து வருபவர்களிடம் பரிமாறப்பட்டது. இந்துக்களும் வியாபார நோக்கில் தேங்காய் எண்ணெயுடன் கச்சதீவு சென்று சாரம், சேலை என்பவற்றுடன் வருவர். யாழ்ப்பாணத்தில் தற்போது பிரகட் என்ற பெயரில் இந்தியத் தேங்காய் எண்ணெய் விற்பனை செய்யப் படுகிறது என்பது சிந்திக்க வேண்டியது. ***

**கந்தையா செட்டியார் என்பவர் ரூ.60 ஆயிரம் மூலதனம் போட அரச அதிபர் திறந்து வைத்தார்**

**இன்றும் நினைவில் கொள்ள... அன்றைய ஞாபகம்... இங்கே!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தில் அன்னை!



அன்பின் முன்னெழுத்து
அறிவின் முதலெழுத்து
என்றென்றும் உயிரெழுத்து
ஏற்றம் தரும் உலகெழுத்து அன்னை!

தலைசிறந்த கவியெழுத்து
தமிழின் கலையெழுத்து
இனித்திடும் செந்தமிழெழுத்து
கனிவான சொல்லெழுத்து அம்மா!

அமுதின் அன்னையே!
அறிவின் அழகியே!
கல்வியின் கலைமகளே!
எழுத்திலும் என்றென்றும் நீயே தாயே!

ச.ஜெயந்தினி,
தரம் - 07, யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

# தமிழிலில் முக்கிய நூல்களை எழுதியவர்கள்

1. ஆத்திசூடி - ஔவையார்
2. நளவெண்பா - புகழேந்திப்புலவர்
3. பெரியபுராணம் - சேக்கிழார்சுவாமி
4. கந்தபுராணம் - கச்சியப்பசிவாச்சாரியார்
5. திருவிளையாடல் - பரஞ்சோதிமுனிவர்
6. கம்பராமாயணம் - கம்பர்

ப.கோபிகா
தரம் 7C, யா/ இந்து மகளிர் கல்லூரி

# கரப்பான் பூச்சி

கரப்பான் பூச்சியைக் கண்டாலே எல்லோரும் வெறுத்து ஒடுகின்றோம். ஆனால் இந்தக் கரப்பான் பூச்சிகள் நோயைத் தீர்க்கும் அரிய மருந்தாகவும் விளங்குகிறன.

முட்டு வருத்தத்தால் வாடும் நோயாளிக்கு குறிப்பாக மூச்சுத் திணறல், மேல்கீழ் மூச்சு ஆகியவற்றால் அவதியுறும் போதும் இன்னல்களை உடனே அகற்றும் நண்பனாக உதவி புரிகிறது இந்தக் கரப்பான் பூச்சிகள்.



1896 ஆம் ஆண்டு ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த ஆங்கில மருத்துவத்தில் எம்.டி.எ பட்டம் பெற்ற Dr. சாமுவேல் கிரிஸ்ரியன் பிரட்டிக் ஹனிமென் அவர்களால் உலகுக்கு அறிமுகம் செய்யப்பட்ட 'ஒத்தவைகள் ஒத்தவைகளால் குணமடையும்' என்ற தத்துவத்தை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட 'கரப்பான் பிராங்கியல்' மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

பிளாற்றா ஒரியன்டாலிஸ் என்பது கரப்பானில் இருந்து தயாரிக் கப்படும் மருந்தாகும். மூச்சுத்திணறல் அதிகரித்து நோயாளி சிக்கலுற்று திக்குமுக்காடும்போது பிளாற்றா ஒரியன்டாலிஸ் திரவத்தைப் பதினைந்துமுதல் இருபது சொட்டுக்கள் வெந்நீரில் கலந்து கொடுக்கும் பொழுது, ஆங்கில மருத்துவத்தில் ஊசி போட்டுத்தான் தணிக்க முடியும் என்ற மூச்சுத் திணறலைக்கூட எளிதில் கரப்பானிலிருந்து எடுக்கும் திரவத்தின் மூலம் தணிக்க முடியும்.

நாள்பட்ட மற்றும் கட்டுக்கடங்காத மூச்சுத் திணறலைக் கூட தணிக்கக் கூடிய வலிமை பெற்றுள்ளது இந்தக் கரப்பான் பூச்சி மருந்து. எங்கள் எல்லோராலும் அருவருப்புக்குள்ளாகும் இந்தக் கரப்பான் பூச்சிகள் எவ்வளவு அருமருந்தாக மாறிவிட்டது என்பதனை பார்த்தீர்களா? இதுதான் இயற்கையின் விந்தை. ✱✱✱

ம.சருண்யா தரம்-8A ஸ்கந்தவரோதயக் கல்லூரி.





நீண்ட நேரம் வானில் பறந்த மந்திரத் தேர் கடல்களையும், மலைகளையும், காடுகளையும் தாண்டிக் கடைசியாக மாயத்தீவில் இறங்கியது.

மாயத்தீவில் காலடி எடுத்து வைத்த பிறகுதான் இளவரசர்கள் இருவருக்கும் மீண்டும் சுயநினைவு வந்தது. முதலில் தாம் எங்கே நிற்கிறோம் என்பதுகூட இளவரசர்களுக்குப் புரியவில்லை. பின்னர் மெதுவாக மந்திரக்கிழவியின் சித்து விளையாட்டால் மாயத்தீவுக்குத் தாம் இருவரும் கொண்டு வரப் பட்டுள்ளதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். இந்திரவர்மனும், சந்திரவர்மனும் மிரண்டுபோய் நிற்பதைப் பார்த்த மந்திரக் கிழவி, தன்னுடைய மந்திரக்கோலை எடுத்துக் கொண்டு அவர்கள் அருகே வநதாள்.



''பார்த்தீர்களா இந்த அற்புதத்தீவை! இந்த மந்திரத்தீவுக்கு வர நீங்கள் புண்ணியம் செய்திருக்க வேண்டும். உலகில் சொர்க்காபுரி இதுதான்!''

என்று தன் மந்திரத்தீவின் மகிமை பற்றி அவள் கூறத் தொடங்கினாள்.

மந்திரத்தீவினை நோட்டமிட்ட சந்திரவர்மனுக்கு உதறலெடுக்கத் தொடங்கியது. மண்டை ஓட்டு வடிவில் அமைத்த மாளிகைகளும், இரத்த நீரூற்றுகளும், எலும்புகளால் செய்யப்பட்ட அலங்காரத் தோரணங்களும் மந்திரத்தீவு எங்கும் நிறைந்திருந்தன!

''இதுவா சொர்க்காபுரி? பார்ப்பதற்கு நரகம் போல இருக்கிறது!''

என்று தன்னையுமறியாமல் கூறினான் இந்திரவர்மன்.

''வயதில் சிறியவர்களாக இருந்தபோதும் உங்கள் வாய்க்கொழுப்பு அதிகம் தான்! யாரங்கே! இவர்கள் இருவரையும் பிடித்துப் பத்திரமாக அடைத்து வையுங்கள். நாளை மறுதினம் பௌர்ணமி. அன்று இவர்களைப் பலிகொடுக்க வேண்டும்!'' என்று கூறிவிட்டு மந்திரக்கிழவி அவ்விடத்தை விட்டு நகரத் தொடங்கினாள். அவளின் ஏவலைக் கேட்டு எங்கிருந்தோ வந்த இரு ராட்சதர் கள், இளவரசர்களைப் பிடிக்க முற்பட்டனர். (தொடரும்)

# கல்வி

மூன்றெழுத்தில் தொடங்குவது
முப்பதாயிரம் பொருள் கொண்டு
எம் நெஞ்சில் பதியுமென்றும்!
கள்வனால் திருடவோ
நெருப்பால் அழிக்கவோ முடியாத
ஒரு அரும் பொக்கிஷம்
அதை நீ பெற்றால்
எந்நாட்டிலும் உனக்கு மரியாதை
அதைப் பெறத்தவறேல்
சொந்த வீட்டில் கூட
நீ தேவையற்றவன்
நீ கல்வி யெனும்
பூவைப் பெற்று
மற்றவரையும் உன்னுடன்
சேர்த்துப் பூஞ்சோலையாக்கு
இவ்வுலகை!



-லோ.சயீதா தரம்-7A ,யா/மகாஜனக்கல்லூரி.





# அறிவுள்ள ஆண் புறா

ஒரு காட்டில் ஒரு வன்னி மரம் இருந்தது. அதில் நான்கு புறாக்கள் வசித்து வந்தன. அதில் ஒரு புறா ஆண். அது மிகவும் அறிவுள்ளது. ஒரு நாள் அந்த மரத்தில் ஒரு கொடி வள்ர்ந்து வந்தது. அதைக் கண்ட ஆண் புறா மற்றப் புறாக்களிடம் ''அந்தக் கொடி வளர்ந்து வந்து எமக்கு ஆபத்தை விளைவிக்கும்'' என்று கூறியது. அதை மற்றப் புறாக்கள் கேட்பதாகத் தெரியவில்லை. அவை கேட்காத மாதிரி இரைதேடச் சென்றன. ஆண் புறாவும் இரைதேடச் சென்றது. அந்தக் கொடி படிப்படியாக வளர்ந்து உறுதியாக நின்றது. ஒருநாள் வேடன் அந்தக் கொடியில் ஏறி புறாக்களின் கூட்டில் வலையை விரித்துவிட்டு சென்று விட்டான். இரைதேடிவிட்டு வந்த புறாக்கள் கூட்டில் விரித்த வலையை காணவில்லை. வலையில் அகப்பட்டுக்கொண்டன. ஆண் புறா கூறியது ''நான் முதலே கூறினேன். நீங்கள் கேட்கவில்லை''. ''நாங்கள் செய்த தவறை உணர்ந்துவிட்டோம். தப்புவதற்கு என்ன வழி என்று மற்ற புறாக்கள் கேட்டன''. ஆண் புறா ''எனக்கு ஒரு வழி தோன்றுகிறது. அதன்படி செய்தால் தப்பலாம் அல்லாவிட்டால் இறைச்சி ஆவோம்'' என்றது. மற்ற புறாக்கள் ''என்ன வழி?'' என்று கேட்டன. ஆண் புறா தனது யோசனையைக் கூறத் தொடங்கியது. ''நாங்கள் எல்லோரும் இறந்ததைப்போல கிடப்போம். அப்போது வேடன் வலையை தூக்குவான். அவனிற்குப் பாரமாக இருக்கும். அவன் ஒவ்வொரு பறவையாக எடுத்து கீழே போட்டால் இலகுவாக தூக்கலாம் என நினைத்து கீழே போடுவான். எங்கள் எல்லோரையும் போடும்வரை பொறுத்திருந்து பின்பு மேலே பறப்போம்'' என்றது. ''இது நல்ல வழி'' என்று பாராட்டின மற்றப் புறாக்கள். வேடன் வருவதைக் கண்ட புறாக்கள் ஆண்புறா சொன்னது போல கிடந்தன. அவன் ஆண்புறா சொன்னதைப் போலவே ஒவ்வொன்றாக கீழே போட்டான். எல்லாப் பறவைகளையும் போடும்வரை காத்திருந்து மேலே பறந்தன புறாக்கள். '' நான் ஏமாந்துவிட்டேன்'' என வேடன் ஏமாற்றத்துடன் வீடு சென்றான். ✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱



சி.விநுஷா தரம் 7F, யா/ சாவகச்சேரி.இந்துக்கல்லூரி

# விடுகதை சொல்லப்போறோம்...

1) ஒருவனை மட்டும் அழைத்தால், ஊரையே கூட்டி உண்பான். இந்த உத்தமன் பெயர் என்ன?
காகம்
2) ஒரு சாண் குதிரைதான். ஆனால் உடம்பெல்லாம் பற்கள். அது என்ன?
சீப்பு
3) ஒரு பெண்ணுக்கு மூன்று கொண்டைகள். ஒன்று குலைந்தாலும் அவளுக்குத் துன்பந்தான். அது என்ன?
அடுப்பு
4) ஒற்றைக் காதுடையவன். ஓடி ஓடி வேலி அடைப்பான். யார் அவன்?
ஊசி
5) ஒற்றைக் கால் மனிதன் இவன். கைகளோ பல. அண்டியவருக்கு நிழல் தருவான். யார் அவன்?
மரம்
6) ஒரு கரண்டி மாவாலே ஊருக்கெல்லாம் தோசை. அது என்ன?
நிலவு
7) ஒரு சாண் சட்டைக்கு அரைச்சாண் மூடி. அது என்ன?
பேனா
8) ஒரு பிள்ளையைப் பெற்றதும் தாய் இறந்து போவாள். யார் இவள்?
வாழை
9) ஒளிதரும் உத்தமன் உருக்குலைவான். அவன் யார்?
மெழுகுவர்த்தி.

அ.சிந்துஜா, தரம் 7 F, யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

# இலங்கை பற்றி......!

இலங்கையின் தேசிய மரம் யாது?
நாகமரம்
இலங்கையின் தேசிய பறவை யாது?
காட்டுக்கோழி
இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் யார்?
ஆனந்தசமரக்கோன்
இலங்கையின் தேசிய கீதத்தை தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?
முதுதமிழ்ப் புலவர் மு.நல்லதம்பி
இலங்கை சுதந்திரம் அடைந்த ஆண்டு எது?
1948.02.04
சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர் யார்?
டி.எஸ்.சேனநாயக்க
இலங்கையின் தேசிய விளையாட்டு எது?
எல்லே
இலங்கைக்கு வெள்ளரசுக் கிளையைக் கொண்டு வந்தவர் யார்?
சங்கமித்தை
இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் நீரிணை எது ?
பாக்குநீரிணை
இலவசக் கல்வியின் தந்தை யார்?
C.W.W. கன்னங்கரா

தி.மித்திரன் - தரம் 4
யா/பண்டத்தரிப்பு பெண்கள் உ/த பாடசாலை

# நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)
மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................. ..............................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

# மாணவர் தூரிகை

ச.மதுராஜினி
தரம் - 8,
யா/கொழும்புத்துறை இ.ம.வி.



சி.அகல்யா
தரம் - 7 E,
யா/இந்து மகளிர் கல்லூரி.



க.மதுரா
தரம் - 7 A,
யாழ்.கொக்குவில், இந்துக்கல்லூரி.



க.பகீரதன்
தரம் - 7 D,
யா/மத்திய கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.நகரில் முதலாவது

முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட குளிரூட்டப்பட்ட ஸ்தாபனம்

## Annai Nagaa Food City

நத்தார், புதுவருட தினங்களை முன்னிட்டு

அசத்தலான OFFERS

ஏராளம்... ஏராளம்...



- ★ விலைக்கழிவுகள்
- ★ அன்பளிப்புப் பொருள்கள்
- ★ ஒன்றைக் கொள்வனவு செய்வதன் மூலம் இன்னொன்றை இலவசமாகப் பெறுங்கள்
- ★ அதிக பொருள்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் சீட்டிழுப்பில் பங்குபற்றிப் பல பெறுமதி மிக்க பரிசில்களை வெல்ல முடியும்.
- ★ இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே.
- சுத்தமாகப் பொதி செய்யப்பட்ட மளிகைப் பொருள்கள்
- இறைச்சி / பொதி செய்யப்பட்ட இறைச்சி வகைகள்.
- பால்மா வகைகள் (கீல்ஸ் சொசேஜஸ் -Sausages)
- பழவகைகள், பழரசங்கள்,கேக் மற்றும் கேக் உள்ளீடுகள்.
- பலவகையான ஐஸ்கிறீம், குளிர்பான வகைகள், பிஸ்கட், வெளிநாட்டு சொக்கிளேற் வகைகள்.
- அழகுசாதனப் பொருள்கள், பாடசாலை உபகரணங்கள் வீட்டுப் பாவனைப் பொருள்கள், சிகை அலங்காரப் பொருள்கள், வாசனைப் பொருள்கள் (சென்ற் வகைகள்)
- சீஸ், பட்டர், மாஜரீன், குழந்தைகளுக்கான றெடிமேட் ஆடைகள்

Annai Nagaa Food City

மேலும் பல

இன்றே விரையுங்கள் நீங்களும் அதிர்ஷ்டசாலியாகலாம்.

தினசரி காலை 8.00 - மாலை 6.00 வரை திறந்திருக்கும்.

175, K.K.S. Road, Jaffna. T.P - 021-5515, 021-7875






## ஆவது 11 பிறந்தநாள் வாழ்த்து

திரு.திருமதி யோகநாதன்- தவமணிதேவி தம்பதியரின்

செல்வப் புதல்வி சங்கவி

தனது பதினொராவது பிறந்தநாளை இன்று (07.12.2008) ஞாயிற்றுக்கிழமை நாகபூசணி இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அ ப்பா, அம்மா, ஆசை அண்ணா கார்த்தீபன், அம்மப்பா, அப்பம்மா பிரான்ஸில் வசிப்பவர்களான நடராஜா மாமா குடும்பம், தர்மராஜா மாமா குடும்பம், செல்வராஜா மாமா குடும்பம் லண்டனில் வசிப்பவர்களான சிறிஸ்கந்தராஜா மாமா குடும்பம், துரைராஜா மாமா குடும்பம், ஜேர்மனியில் வசிக்கும் சிவராஜா மாமா குடும்பம், கனடாவிலுள்ள குலச் சித்தப்பா குடும்பம், குகநாதன் சித்தப்பா குடும்பம், திலகச் சித்தப்பா, சூரி அத்தை - மாமா மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், நண்பிகள் நாகபூசணி அம்மன் துணை கொண்டு பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

நாகபூசணி இல்லம்,
சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி.

அப்பா
யோகநாதன்
(புலோலி)

## மாதாந்த உதவிப்பணம்

நவாலி, டிசெ.7

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் மற்றும் காசநோய், தொழுநோய் என்பவற்றிற்கான பணத்தினைப் பெறுபவர்களது டிசெம்பர் மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் அந்தந்த தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் பெற்றுக் கொள்ள முடியும் என்று சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.அருந்தவராசா தெரிவித்துள்ளார்.

(203-100)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
இராமசாமி
சிவக்கொழுந்து

திதி :நவமி

தோற்றம்: 25.11.1925

மறைவு: 19.12.2007

கருவறையிலேயே காற்றூட்டி
கண்விழித்து சீராட்டி
கண்ணியமாய் வளர்த்தாளாக்கிய
கடவுளவதாரமான எம் அன்னையே!

ஆண்டு தான் ஒன்றானாலும்
ஆறுவதில்லை எம் மனது உங்கள்
ஆத்மா ஆண்டவனின் பாதமடைய
ஆராதிக்கின்றோம் இன்று மட்டுமல்ல என்றுமே.

அம்பிகை ஸ்ரோர்ஸ்,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி வைத்திலிங்கம்
சரஸ்வதி (பாப்பி ரீச்சர்)

தோற்றம்: 08.01.1928

மறைவு: 19.11.2007

திதி: பூர்வபக்க தசமி (07.12.2008)

ஊனை உருக்கி உயிர்கொடுத்த உன்னத பிறப்பே
உருண்டது வருடம் ஒன்று உமைப் பிரிந்தே இருந்தும்
உங்கள் நினைவலைகள் எம் உள்ளத்திலிருந்து விழி நீராய் கசிகிறதே
தந்தைக்கு தந்தையாய் தாய்க்கு தாயாய்
எமக்காக இன்னல்கள் தாங்கி இடுக்கண் களைந்து
இன்னுயிர் நீத்த அன்புத் தெய்வமே அம்மா!
அப்பாவுடன் இணைந்து ஆண்டவனாய் இருந்து
நல்வழி காட்டுங்கள் எமக்கு.

உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
அருமை மகன் பிரதாபன் (லண்டன்)
பேறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

'தம்பலத்தனை',
துன்னாலை வடக்கு.

## சேதமடைந்த வீதிகளின் விபரம்சேகரிப்பு

நவாலி, டிசெ.7

வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் பெய்த பெரு மழை மற்றும் புயல் காற்றினால் சேதமடைந்த வீதிகளின் விவரங்களை அந்தந்தத்துறை சார்ந்த திணைக்களத்திடம் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலர் ரூபினி வரதலிங் கம் கேட்டுள்ளார்.

(203-100)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் கேட்டை நட்சத்திரம், விருச்சிக ராசி 1978 இல் பிறந்த B.B.A, MBA பட்டம் பெற்று கொழும்பில் வெளிநாட்டு நிறுவனமொன்றில் உயர் பதவியில் இருக்கும் மணமகனுக்கு 25 வயதிற்கு உட்பட்ட படித்த அழகிய மணமகள் தேவை. தொடர்பு: 0112594423

## இருபத்தோராவது ஆண்டு நினைவு நாள்



அமரர்

வே.த.தணிகாசலம்

(அதிபர்) குருமாமணி

மலர்வு: 12.09.1928

உதிர்வு: 07.12.1987

கண்களிலே கருணை வீசும் பார்வையும் கனிரென்ற கனிவான பேச்சும்
உள்ளமதில் பொங்கும் உவகையும் உத்தமரென மிடுக்கான நடையும்
கடமைதனில் தன்னிகரில்லாத் திடமும் கள்ளமில்லா கவரும் அன்புளமும்
இத்தனையும் தங்களின் தன்னிகரில்லாத தன்மையன்றோ.


உங்கள் பாசத்துடன் நினைவு கூரும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

இராஜஸ்தலம்,
அல்வாய்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டு விழா

யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்திலிருந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்த கீழ்வரும் 91 மாணவர்களையும் அவர்கள் வெற்றிக்கு அர்ப்பணிப்புடன் பங்களிப்புச் செய்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டிக் கௌரவிக்கும் விழா இன்று (07.12.2008) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்து சிறப்பிக்கின்றார். – சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர்.



**இடமிருந்து வலமாக (முதலாவது வரிசையில் இருப்பவர்கள்)**

01. வே.தவீசன்
02. செ.றுக்மாங்கன்
03. ற.சஞ்செயன்
04. க.சூரியா
05. கு.மகிழ்ருதன்
06. றெ.சர்வீயோ
07. கு.வெஸ்லி எட்மண்ட் சங்கீத்வதனன்
08. இ.டினோஜன்
09. க.கௌசிகன்
10. சி.றாகுலன்
11. கு.பிரசோபன்
12. அ.நிரூஜா
13. சி.தரண்ஜா
14. சி.தர்வீனா
15. பொ. ஜேன் சௌமியா
16. ந.சரண்ஜா
17. அ.ஜெறின்
18. கௌ.லிவிஷா
19. ஐ.சாம்பவி
20. சி.சிவனுஜா
21. ந.லலிதாயினி

**இடமிருந்து வலமாக (இரண்டாவது வரிசையில் நிற்பவர்கள்)**

01. பி.நர்மதா
02. மாதங்கி
03. ம.பிருந்தினி
04. த. நிதுர்ஷிகா
05. யோ.சங்கவி
06. ம.பிரியந்தி
07. உ.கஜீபா
08. அ.சாகித்தியா
09. ச.சுபாங்கினி
10. செ.அனாபவதாரணி
11. தே.நவனிதா
12. லி.அ.லியோனி தீப்தி
13. தே.பவித்திரா
14. யோ.சிவானி
15. க.ஜனனி
16. மோ. அனுஷிகா
17. வி.மொறின் ஷாமினி
18. நி.நிருபா
19. சி.கனகாம்பரி
20. து.பதுஷா
21. சு.சுபநிலா
22. சு.சிறிவித்தியா
23. அ.மதுர்த்தனா

**இடமிருந்து வலமாக (மூன்றாவதுவரிசையில் நிற்பவர்கள்)**

01. வி.சிகறஜன்
02. நா.பவித்திரன்
03. சு.டன்ஸ்ரன்
04. த.ஆஞ்செயன்
05. இ.சௌமியா
06. அ.அஜந்தி
07. த.சங்கவி
08. சு.சஜித்தா
09. ஜெ.சாருகா
10. கு.பிரகவி
11. யோ.கேசினி
12. க.மாதினி
13. வே.சாயிகா
14. கி.வாசுகி
15. ஜெ.ஆரபி
16. நா. வேணுஷன்
17. நி.நிரூஷன்
18. அ.ஜஸ்ரைன்
19. சி.றகுறாம்
20. ப.சாருஜன்
21. ச.துவாரகன்
22. நே.சரவணன்

**இடமிருந்து வலமாக (நான்காவது வரிசையில் நிற்பவர்கள்)**

01. பா.பாலரிஷாந்
02. ஸ். டினுஷாந்
03. மி.லக்சலன்
04. ஜோ.போல் பிரதீப்
05. அ.சாள்ஸ் அன்ரனி
06. பு. ரவிஷாந்
07. கோ.ஜெகஜீவன்
08. சி.ஜனுபன்
09. பா.ஆதித்தியன்
10. இ.சாரங்கன்
11. ம.சஞ்ஜீவன்
12. த.சிவபரன்
13. வி.விக்னகஜன்
14. உ.லஸ்மன்
15. செ.தனுஷன்
16. த.தனஞ்செயன்
17. சி.இந்துஜன்
18. சு.மைத்திரேயன் சர்மா
19. இ.மதுஷன்
20. சு.விஷ்வக்
21. பி.றொன்கிளவர்
22. ச.காருணியன்
23. கோ.பகிரங்கன்
24. ச.மதுஷன்

❀. லூ.லூசியா நிலோஜினி




விளம்பர அனுசரணை:

யாழ்.நகரில் சகல விதமான தொலை பேசி திருத்த வேலைகளுக்கும், புதிய கையடக்கத் தொலை பேசிகளை கொள்வனவு செய்யவும் நாடவேண்டிய ஒரே இடம்

Vins Phone Shop and Repairs.

205/1, Kasthuriyar Road, Jaffna.

205/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## 10ஆவது பிறந்தநாள் வாழ்த்தும்
### 2008ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பாராட்டு வாழ்த்தும்



**செல்வி ஜெகதீசன் சுவஸ்திகா**

இன்று (07.12.2008) ஞாயிற்றுக்கிழமை தனது 10ஆவது வயதில் காலடி வைக்கும் எமது அன்புச் செல்வத்தைக் கல்வியில் மேன்மேலும் பல சிறப்புகளைப் பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்பதுடன் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற அனைத்து வழிகளிலும் ஊக்கமளித்த யா/மத்திய கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் அன்பொளி கல்வி நிலைய ஆசிரியர் குழாமையும் எமது குடும்ப நண்பி செல்வி பற்குணசோதி (ஆசிரியை) அவர்களையும் மனதார வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்:
அன்பு அப்பா, அம்மா, அன்புத் தம்பி மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அம்பனை வாழ் அன்புள்ளங்கள்.

"இரட்ணஸ்கந்தம்",
அம்பனை மேற்கு,
சுன்னாகம்.
(80496)

## ஒத்துமாறல்

திருகோணமலையில் வடமாகாண அமைச்சின் கீழ் பணிபுரியும் பொது முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் தனது தாயாரின் சுகவீன நிலை காரணமாக அவசரமாக யாழ்.மாவட்டத்தில் வேலை செய்யும் ஒருவருடன் ஒத்துமாற விரும்புகின்றார். மனிதாபிமான அடிப்படையில் உடன் தேவை.

தொடர்பு: 077 5327181, 021 222 8834.

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், டிசெ.7

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடத்தப்படும் 2009ஆம் ஆண்டுக்கான மாவட்டமட்ட தொழில்திறன் டிப்ளோமா பயிற்சி நெறிக்கு ஆள்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சையில் தோற்றத்தவறிய விண்ணப்பதாரிகளுக்கென மீண்டும் நேர்முகப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

இந்தப் பரீட்சை நாளை திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.செயலகத்தில் உள்ள மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்களத்தில் நடைபெறவுள்ளது. (204-111)

## புதிய வருடத்திற்கான அனுமதிகள்

6th Anniversary

சர்வதேச தரத்திலான ஆங்கிலத்துடன் தமிழிலும்

**பாலர் பாடசாலை**

விசேட நிகழ்ச்சிகள்
English Concert, முத்தமிழ் விழா
ஒளி விழா, பட்டமளிப்பு விழா
மாணவர் சித்திரம்/ கைவேலை
கண்காட்சி, Sports Meet

கற்பித்தல் முறை :

- சர்வதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட Dr. Maria Montessori & Canadian Early Learning Method
- ஆங்கில மொழியில் சர்வதேச தரத்திற்கேற்ப பாடத்திட்டம்
- தாய்மொழி கட்டாய பாடம்.

Contact: 0773627055

Play Group - 2-3 years
Montessori - 3 -4 years
Pre-School - 4-5 years

பாடசாலைகள்

**BRITISH BUSINESS SCHOOL**

| | | |
|---|---|---|
| நல்லூர் (1) | : No : 140, Temple Road, Nallur, Jaffna. | Tel : 021 222 5796 |
| நல்லூர் (2) | : No : 34, சட்டநாதர் வீதி , Nallur, Jaffna. | Tel : 021 222 4060 |
| சுன்னாகம் | : Lakshmi Cottage ( Near the New Court), K.K.S Road, Mallakam. | |
| மானிப்பாய் | : 252, ஆனைச் சந்தி, Jaffna Road, Manipay. | |
| புலோலி | : ஸ்ரீ பத்மநாதன் இல்லம், மந்திகை. | |

## தேவை

OFF SET மெசின் மைண்டர். நேரில் வரவும்.
போஸ் கொம்பியூட்டர் பிறிண்டேஸ்
394, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
[பஸ்ரியன் சந்தி].

## முக்கிய கலந்துரையாடல்

2ஆம் கட்டப் பெயர்ப் பட்டியலில் தெரிவாகியும் இதுவரை நியமனம் கிடைக்காதவர்கள் நாளை (08.12.2008) திங்கட்கிழமை காலை 8 மணிக்கு யாழ்.பெருமாள் கோயில் முன்பாக ஒன்று கூடவும்.

பட்டதாரிகள்
செயற்குழு.
(80481)

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்லேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் செண்டர்
19, முருகேசர் லேன், நல்லூர்.
(80477)

## விற்பனைக்கு

5தொன் ஏற்றக்கூடிய புத்தம்புதிய (டாட்டா) ட்ரக் உடன் விற்பனைக்கு உண்டு

நல்லூர் பாம் செண்டர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

## வாடகைக்கு

யாழ்.நாவலர் வீதி (பருத்தித்துறை வீதிக்கு அருகில்). இல.266, மேல் மாடி வீடும், இல.149, கஸ்தூரியார் வீதியில் 40' அகலமும் 60' நீளமும் கொண்ட மேல்மாடி வீடும், அதன் உட்புறக் கடைகளும் உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 021 222 3479 (தவம்),
077 6042103. (80453)

## பிரத்தியேக வகுப்பு

தரம் 1-12 வரையான மாணவர்களுக்கு English Personal Class உம் Spoken with Grammer கற்க விரும்புபவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு: T.P.077 1372280 by: K.Karan
கருவேலடி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு.

## ஒன்றுகூடல்

நாவற்குழி, டிசெ.7

யாழ்.மாவட்ட முதியோர் உறுப்பினர்களுக்கான மாதாந்த ஒன்றுகூடல் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாவட்டசமூகசேவை அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக மாவட்டத்திட்ட இணைப்பாளர் ப.கிருபாகரன் அறிவித்துள்ளார்.

(204-288)

## விற்பனைக்கு

றொபின் சப்றா நீர் இறைக்கும் இயந்திரம் (5.3, Ey 20.3), கிருமிநாசினி தெளிப்பான் கருவி, பனசோனிக் - CD Player செற் (2400 w) ஆகியன உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: "சிவயோகபவனம்"
விழுந்தாலடி, கரணவாய் மத்தி, கரவெட்டி.
T.P.No: 077 8062615

## ஒத்துமாறல்

கொழும்பு - 12 தேசிய பாடசாலையில் கல்வி கற்பிக்கும் புவியியல் பட்டதாரி ஆசிரியர், யாழ்ப்பாணம் தேசிய பாடசாலை ஒன்றிற்கு ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்பு: 85, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.
077 3911229 (80514)

## யாழ் இந்து ஆரம்ப பாடசாலை



கவின் கலை மன்றம் பெருமையுடன் வழங்கும்

**"மழலைகள் அமுதம்"**

இறுவட்டு வெளியீட்டு விழா

இடம் : குமாரசுவாமி மண்டபம்,யாழ். இந்துக் கல்லூரி
காலம் : 07.12.2008
நேரம் : பி.ப 1.00 மணி

பிரதம விருந்தினர்
திரு.பா.செந்தில்நந்தன் (பிரதேச செயலர் - நல்லூர்)

அன்புடன் அழைக்கின்றோம்

தயாரிப்பு வெளியீடு:
கவின்கலை மன்றம்,
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

## 21ஆம் நாளில் நினைவு சுமக்கின்றோம்



**அமரர் செல்வராசா சதீஸ்**

[முன்னாள் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - சண்டிலிப்பாய்]

எம் உயிரினில் கலந்து
உணர்வினில் ஒன்றிவிட்ட
ஆருயிர் நண்பனே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளர்,
சமுர்த்தி அபிவிருத்தி
உத்தியோகத்தர்கள்.

வலயம் - 1
மானிப்பாய்.
(80499)

## மரண அறிவித்தல்



**திருமதி வள்ளியம்மை கனகசபை**

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் C1-G2 சொய்சாபுர பிளாட்ஸ், மொறட்டுவையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை கனகசபை 02.12.2008 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சு.கனகசபையின் (இளைப்பாறிய கிராம அலுவலர்) அன்பு மனைவியும், கேசவமூர்த்தி(கொழும்பு), மகேந்திரன்(முன்னாள் நெறியாளர் சபை உறுப்பினர், தெ.ப.நோ.கூ. சங்கம்), ஜெயேந்திரன் (கனடா), அருந்தவராணி(கொழும்பு), வசந்தினி (கனடா), அனுராதா(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சித்திரா(ஆசிரியை, உரும்பிராய் இந்துக்கல்லூரி), ரஞ்சினி(கனடா), கார்த்தவீரியன் (கனடா), யோகேஸ்வரன்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், அருண்முகன் (யாழ்.இந்துக்கல்லூரி), விதுரா(கனடா), சிஷாந்(கனடா), காயத்திரி (கனடா), தேனுகா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பத்மாவதி, பொன்னுத்துரை, நவரத்தினம், புவனேஸ்வரி பொன்மயிலைநாதன், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், குமரேசபிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2008) ஞாயிற்றுக்கிழமை கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் பி.ப 3மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கன்னாகட்டுவன் தெற்கு, சுன்னாகம்.
T.P 0602153537, 077 3145678.

தகவல் :
மகேந்திரன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருவெள்ளம், புயல் இரண்டும் இணைந்து மக்களைப் படுத்திய பாடோ பாடு.....!

**'நிஷா' புயலோடு சேர்ந்து பெய்த அடைமழையால் குடாநாட்டு மக்களின் வாழ்வாதாரமே ஆட்டங்கண்டுவிட்டது. மழையால் பாதிக்கப்படாதவர்கள் எவருமே இல்லை. எல்லோருக்கும் துன்பத்தை அள்ளிக் கொடுத்துவிட்டுச் சென்றுள்ளது பெருமழை. மழை ஓரளவு ஓய்ந்த போதிலும் வெள்ளம் வற்றாததால் நல்லூர், செட்டியார் தோட்டம் பகுதியைச் சேர்ந்த மக்கள் இன்னமும் நலன்புரி நிலையங்களிலேயே தங்கி உள்ளனர். அந்த மக்களின் உள்ளம் நெகிழவைக்கும் வெள்ளத்தால் ஏற்பட்ட கண்ணீர் தோய்ந்த அனுபவங்கள் இங்கே தொகுக்கப்பட்டுள்ளன.**

**ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கு நேர்ந்த அசாதாரண, அபூர்வ அனுபவங்களை 'உதயனில்' தொடர்ந்து படியுங்கள். இன்று நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள நொந்துபோனவர்களின் அவலங்களை அவர்களின் மொழியிலேயே தந்திருக்கிறோம்.**

### கழுத்தளவு வெள்ளத்தில் பிள்ளைகளைத் தூக்கியவாறு தப்பிய நல்லூர் செட்டியார்தோட்டக் குடும்பஸ்தர்

''மழை வந்த அண்டைக்குத் திரும்பவும் சுனாமிதான் வந்திட்டுதோ? எண்டுதான் நானும், என்ர மனுசியும் நினைச்சம். மழை வெள்ளத்துக்குள்ள நாங்கள் குடும்பத்தோட அழிஞ்சிருப்பம். ஏதோ கடவுள் புண்ணியத்தாலதான் நாங்கள் தப்பினாங்கள்''

என்று மழை வெள்ளத்தில் அகப்பட்டு உயிர்பிழைத்த கதையை நடுங்கும் குரலில் கூறினார் நல்லூர், செட்டியார் தோட்டத்தைச் சேர்ந்த துரைராஜா ஜெயக்குமார் (வயது34) என்கிற இளம் குடும்பஸ்தர். பெருமழையில் தானும் தன்னுடைய குடும்பத்தவர்களும் எப்படிக் கஷ்டப்பட்டனர் என்பதைச் சொல்லும் போதே வேதனையால் அவரது கண்கள் கலங்குகின்றன.

''எங்கட மண்வீட்டில சின்ன மழையெண்டாலே நிலமெல்லாம் ஊறத்தொடங்கிவிடும். இந்தப் பகுதி முழுக்கப் பள்ளம் எண்டதால மாரிகாலங்களில வெள்ளம் நிக்கிறது வழமைதான். ஆனாலும் வீடு, வாசலுக்குள்ள தண்ணி வாறேலை. இந்தமுறையும் மழை வரேக்குள்ள வழமைபோல வெள்ளம் போடத் தொடங்கிட்டுது. இது வழமைதானே எண்ட எண்ணத்திலே நாங்களும் கவனிக்கேலை. செவ்வாய்க்கிழமை பொழுதுபடுகிற நேரம் விதானையார் கொஞ்சப்பேரோட வந்து இஞ்சத்தை ஆக்கள் எழும்பி, வேற எங்கையாவதுபோய் இருக்கிறது நல்லதெண்டு

சுவர் அற்ற வீட்டில் ஜெயக்குமார்



சொன்னார். அப்பதான் கொஞ்சம் பயம் வந்தது. எண்டாலும் வெள்ளம் வீட்டுக்குள்ள வராதுதானே எண்ட நம்பிக்கையில இருந்திட்டம். ஆனால் நேரஞ்செல்லச் செல்ல மழையோட, காத்தும் சுழண்டு சுழண்டு அடிக்கத் தொடங்கிட்டுது. மரமெல்லாம் பேயாட்டம் ஆடத்தொடங்கிட்டுது. வீட்டுக்குப் பக்கத்தில நிக்கிற மரங்கள், கூரைக்குமேல விழுந்திடுமோ எண்டு பயமாக்கிடந்திது.

ஆனாத் தெய்வாதீனமாக அப்பிடியொண்டும் நடக்கேலை. இரவு ஒரு ஒன்பது மணிபோல வீட்டுக்குள்ளே 'குபுக்'கெண்டு வெள்ளம் வரத்தொடங்கிட்டுது. எனக்கும், மனுசிக்கும் என்ன செய்யிறதெண்டே தெரியேலை. சாமான் போனாப்போகட்டும். பிள்ளையளைத் தண்ணிக்க நனைய விடாமல் வைச்சிருந்தால் காணுமெண்டு நினைச்சு என்ர ரண்டு கைக்குழந்தைகளையும் தூக்கி கையில வைச்சிருந்தன்.

தண்ணி மட்டம் கூடிக்கொண்டே வந்திது. ஒரு கட்டத்தில என்ர இடுப்புக்குமேல தண்ணி வந்திட்டுது. அப்பவும் என்ர பிள்ளையளை நான் தண்ணிக்க நனைய விடாமல் தூக்கித்தான் வைச்சிருந்தன். கையெல்லாம் பயங்கர வலி. கிட்டத்தட்ட ரண்டு கையும் வலியாலயும், குளிராலையும் விறைச்சுப் போச்சுது. பிள்ளையளைக் கொண்டு இருட்டுக்குள்ள, கழுத்தளவு வெள்ளத்துக்கால என்னெண்டு வெளியால தப்பிப் போறதெண்டு நானும், மனுசியும் யோசிச்சுக் கொண்டிருந்தம். அப்ப மழைத்தண்ணி ஊறி, எங்கவீட்டு மண்சுவர் இடிஞ்சு என்ர மனுசிக்குமேல விழுந்திட்டுது.

ஒருமாதிரி அவா சுவரைத் தள்ளிப்போட்டு எழும்பிட்டா. அதுக்குப் பிறகு எங்கட வீட்டுக்குப் பின்பக்கம் இருக்கிற மதில் பாய்ஞ்சு, நல்லூர் கல்வித்திணைக்களக் கட்டடத்துக்குள்ளபோய் இருப்பமெண்டு வெள்ளத்துக்குள்ளால மதிலுக்குக்கிட்ட போனம். மதில் பாய்வமெண்டு அதில கையை வைச்சா, மதிலும் பாறுண்டு விழுந்திட்டுது. ஒருவகையில அதுவும் நல்லதாய் போட்டுது. இல்லாட்டி சின்னப் பிள்ளையளோட மதில் பாய்ஞ்சுபோகக் கஷ்டமாய் இருந்திருக்கும். மதில் உடைஞ்சதால கல்வித்திணைக்களக் கட்டடத்திற்கு கெதியாய்ப் போக முடிஞ்சுது.

இந்த மழைவெள்ளத்தில சிக்கித் தப்பினதை இப்பநினைச்சாலும் கனவு மாதிரித்தான் கிடக்குது. எங்கட வீட்டுச் சாமானெல்லாம் வெள்ளத்தில சேதமானாலும், எங்கட குடும்பத்தில எல்லாரும் ஒரு சேதாரமும் இல்லாமல் தப்பினதை நினைக்க ஆறுதலாக்கிடக்கு'' என்று வெள்ள அனுபவத்தைக் கூறி முடித்த ஜெயக்குமாரின் வீடு இன்னமும் சுவர்களற்று வெறும் எலும்புக்கூடாகவே காட்சியளிக்கின்றது.

### கர்ப்பிணியான மகளைக் கழுத்தளவு வெள்ளத்தில் தூக்கிவந்த புற்றுநோயாளித் தந்தையின் பாச உணர்வு.........

*பாஸ்கரன் சிவரூபி (வயது - 36)*

நாங்கள் கொஞ்சக் காலத்துக்கு முதல்தான் இந்தியாவில இருந்து வந்தனாங்கள். அதாலை எங்கட வீடு மழை வெள்ளத்தை தாங்கக் கூடிய மாதிரி இல்லை. அப்பிடியிருக்க மழையோட புயலும் வந்தால் அது எப்பிடித் தாங்கும்? கூரைக்குக் கட்டியிருந்த 'தறப்பாளெல்லாம்' கழண்டுபோகத் தொடங்கிட்டுது.

அதோட வெள்ளம் கூடக்கூட, நிலத்துக்குப் போட்ட ஊரியெல்லாம் ஊறித்தண்ணி கசியத் தொடங்கிட்டுது. அதால கதிரைக்குமேலைதான் நித்திரை முழிச்சபடி இருந்தம். நாங்கள் பாத்துக் கொண்டு இருக்கேக்கையே வெள்ளம் கொஞ்சம் கொஞ்சமாக மேல வரத் தொடங்கிட்டுது. ஒரு கட்டத்தில் வீட்டுக்குள்ள எங்கட இடுப்பு மட்டத்துக்குத் தண்ணி வந்திட்டுது.



வீட்டுக்குள்ளதான் இப்பிடி. வெளியில- நாங்கள் போற பாதையில-கழுத்தளவுக்குத் தண்ணி வந்திட்டுது. வீட்டுச்சாமான்கள் எல்லாம் தண்ணிக்குள்ள நல்லா நனைஞ்சு, தோய்ஞ்சிட்டுது. பிளாஸ்டிக் பாத்திரங்களெல்லாம் வெள்ளத்தில மிதந்துபோய்க் கொண்டிருந்திது. இனியும் வீட்டுக்குள்ள இருந்திருந்தால், வெள்ளத்துக்குள்ள மூழ்கிச் செத்திருப்பம்.

நடக்கிறது நடக்கட்டுமெண்டு வெள்ளத்துக்கால வரத்தொடங்கிட்டம். என்ரமகள் ஏழுமாசக் கர்ப்பிணி. என்ர அவருக்கும்(கணவருக்கும்) புற்றுநோய். ஆனால் வெள்ளத்தைக் கடந்து போகவேணுமெண்ட பயத்தில கர்ப்பிணியான என்ர மகளை, புற்றுநோயாளியான என்ர கணவர்தான் கழுத்தளவு வெள்ளத்துக்கால தூக்கிக் கொண்டுவந்தவர். வழமையாய் படுக்கையில கிடக்கிறவர், மகளைப் பத்திரமாகக் கொண்டுபோய்ச் சேர்க்க வேணும் எண்டதால வெள்ளத்துக்கால கஷ்டப்பட்டு மகளைச் 'சேர்ச்சு'க்குத் தூக்கிக் கொண்டு வந்தார். அதுக்குப்பிறகு சேர்ச்சிலயும், பிறகு இந்தப் பள்ளிக்கூடத்திலையும் தான் ஒதுங்கி இருக்கிறம்.

வெள்ளம் வந்து பத்து நாளாச்சு. ஆனா இன்னும் எங்கட வீடு வாசல்ல முழங்கால் அளவுக்குத் தண்ணி நிக்குது. அதோட இந்த மழை வெள்ளத்துக்குப் புற்றுகளில் இருந்த பாம்புகள், கொடுக்கன், மட்டத்தேள் எல்லாம் வீடுகளுக்குள்ள வந்திட்டுது. அதால இப்ப வீடுகளுக்குள்ள கால் வைக்கவே பயமாக் கிடக்குது. இண்டைக்கும் வீட்டில போய் உதுகளை (விஷ ஜந்துக்களை) அடிச்சுப் போட்டுத்தான் வாறன். எண்டாலும் அதுகள் குறையிற மாதிரி இல்லை.

சந்திப்பும், படங்களும்:
- ஔவையன், நேசன் -

### சோறு போட்ட ஓட்டோ வெள்ளத்தில் நாசம்; திருடர்களின் கைவரிசை மற்றொரு அநியாயம்!

*அருமைத்துரை மகேஸ்வரி (வயது - 54)*

வெள்ளம் திடீரெண்டு கூடினதால எங்கபோறதெண்டு எங்களுக்குத் தெரியேலை. பிறகு வீட்டில உள்ள சாமான்களையெல்லாம் உயரமான இடங்களில தூக்கி வைச்சிட்டு, அவசியமான கொஞ்சப் பொருள்களோட 'சேர்ச்' பக்கமாக வெளிக்கிட்டம்.



அதுக்குள்ள வெள்ளம் இன்னும் கூடிட்டு. முதல்ல நாங்கள் எங்கட ஓட்டோவிலதான் சேர்ச்சுக்குப் போக நினைச்சனாங்கள். ஆனால் வெள்ளம் கூடினபடியால ஓட்டோவை ஒழுங்கையில இறக்கவே முடியாத நிலமை. அதால ஓட்டோவை வீட்டிலேயே விட்டிட்டு, நாங்கள் மட்டும் சேர்ச்சுக்குப் போட்டம்.

அடுத்தநாள் வந்து பார்த்தால், ஓட்டோவை வெள்ளம் [illegible] காலமும் எங்களுக்குச் சோறு போட்டது அந்த ஓட்டோதான். இப்ப அதுவே வெள்ளத்தால நாசமாப்போட்டுது. இனி அதைத் திருத்தினாலும் பாவிக்க முடியாது.

வெள்ளத்தால வந்த அழிவு பத்தாதெண்டு, கள்ளரும் இந்த மழையில தங்கட கைவரிசையைக் காட்டிப் போட்டாங்கள். வீட்டில வெள்ளத்துக்குப் பயந்து எடுத்து வைச்ச பெறுமதியான பாத்திரங்களையெல்லாம் கள்ளர் கொண்டு போட்டாங்கள். இனி வீட்டுக்குத் திரும்பிப் போனாலும் சமைச்சுச் சாப்பிடப் பாத்திரமில்லை.

சனங்கள் உயிரைக் கையில பிடிச்சுக் கொண்டு ஓடுற நேரத்திலகூட இப்பிடியான வேலை (திருட்டு) செய்ய எப்பிடித்தான் மனம் வருகுதோ?

### வெள்ளத்தில் நனைந்த துணிகளை எத்தனை நாளைக்கு உடுக்கலாம்.........?

*அன்ரனி பெனான்ஸா சுபாஜினி (வயது - 33)*

ஏற்கனவே நாங்கள் கஷ்டப்பட்ட ஆக்கள். இப்ப மழைவந்து எங்களை இன்னும் கஷ்டத்துக்குள்ள தள்ளி விட்டுட்டுது.



நானும்,நாலு பிள்ளையளும் தனிய இருக்கிறதால வெள்ளம் பெரிசா வரமுன்னமே வெளிக்கிட்டுட்டம். ஆனா எங்கட துணிமணியெல்லாம் மழை வெள்ளத்தால நனைஞ்சு போச்சுது. இப்ப மாத்துடுப்புக்குக்கூட இல்லாமல் இருக்கிறம். வெள்ளத்தில நனைஞ்ச துணியளை எவ்வளவுதான் தோய்ச்சுப் போட்டாலும், அந்த உடுப்புகளில துர்நாற்றம்தான் வருகுது.

எங்களுக்கு பாய், போர்வை, சமைத்த உணவு, நுளம்புவலை இதுகள் எல்லாம் நிறுவனங்கள் மூலமாக் கிடைச்சிருக்கு. ஆனால் உடுபுடைவை இல்லாமல் தவிக்கிற எங்கட கஷ்ரத்தைப்போக்க, ஒருத்தரும் உடுப்புகள் தரேலை. என்னை மாதிரி உடுப்புகள் இல்லாமல் கஷ்ரப்படுற, வெள்ளத்தாலை பாதிக்கப்பட்ட ஆக்களுக்கு இந்த நிறுவனங்கள் உடுப்புகளும் தந்தால் உதவியாய் இருக்கும்.

### பலரின் உயிர்களைக் காப்பாற்றிய வாழைக்குற்றி மிதவை.

*திருமதி வேலுப்பிள்ளை லங்காதேவி (66 - வயது)*

''வயரால் கட்டித் தொடுக்கப்பட்ட வாழைக் குற்றிகள்தான் அன்றைக்கு பலருடைய உயிரைக் காப்பாற்றியது'' என்று எங்களை அழைத்து, வீதியோர மாய், அநாதையாய்க் கிடந்த வாழைக்குற்றித் தெப்பத்தைக் காட்டினார் திருமதி வேலுப்பிள்ளை லங்காதேவி. மழைநாளில் நடந்த சம்பவங்களை அவர் தொடர்ந்தும் விவரித்தார்.



''என்னுடையது கல்வீடு அதனால் என்னுடைய வீட்டுக்கு வெள்ளம் வராது என்று தான் நினைத்தேன். ஆனால் இரவு ஒன்பது மணிக்கே வீட்டுக்குள் வெள் ளம் வரத் தொடங்கிவிட்டது. திடீரென எங்கள் வீட்டுக்கு அயலில் உள்ள பலர் உதவி கோரி அலறு வதும் கேட்டது. அப்போது தான் எனக்கு நிலைமை யின் விபரீதம் உறைக்கத் தொடங்கியது.

வீடுகளைச் சூழ்ந்து, வெள்ளம் காணப்பட்டதால் பலர் வெளியே வரமுடி யாது தவித்தனர். அதிலும் வீட்டில் குழந்தைகள் உள்ளவர் கள் அதிகமாய் கஷ்ரப்பட்டார்கள். அந்த வேளையில் எமது ஊரில் உள்ள சில இளைஞர்கள் வாழைக்குற்றிகளை 'வயரால்' இணைத்துக்கட்டி ஒரு மிதவையை உருவாக்கினார்கள். அதன் மூலம் வெளியேற முடியாது தவித்த பலரை மீட்டெடுத்தார்கள். இந்த வாழைக்குற்றி மிதவை மட்டும் இல்லாவிட்டால் இந்தப் பகுதியைச் சேர்ந்த பலர், குறிப்பாகச் சிறுவர்கள் உயிரிழந்திருப்பார்கள்'' என்று அவர் கூறி முடித்தார். பலரின் உயிரைக் காப் பாற்றிய அந்த வாழைக் குற்றி மிதவை இப்போது உருக் குலைந்துபோய், வெயிலில் காய்ந்தபடி இருக்கின்றது. ****************

இதுதான் அந்த வாழைக்குற்றி மிதவை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபமங்களகரமான சர்வதாரி வருடம் கார்த்திகைத் திங்கள் 23ஆம் நாள் (08.12.2008) திங்கட்கிழமை மு.ப. 11 மணி 2 நிமிடம் முதல் 12.34 மணிவரையுள்ள ஏகாதசி திதியும் சித்த யோகமும் ரேவதி நட்சத்திரமும் கூடிய கும்பலக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**சுரேந்திரன்**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**மேனகா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயிக்கப்பெற்று திருமணவைபவம் வட்டுக்கோட்டை இந்து இளைஞர் வாலிப மண்டபத்தில் (Y.M.H.A) நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் மதிய விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே நாடும்:

திருமதி யோ.வயிரவநாதன்,
அராலி தெற்கு, மாதாங்கோயிலடி,
வட்டுக்கோட்டை.

(இரு வீட்டார் அழைப்பு)

திருமதி க.ஜெயராசசேகரம்,
சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

(80512)

---

வருட இறுதியை முன்னிட்டு

## யாழ்.நகரில் பிரமாண்டமான மலிவு விற்பனை

புதிய கல்வியாண்டில் காலடி பதிக்கும்
மாணவ மணிகளே! ஆசிரியப் பெருந்தகைகளே!
புதிய கல்விச் செயற்பாட்டை ஆரம்பிக்குமுன் நீங்கள்
விஜயம் செய்ய வேண்டிய ஒரே இடம்

## "ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்"

*212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்*

* தரமான, குறைந்த விலையிலான அப்பியாசக்கொப்பிகள்.
* மற்றும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள்.
* உயர் கல்விக்கான பாடப் புத்தகங்கள்.
* மருத்துவத்துறை மாணவர்களுக்கான புதிய வெளியீட்டுப் புத்தகங்கள்.
* உங்கள் பொழுதை இனிதாகக் கழிக்கத்தகு கதைப்புத்தகங்கள்.
* ஆய்வு கூட உபகரணங்கள்.
* மக்னெற் போட் வகைகள்.
* இசைத்துறையை மெருகூட்டும் இசை (சங்கீத) உபகரணங்கள்.

அனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
விசேட கழிவு விலையில்
பெற்றுக்கொள்ள உடன் விரையுங்கள்!
*இச்சலுகை மிகக்குறுகிய காலத்திற்கு மட்டுமே!*
(சனி, ஞாயிறு கிழமைகளில் முழுமையாகக் கடை திறந்திருக்கும்).

(சி/555896)

---

உலகப் புகழ்பெற்ற ஆன்மீககுரு
தவத்திரு **ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்** அவர்களின்



## வாழும் கலைப்பயிற்சி - பாகம் I

*(பிராணாயாமம், பாஸ்திரிகா, மிக இலகு யோகாசனம், சுதர்ஸன கிரியா எனும் சிறப்பு மூச்சுப் பயிற்சி உள்ளடக்கியது)*

## இணுவிலில்

* மன இறுக்கம், மன உளைச்சல், விரக்தி, சோம்பல் நீங்கி புத்தாக்கம் பெற்றிட
* நோய்கள், உபாதைகள் நம் உடலை விட்டு நீங்கிட
* உயிர்சக்தியை அதிகரிக்கச்செய்து விழிப்புணர்வை கூர்மையாக்க
* தன் சக்தி அறிந்து ஆன்மீக வழியில் செவ்வனே பணி செய்ய

அறிமுக உரை

இடம்: **பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் மணி மண்டபம், இணுவில்**
காலம்: நாளை 08.12.2008 திங்கட்கிழமை
நேரம்: **பிற்பகல் 3.30**

*பயிற்சி முற்றிலும் இலவசம்*

பயிற்சி நாள்கள்: **09.12.2008 (செவ்வாய்) முதல் 14.12.2008 (ஞாயிறு) வரை**
**காலை 6.30 - 8.30 அல்லது மாலை 3.30 - 5.30**

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

## யாழ்ப்பாணத்தில்

## YES பயிற்சி

**(Youth Empowerment Seminar)**

*(14 முதல் 18 வயதுடையவர்களுக்கு)*

*பயிற்சி முற்றிலும் இலவசம்*

இடம் : **கம்பன் கோட்டம், நல்லூர்**
பயிற்சி நாள்கள்: **08.12.2008 (திங்கள்) முதல் 13.12.2008 (சனி) வரை**
நேரம் : **முற்பகல் 10 - 12**
*குறிப்பு:* பயிற்சிகளுக்கு எவ்விதக் கட்டணமும் இல்லை

(80520)

*மேலும் விவரங்களுக்கு:*
**சர்வதேச வாழும் கலை அறநிறுவனம்,**
*யாழ்ப்பாண மையம்.*
தொ.பே.: 077 9434 879, 077 9749346

---

# சாவகச்சேரியில் நின்ற பழைமை வாய்ந்த மரங்கள் வேருடன் சாய்ந்தன

யாழ்ப்பாணம்,டிசெ.7

சாவகச்சேரி பொதுச் சந்தையில் 80 வருடங்கள் பழைமை வாய்ந்த அரசமரம் 'நிஷா' காற்றின்போது வேருடன் சாய்ந்தது.

நகர வர்த்தகர்களுக்கென நகரசபையினால் அப்பகுதியில் அமைக்கப்பட்ட மிதி வண்டி பாதுகாப்பு நிலையத்தின் மீது மரம் சாய்ந்ததில் பாதுகாப்பு நிலையம் முழுமையாகச் சேதமடைந்தது.

மேலும் 'நிஷா காற்றினால் சாவகச்சேரி - கனகன்புளியடி வீதியில் கிராம்புவில் பகுதியில் 100 வருடம் பழைமை வாய்ந்த அரச மரமும், மீசாலை புதிய புகையிரத நிலையத்திற்கு அருகில் நின்ற 50 வருடம் பழைமை வாய்ந்த அரச மரமும், நுணாவில் 190 ஏற்றத்தடியில் நின்ற பழைமை வாய்ந்த மருத மரமும் வேருடன் சாய்ந்துள்ளன. (202-207)

# கியூடெக்குக்கும் பாதிப்பு

வண்ணை,டிசெ.7

தன்னார்வத் தொண்டு நிறுவனமான கரித்தாஸ் - கியூடெக் நிறுவனமும் 'நிஷா' புயலால் பாதிக்கப்பட்டுள்ளது.

கரித்தாஸ்-கியூடெக் நிறுவனம் அமைந்துள்ள யாழ்.மத்தியூஸ் வீதி 5 அடி வெள்ளத்தில் இருநாள்கள் மூழ்கி இருந்தது.

அந்த நேரங்களிலும் மழைவெள்ளம் மற்றும் புயலால் பாதிக்கப்பட்டு பாடசாலைகளில் தஞ்சமடைந்த மக்களுக்கு சமைத்த உணவு வழங்கியது கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம்.

நிறுவனத்தின் கூரைகள் சேதமடைந்து உள்ளே இருந்த கணனிகள், தளபாடங்கள் மற்றும் ஆவணப் பொதிகள் அனைத்தும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-160)

---

## ஈராண்டு நினைவலைகள்



அமரர்
**இறங்கநாதன் பிரபாசங்கர்**
(குஞ்சுபபி)

*மண்மகிழ 16.03.1967*
*மனம் நெகிழ 30.11.2006*

அன்புக்கு அணிகலமாய் பாசத்திற்கு இருப்பிடமாய்
பொறுமையின் பொக்கிஷமாய்
உறவுக்கெல்லாம் உற்றதுணையாய் நின்று
வாழ்ந்து காட்டி எல்லோரையும் தவிக்கவிட்டு
சென்று இரண்டு ஆண்டுகள் சென்றதுவே அப்பா.


உசன் தெற்கு, மிருசுவில். குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்கள்

### *பரராஜசிங்கம் ஸ்ரீகுமார் (வவி)*

(பனை அபிவிருத்திச் சபை ஊழியர்)



அரியாலை, சுப்பிரமணியம் வீதியைப் பிறப்பிடமாகவும் கனகரத்தினம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பரராஜசிங்கம் ஸ்ரீகுமார் நேற்றுமுன்தினம் (05.12.2008) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் றூபிமதியின் அன்புக் கணவரும் அமரர் பரராஜசிங்கம் மற்றும் இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் செல்லத்துரை - அமரர் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சந்திரகுமார் (வவுனியா), ஜெயக்குமார் (வவுனியா), சாந்தினி, தர்சினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சங்கர் (நோர்வே), சுமதி (லண்டன்), றமேஸ் (லண்டன்), லாவண்யா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் யாழ்.பரியோவான் கல்லூரி மாணவர்களான டிலக்சன், பிரகாசன், தனுஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2008) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 9 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*16/1, கனகரத்தினம் வீதி, அரியாலை.* (80515) *மனைவி* - **றூபிமதி, பிள்ளைகள்.**

### *பாலானந்தன் பரமானந்தன்*



பருத்தித்துறை, தும்பளையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட பரமானந்தன் (01.12.2008) திங்கட்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலானந்தன் மற்றும் இரங்கநாயகி தம்பதியரின் பாசமிகு மகனும் றஞ்சிதமலரின் அன்புக் கணவரும் றஞ்சித்தின் பாசமிகு தந்தையும் சிவானந்தன், சச்சிதானந்தன், சதானந்தன், நித்தியானந்தன், வசந்தாதேவி, சகுந்தலாதேவி, பத்மாதேவி, லலிதாதேவி, சகிகலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற ஜெகதாஸ் மற்றும் சிவஞானம், சந்திரசேகரம், ரவீந்திரன், றீதிதேவி, சிவமணி, நிர்மலாதேவி ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.12.2008) திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு அறியத் தருகின்றோம்.

*நெல்லண்டை, தும்பளை,*
*பருத்தித்துறை - 077 4672492*
T.P.*0049 2086291198* (80524)

தகவல்:
**குடும்பத்தினர்.**

---

## மரண அறிவித்தல்

### *விஸ்வலிங்கம் அரியரத்தினம்*

கல்வியங்காடு, 3ஆம் கட்டையைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் அரியரத்தினம் (05.12.2008) வெள்ளிக்கிழமை திருகோணமலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - மகேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் - மகேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட மருமகனும் ஈஸ்வரிதேவியின் அன்புக் கணவரும் கல்யாணி, கற்பகம் (உதவி நூலகர் - திருமலை வளாகம்), பரதன் (தாய்லாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும் சண்முகரத்தினம் (சட்டத்தரணி), சுதாகர் (தீயணைப்புப் பிரிவு, திருமலை கடற்படை), ஆன்மேரி ஆகியோரின் அன்பு மாமனும் பாரதி (கொழும்பு பல்கலைக்கழகம்), ரிஷிவர்மன், யுக்தேஸ்வர், பைரவி, சந்தியா, பெவெளி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.12.2008) திங்கட்கிழமை இல.35/4, டொக்யாட் வீதி, திருகோணமலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருகோணமலை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
G.P.S.*ஒழுங்கை, கல்வியங்காடு.* (80521) ***சீ.அருணகிரிநாதன் (மைத்துனர்).***

---

## விற்பனைக்கு

11மாதம் நிரம்பிய நல்லின மறிக்குட்டி 2 உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: *17/1, பிறவுண் வீதி, 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.*

(80518)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், மகம், வயது 27, குற்றமற்ற ஜாதகம், படித்த குடும்பப் பாங்கான அழகான பெண்ணுக்கு நன்கு படித்த உள்நாட்டில் நிரந்தர வேலையுள்ள நற்குணம் நிறைந்த மணமகன் தேவை.

*தொடர்புகளுக்கு:* 077 9297244 or 011 2943823
*(மாலை 5 மணிக்குப் பின்பு)*

(சி/555901)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியர்
திரு.ந.கந்தவனச்செல்வன்
அவர்களின் அன்பு மாமனார்
அமரர் **சுப்பிரமணியம் சுந்தரலிங்கம்**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் சமூகம்
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.**

(80528)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அரசின் நெருக்குவாரங்களால் வன்னி மக்கள் பேரவல நிலையில்!

வன்னிப் பெருநிலப்பரப்புமீது இலங்கை அரசுப் படைகள் தொடுத்திருக்கும் கொடூர யுத்தம் காரணமாக அப்பகுதித் தமிழ் மக்கள் அனுபவிக்கும் சொல்லொணாத் துன்ப துயரங்கள் சொல்லில் வடிக்க முடியாதவை.

தமிழர் தாயகம் தனது இறைமைக்கு உட்பட்ட பிரதேசம் என்று உரிமை கோரிக் கொண்டே அதன்மீது கொடூர யுத்தத்தைத் தொடுத்திருக்கின்றது இலங்கை அரசு.

ஒருபுறம் குரூர யுத்தத்தின் பேரழிவுகள். மறுபுறம் அத்தியாவசியப் பொருள்களைக்கூட அங்கு எடுத்துச் செல்லவிடாமல் போடப்பட்டிருக்கும் தடையால் எழுந்துள்ள மோசமான நெருக்கடி மருத்துவ, சுகாதாரப் பாதிப்புகள், வெள்ளப் பேரனர்த்தத்தால் ஏற்பட்டுள்ள பேரவலம். இப்படி மீளமுடியாத நெருக்குவாரங்களுக்குள் சிக்கி சின்னாபின்னமாகித் துவண்டுபோய்க் கிடக்கின்றார்கள் வன்னிப் பெருநில மக்கள்.

ஒரு நேரம் கண்ணயர்ந்து தூங்குவதற்குக்கூட பாதுகாப்பான தங்குமிட வசதியில்லை; உணவில்லை, உடையில்லை, உறங்க இடமில்லை, மருத்துவ, சுகாதார வசதிகள் இல்லை. காட்டில் மரங்களின் கீழும் புதர்களிடையேயும் தங்கி அவலப்படும் அவலம் நீடிக்கின்றது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழும் நான்கு லட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கு ஒரு மாதத்துக்குரிய உணவுப் பொருள்களையாவது அங்கு எடுத்துச் செல்வதாயின் குறைந்தபட்சம் நானூறு லொறிகள் தேவைப்படும். இதுதான் பொதுவான கணிப்பீடு.

ஆனால் ஒக்ரோபர் மாதத்தில் ஆக இருநூற்று நாற்பத்து மூன்று லொறிகளிலும், நவம்பர் மாதத்தில் ஆக நூற்றியெட்டு லொறிகளிலும் மட்டுமே பொருள்களை அங்கு எடுத்துச் செல்ல படைத்தரப்பு அனுமதித்திருக்கின்றது. ஆக, அரைவயிற்றுக்குத் தேவையான பொருள்கள்கூட அங்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படவில்லை என்பதே உண்மை.

அத்தியாவசியப் பொருள்களை அங்கு எடுத்துச் செல்ல கொழும்பில் அனுமதி வழங்கப்பட்டாலும் பெரும்பாலான அத்தியாவசியப் பொருள்கள் படையினரின் சோதனைச் சாவடிகளைத் தாண்டி எடுத்துச் செல்லப்பட அனுமதிக்கப்படுவதில்லை என விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இவ்வாறு வெளிப்படையாகவன்றி - ஒளிவுமறைவாக - தடைவிதிக்கப்பட்டுள்ள பொருள்களில் மக்களின் ஆடை, உடுபுடைவை வகைகளும் அடங்குகின்றன என வன்னித் தகவல்கள் கூறுகின்றன.

தற்சமயம், வன்னி மக்களுக்காகத் தமிழகம் அனுப்பி உதவியுள்ள அத்தியாவசியப் பொருள்கள், செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மூலம் எடுத்துச் செல்லப்பட்டு வன்னி மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. மொத்தம் சுமார் எண்பத்தியையாயிரம் பொதிகளில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் உடைகளை தமிழகம் வன்னிக்கு முதல்கட்டமாக வழங்கியிருந்தது.

இந்த எண்பத்தியையாயிரம் பொதிகளில் வெள்ளி மாலை வரை சுமார் முப்பதாயிரம் பொதிகள், வன்னி மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை எல்லாம் உணவுப் பொருள்களே. உடை, உடுபுடைவைகள் அடங்கிய பொதிகள் இன்னும் வன்னிக்குள் எடுத்துச் செல்லப்பட்டன என்ற தகவல் இல்லை. பொதுவாக உடைகள், உடுபுடைவைகளை வன்னிக்குள் எடுத்துச் செல்லவிடாமல் தடுத்துவரும் படைத்தரப்பு அதே கட்டுப்பாட்டைத் தமிழக மக்கள் வழங்கிய அன்பளிப்பு விடயத்திலும் கடைப்பிடிக்கின்றதா என்பது தெரியவில்லை. போகப்போகத்தான் நிலைமை வெளிச்சத்துக்கு வரும்.

வன்னி மக்கள் இப்படிக் கஷ்டப்பட அவர்களின் நிவாரண மற்றும் நிர்வாக விடயங்களைக் கவனிக்கும் உள்ளூர் அரச அதிகாரிகளுக்கு அரச உயர்பீடம் கண்டிப்பான உத்தரவு ஒன்றையும் விடுத்திருப்பதாக அறிய வருகின்றது. வன்னி மக்களின் அவல நிலையை உள்ளூர் அரச அதிகாரிகள் புள்ளி விவரங்களுடன் வெளியுலகுக்கு அம்பலப்படுத்தி விடுவார்களோ என்ற அச்சத்தில் மூழ்கிக் கிடக்கும் அரசுத் தலைமை, அதைத் தடுக்கவே இத்தகைய நடவடிக்கைகளை கையாள்வதாக - கட்டுப்பாடுகளை விதிப்பதாக - நம்பப்படுகின்றது.

வன்னி மக்களின் தேவை மற்றும் உதவிகள், நிவாரணங்கள் ஆகியவை குறித்து அரசுக்கு மட்டுமே தெரிவிக்க வேண்டும் என்ற கடுமையான உத்தரவு சம்பந்தப்பட்ட மாவட்ட அரச அதிபர்களுக்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரால் விடுக்கப்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

வன்னி மக்களை யுத்த அவலத்துக்குள்ளும், பொருளாதாரத் தடை, பொருள் விநியோகக் கட்டுப்பாடுகள், மருத்துவ - சுகாதார வசதியின்மை போன்ற நெருக்கடிகளுக்குள்ளும் தள்ளிக் கொடுமைப்படுத்தும் கொழும்பு அரசு, அதுபற்றிய புள்ளி விவரத் தகவல்கள்கூட வெளியுலகுக்கு எட்டாமல் கட்டுப்படுத்தி, உண்மைகளை மறைப்பதில் மும்முரமாக இருக்கின்றது என்பதற்கு இந்த விடயம் நல்ல உதாரணம்.

வன்னித் தமிழ் மக்களின் இந்தப் பேரவல நிலைமை குறித்து சர்வதேச சமூகம் கவனம் எடுக்குமா?

# யுத்தநிறுத்த முயற்சியில் இலங்கை - இந்திய அரசுகள் ஈடுபடுமானால் ஐ. தே. கட்சி தடையாக இருக்காது!

## ஊடகவியலாளர் மாநாட்டில் ரணில் கருத்து

கொழும்பு, டிச.07

யுத்தநிறுத்தம் குறித்து இலங்கை - இந்திய அரசுகள் கலந்தாராயுமிடத்து அதற்குத் தடையாக ஐக்கிய தேசியக் கட்சி செயற்படாது. யுத்தத்தை வைத்து அரசியல் நடத்திக் கொண்டிருக்காமல் அதற்கு விரைவில் முடிவுகண்டு மக்களின் துன்பங்களுக்குத் தீர்வுகாண வேண்டும்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, அப்துல், காதர், கபீர் ஹாஸிம், ஜோன் அமரதுங்க உட்பட பலரும் பங்கேற்றனர்.

இலங்கையில் யுத்த நிறுத்தம் தொடர்பாகப் பேசுவதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சரை அனுப்புவதற்கு இந்தியப் பிரதமர் கடந்த வியாழக்கிழமை தமிழக அனைத்துக் கட்சித் தலைவர்களுடனான சந்திப்பில் இணக்கம் தெரிவித்திருக்கிறார். இது தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன என்று ஊடகவியலாளர் ஒருவர் அங்கு கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த எதிர்க் கட்சித் தலைவர் கூறியவை வருமாறு:-

ஐக்கியதேசியக்கட்சியின் நிலைப்பாடு தெளிவான முறையில் என்னால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதேவேளை இது தொடர்பாக நாம் இன்று நடைபெறவுள்ள அமர்வுகளிலும் கலந்துரையாடவுள்ளோம். இந்தியாவில் நான் இருந்த காலப் பகுதியில், யுத்த நிறுத்தம் தற்போதைய நிலையில் சாத்தியமில்லை எனக் கூறியிருந்தேன். காரணம், அரசு யுத்த நிறுத்தம் செய்யப் போவதில்லை என்று கூறி வந்தமையே.

அதேவேளை, நாங்கள் இருவிடயங்கள் தொடர்பாக அவதானம் செலுத்தி வருகின்றோம். ஒன்று, இடம்பெயர்ந்துள்ள பொதுமக்களுக் குப் பாதுகாப்பு வலயத்தை ஏற்படுத்துதல். மற்றையது அரசியல் தீர்வின் அவசியம்.

இந்த விடயத்தில் அரசும் ஐக்கிய தேசியக் கட்சியும் மாத்திரம் பேசினால் போதாது. மாறாக தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எம்மோடு பேசுவது அவசியமானது.

யுத்த நிறுத்தம் தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சி பங்களிப்ப தற்குப் பாத்திரம் ஏதும் கிடையாது. காரணம், நாம் 2005ஆம் ஆண்டு யுத்த நிறுத்தமொன்றுக்கு அழைப்பு விடுத்திருந்த போது, அதனை அப்போது ஜனாதிபதி வேட்பாளராக இருந்த தற்போதைய ஜனாதிபதியும் விடுதலைப்புலிகளும் நிராகரித்திருக்கிறார்கள்.

அந்தவகையில் யுத்த நிறுத்தம் மேற்கொள்வதில் எம்மால் ஆற்றக்கூடிய பாத்திரம் ஏதும் கிடையாது. ஆனால் நிச்சயமாக இந்நாட்டிற்கு சமாதானத்தைக் கொண்டுவர வேண்டியது அவசியம். ஆனால் கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் அரசு யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளவில்லை என்றால் அதனை வைத்து அரசியல் நடத்தாமல் பூர்த்தி செய்ய வேண்டும் என்றே ஐக்கிய தேசியக் கட்சித் தரப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளது..

யுத்த நிறுத்தம் தொடர்பாக இலங்கை அரசும் - இந்திய அரசும் கலந்தாராய்ந்து வருவதை நான் அறிவேன். இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் பாதுகாப்பு வலயம் மற்றும் அரசியல் தீர்வு தொடர்பாகவும் நான் கூறியிருக்கிறேன்.

இலங்கை அரசும் இந்திய அரசும் யுத்த நிறுத்தம் தொடர்பாகக் கலந்தாராயுமிடத்து நாங்கள் அதற்குத் தடையாக இருக்கப் போவதில்லை. அது அவர்களே தீர்மானிக்க வேண்டிய ஒன்று, இதுவே எமது நிலைப்பாடு. இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுப்பதானால் அதனை இராணுவ வழிகாட்டல்களுக்கமைய உரிய முறையில் மேற்கொண்டு விரைவில் முடிக்கவேண்டும் - என்றார். (சி)

## தென்மராட்சியில் ஐஸ் உற்பத்தியும் விற்பனையும் சுகாதாரத் திணைக்களத்தால் தற்காலிகமாகத் தடை

யாழ்ப்பாணம், டிசெ.7

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஐஸ் உற்பத்தி மற்றும் விற்பனை என்பன தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என சுகாதார திணைக்கள த்தினர் அறிவித்துள்ளனர்.

அண்மையில் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாகக் குடிதண்ணீர் கிணறுகளுக்குள் வெள்ள நீர் புகுந்திருக்கலாமென கருதுவதால் ஐஸ் உற்பத்தி மற்றும் விற்பனை என்பன தடை செய்யப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தடையினை மீறி உற்பத்தி மற்றும் விற்பனை செய்வோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படு மெனவும் அறிவித்துள்ளனர். (202-207)

## பரீட்சை நிலையம் இடம் மாற்றம்

யாழ்ப்பாணம்,டிசெ.7

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான பரீட்சை நிலையம் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித் துள்ளார். (202-207)

## சத்யஜித் ரேயின் 'நாயக்' திரைப்படம்

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்றுவரும் கல்விசார் கலைத்துவம்சார் படக்காட்சித் தொடரில், காட்சிப்படுத்தப்படுகின்ற உலகின் தலைசிறந்த இந்திய நெறியாளரான சத்யஜித் ரேயின் ஆறு திரைப்படங்களின் வரிசையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு அவரின் நாயக்(1966) திரைப்படம் அரசறிவியல் விரிவுரை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

திரைப்படக்காட்சியின் இறுதியில் திரைப்படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும். ஆர்வலர்கள் அனைவரும் வருகை தந்து பயன்பெற முடியுமென புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (1)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை 23 | 08.12.2008 திங்கட்கிழமை |
| திதி: | தசமி மு.ப.08.47வரை |
| நட்சத்திரம்: | ரேவதி மு. இ. 10.23வரை |
| சுபநேரம்: | 12.18 - 01.48 |
| ராகுகாலம்: | 07.48- 09.18 |

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.7

பட்டதாரிகள் ஆசிரியர் நியமனத்துக்கென 2ஆம் கட்டப் பெயர்ப்பட்டியலில் தெரிவாகியும் இதுவரை நியமனம் கிடைக்காதவர்கள் நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு பெருமாள் கோயில் முன்பாக ஒன்றுகூடும்படி பட்டதாரிகள் செயற்குழு அறிவித்துள்ளது. (204)

## ஜெயந்தி நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.7

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியில் சுவாமி பிரேமானந்த ஜெயந்தி நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணிக்கு சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பஜனை, விசேட ஆன்மீக உரை என்பன இடம்பெறும்.

## மனம் திரும்பி நல்வழி செல்வோம்

ஆண்டவர் இயேசுவின் வழியைச் சீர்படுத்துவதற்காக (மாற் 1:2) திருமுழுக்கு யோவான் அனுப்பப்பட்டார். அவரது பணி இறையரசை ஏற்பதற்கு மக்களைத் தயார் செய்வதாகும். அதே பணியை இன்றும் திருச்சபை ஆற்றுகிறது எனலாம்.

இறை யேசுவைப் பற்றி மக்களுக்கு முன்னுரைப்பது அவரின் பணி. இயேசுதான் மக்களின் பாவங்களை மன்னித்து, மறுவாழ்வு அளிப்பவர் என்பதைத் தம் பணி வழியாகச் சுட்டுகிறார். "பாவமன்னிப்படைய மனம்மாறி திருமுழுக்குப் பெறவேண்டுமென்று" திருமுழுக்கு யோவான் அறிவிக்க மக்களும் தங்கள் "பாவங்களை வெளியிட்டு திருமுழுக்குப் பெற்றனர்" (1:4-5) இயேசு உண்மையாகவே "தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்" (மத் 1:21) என்பதற்கு முன் அறிகுறி யோவானின் போதனையும் செயலும். இதுவே "இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நல்ல செய்தி" (மாற் 1:1) இச்செய்தியைத் தாய்த் திருச்சபை சிறப்பாக இத்திருவருகைக் காலத்தில் நம் கண்முன் வைக்கின்றது. பாவமன்னிப்படைய பரமனிடம் வேண்டுவோம். நமது பாவங்களுக்காக மட்டுமன்று, நம்மைச்சூழ இருப்போரும் மீட்பின் நற்செய்தியைக் கேட்டுத் தம் பாவங்களுக்காக மனம் வருந்தி இறைவனிடம் திரும்பிவர இக் காலத்தில் சிறப்பாகச் செபிப்போம்.




நல்லவர்கள் எப்பொழுதுமே தங்கள் தகுதிக்கு தங்கள் நிலைக்கு, தங்கள் தன்மைக்கு ஏற்றவாறு தான் பரிசுகள் வழங்குவார்கள். நம்மைச் சந்திக்க வரும் இயேசு பெருமான்! அவர் நல்லவர்க்கெல்லாம் நல்லவர் இல்லை, இல்லை, அவர் நன் மையே உருவானவர். அதனால்தான் அவர் இந்த உலகத்தில் வாழந்தபோது சென்ற இடமெல்லாம் நன்மையே செய்து கொண்டு சென்றார்.

நம்மைத் தேடிவரும் இயேசு! அவரின் அன்பு - அது மாறாத அன்பு - அது மறையாத அன்பு - அது மங்காத அன்பு.

காலங்கள் மாறலாம், கோலங்கள் மாறலாம், வானமும் மாறலாம், பூமியும் மாறலாம். ஆனால், நம்மைத்தேடி வரும் கர்த்தரின் கருணை மட்டும், அவருடைய நிலை மட்டும் ஒருபோதும் மாறாது.

இயேசுவுக்கு நம்மைத் தண்டிக்கத் தெரியாது; அவருக்கு சினம் கொள்ளத் தெரியாது;பொறுமையாக இருக்க மட்டுமே தெரியும்.

நம்மைக் கடவுள் தண்டிப்பாரோ என்ற அச்சம் நம்மில் பலருக்கு உண்டு! இதனால்தான் கடவுள் நமக்கு எழுதும் பல கருணைக் கடிதங்களை "இது நானல்ல" எனச் சொல்லித் திருப்பி அனுப்பிவிடுகின்றோம். ஆனால், சற்று கடவுளின் தகுதியை, நிலையை, தன்மையை எண்ணிப் பார்த்தால் நாம் கொண்டிருக்கும் அச்சம் அர்த்தமற்றது என்பது புரியும்.

- நசரேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் கடற்பாதைகள் இப்போது தம்வசம் என்கிறார் கடற்படைத் தளபதி

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தப்பிச் செல்லமுடியாதவாறு கடற்பாதைகளைக் கடற்படையினர் பலப்படுத்தியுள்ளனர். இவ்வாறு தெரிவித்திருக்கிறார் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் வஸந்த கரனகொட.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அவர்மேலும்தெரிவித்துள்ளமைவருமாறு:-

விடுலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தப்பிச் செல்வதற்கு எந்த இடமும் வசதியாக இல்லை.

விடுதலைப் புலிகளின் கடற்பகுதியின் கட்டுப்பாட்டை இப்போது கடற்படையினர் தம்வசமாக்கியுள்ளதே இதற்குக் காரணம் - என்றார் அவர். (அ-1)

## ஊடகவியலாளர் ஜோவின் பூதவுடல் யாழ். கொண்டுவரப்பட்டது

கொழும்பில் நேற்றுமுன்தினம் காலமான பிரபல ஊடகவியலாளர் ஜோ.அரியரத்தினத்தின் பூதவுடல் நேற்று யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டது.விமான மூலம் கொண்டுவரப்பட்ட அவரது சடலம் யாழ்ப்பாணம் சோமசுந்தரம் அவனியுவில் வைக்கப்பட்டுள்ளது.

ரொய்டர், ஏ.எப்.பி, சி.என்.என். உட்பட பல சர்வதேச ஊடகங்களின் யாழ்ப்பாணச் செய்தியாளராகப் பணிபுரிந்த அவர் வெள்ளியன்று கொழும்பில் தனியார் மருத்துமனையில் காலமானார். (அ)

## தமிழகத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரையோர மாவட்டங்களில் கடும் மழையுடன் மணிக்கு 75 கிலோ மீற்றர் வேகத்துடன் காற்று வீசும் என் றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கிளாலியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாலை 6 மணிக்கு சினைப்பர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இரு பகுதியினருக்கும் இடையில் நடந்த மோதல்களில் விடுதலைப்புலிகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது - என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## வன்னிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் 4,356 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.பரீட்சையை நடத்துவதற்கு வசதியாக பாடசாலைகளில் தங்கியிருந்த மக்கள் மாற்று இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் - என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (அ-1)

## வன்னி மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த வேண்டுகோளில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

மோசமான போர் அழுத்தங்களுக்குள்ளும் வாழ் வியல் நெருக்கடிகளுக்குள்ளும் மக்கள் முழுமையாகப் புதையுண்டுள்ளனர்.

உண்ண உணவும், உடுக்க உடு துணியும், மருந்துகளும் இல்லிடமும் இன்றி மிகமோசமான பரிதாபத்திற்குரிய வாழ்க்கையை வன்னி மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இத்தகைய பேரவலத்திற்கு உதவுவதற்கு தொண்டு நிறுவனங்கள் எவையும் இங்கு இல்லை. செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மட்டுமே சேவையாற்றி வருகின்ற போதும் அவலங்களினால் எழுந்துள்ள தேவைகளை நிறைவு செய்ய அதனால் இயலவில்லை என்பது மக்களை வாட்டும் பெரும் கவலையாகும்.

எமதுசெஞ்சிலுவைச் சங்கக் குடும்பம், மருத்துவ சுகாதார சேவைகளை உள்ளூரில் இன்னும் எஞ்சியுள்ள நிதியுதவியாளர்களின் துணையுடன் ஆற்றி வருகின்றது. எதிர்வரும் நாள்களில் குழந்தைகளுக்கான சத்துணவு, பால்மா போன்றவற்றையும் சுகாதார வேலைத்திட்டங்களையும் உணவு, உடை உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளையும் நிறைவு செய்ய வேண்டிய நெருக்கடியான சூழ்நிலை எம் முன்னால் எழுந்துள்ளது.

வன்னி மக்களின் துயர் துடைக்க எல்லோரும்உதவவேண்டும் என்று அவசர வேண்டு கோள் விடுக்கின் றோம் - என்றுள்ளது.(அ-1)

## ஆள்கடத்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆள்கடத்தல் மற்றும் வல்வந்த மாகக் காணாமற்போகச் செய்தல் தொடர்பான உபகுழு 38 நாடுகளின் மிகக் கடுமையான மனித உரிமை மீறல் சம்பவங்களை ஆராய்ந்தது. 505 முந்திய சம்பவங்களும், அவசரமாகக் கருதப்பட்ட 21 சம்பவங்களும் குழுவினால் பரிசீலனை செய்யப் பட்டன.

சீனா, இந்தியா, அமெரிக்கா, பங்களா தேஷ், ஈரான், சுவிற்ஸர்லாந்து உட்பட 38 நாடுக ளின் சம்பவங்கள் மிக விரிவாக ஆராயப்பட்டன. மேற்படி உப குழுவில் உலகத் தின் 5 கண்டங்களையும் சேர்ந்த சுயேச் சையான நிபுணர்கள் அங்கம் வகிக் கின்றனர்.

கூட்டத்தொடரின் முடிவில் இம்மாதம் ஐந்தாம் திகதி விடுக்கப்பட்ட பத்திரிகை அறிக்கையில்-

இலங்கையில் 2008 ஆம் ஆண்டில் ஆள் கடத்தல்,வல்வந்தமாக காணாமற்போகச் செய்தல் சம்வங்கள் மிகவும் அதிகரித்துள்ளன. இது கண்டிக்கப்படவேண்டியதாகும்; கவலைக்குரியதாகும்என்றுதெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஐ.நா.மனித உரிமை பிரகடனத்தையும் அதன் விதிகளையும் நடைமுறைப்படுத்துவதில்அரசாங்கங்கள் காட்டிவரும் மெத்தனப்போக்குகள் குறித்து அந்தந்த நாடுகளில் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்களும் உப குழுவுக்கு அறிக்கைகளை சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(அ)

## கொழும்புத் துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவப் புலனாய்வுத்துறையினர் தெரிவித்திருக்கின்றனர்.

கொழும்பில் இருந்து வெளியாகும் 'லங்காதீப' சிங்கள பத்திரிகை, புலனாய்வுத் துறையை மேற்கோள்காட்டி இது சம்பந்தமான செய்தியை நேற்று வெளியிட்டிருக்கிறது.

கொழும்பு துறைமுகத்தை தாக்கி அழிப்பதற்கு விடுதலைப்புலிகள் திட்டமிட்டுள்ளனர். இதற்காக விடுதலைப்புலிகளின் பத்து உறுப்பினர்கள் கொழும்புக்குள் ஊடுருவியிருக்கின்றார்கள்-

இதனையடுத்து கொழும்பிலும் அதனைச் சூழவுள்ள இடங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது- என்று அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (அ-1)

## கிளிநொச்சிக்கு மேற்கே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்புலிகள் மீது தாக்குதல் நடத்தி அவர்களது முயற்சியை முறி யடித்தனர்.

படையினரின் முன்னரங்குகளை விடுதலைப்புலிகள் அணுகமுடியாதவாறு கடும் தாக்குதலைப் படையினர் மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் அடம்பன், அடம்பன் வடக்கு, இரணைமடு மேற்கு, திருமுறிகண்டி தெற்கு ஆகிய பகுதிகள் மீது படையினர் கடும் தாக்குதல்களை நடத்தி விடுதலைப்புலிகளுக்கு சேதங்களை ஏற்படுத்தினர் - என்றும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது.

இந்த மோதல்கள் குறித்து விடுதலைப் புலிகள் தரப்புத் தகவல்கள் எதுவும் நேற்றிரவு வரை வெளி யாகவில்லை. (அ-1)

## ஏ - 9 பாதையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரையான ஏ-9 பாதையில் நேற்று மாலை வரை 30 கிலோ மீற்றரைப் படையினர் மீட்டுவிட்டனர். எஞ்சிய 30 கிலோ மீற்றர் தூரமே விடுதலைப் புலிகளின் கைகளில் உள்ளது.

கனகராயன்குளத்தை மீட்ட படையினர் முன்னர் தாம் மீட்ட பிரதேசத்துடன் நேற்று இணைத்துக் கொண்டனர்.

கொக்காவில் ஊடாக முன்னேறிய படையினரும் கனகராயன்குளம் ஊடாக முன்னேறிய படையினரும் ஒன்று சேர்ந்தனர் - என்றும் உதய நாணயக்கார தெரிவித்தார். (அ-1)

## குடாநாட்டின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்குச் சென்றிருந்தனர்.

இதேவேளை வானிலை அவதான நிலையம் நேற்று நண்பகல் விடுத்த அறிக்கையில்-

மட்டக்களப்புக்கு கிழக்கே 400 கிலோ மீற்றர் தொலைவில் கடுமையான தாழமுக்கம் மையம் கொண்டுள்ளது. அது மேலும் தீவிரமடைந்து மேற்கு- வடக்கு-மேற்கு திசையாக நகரக்கூடும். அதன் விளைவாக கிழக்கு, வடக்கு, வடமத்திய மாகாணங்களில் இடி முழக்கத்துடன் கூடிய மழை விட்டுவிட்டுப் பெய்யும். கடும் காற்றும் வீசும். கடற்கொந்தளிப்பும் இருக்கும் - என்று தெரிவித்திருந்தது.

கடற்கொந்தளிப்பு வரக்கூடும் என்று வடமராட்சியில் பிரதேச செயலர்கள் விடுத்த எச்சரிக்கையை அடுத்து கரையோர மக்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந் துள்ளனர்.

நாவாந்துறைப் பகுதியில் கடல்நீர் உள்வாங்கப்பட்டதாகவும் அதனைக் கண்டு ஆழிப் பேரலை (சுனாமி) அனர்த்தம் நிகழலாம் என்ற அச்சத்தில் கரையோர மக்கள் வேறு இடங்களுக்கு சென்றனர். படை யினரும் தமது காவலரண்களை பின்நகர்த் தினர்.

வல்லைக்கடல்நீரேரிபெருக்கெடுத்தமையால் மழை நீர் கடலில் சேர முடியவில்லை என்றும் அதனால் கடல் நீர் மட்டம் உயரலாம் என்றும் அஞ்சப்பட்டது. அப்பகுதிகளில் வாழும் மக்களை வேறு இடங்களுக்குச் செல்லுமாறு படையினர் அறிவுறுத்தியதோடு அதற்கு உதவியும் புரிந்தனர்.

குருநகர், பாசையூர், கொழும்புத்துறை பகுதிகளில் கரையோரங்களில் வாழும் மக்களும் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந் துள்ளனர்.

அதேவேளை-

புயல் வீசலாம் என்ற அச்சத்தில் குடாநாட்டில் நேற்றுப் பகலிலேயே பல இடங்களில் தமது வீடுகளுக்கு அருகில் உள்ள பாரிய மரங்களின் கிளைகளை வெட்டி அப்புறப் படுத்துவதில் மக்கள் தீவிரமாக ஈடுபட்டி ருந்தனர். (அ-1-203-70-111)


தரம் 9, 10, O/L

| | |
|---|---|
| தமிழ் | - B.சற்குணராஜா |
| கணிதம் | - S. கிருஸ்ணதாஸ் |
| | P.உதயன் |
| விஞ்ஞானம் | - M. நிரோஜன் |
| | M. பிரியந்தன் |
| சமயம் | - S.ஜெயகாந்தன் |
| வரலாறு | - K.ரவிக்குமார் |
| ஆங்கிலம் | - S.வாசவன் |
| வர்த்தகம் | - S.ஆயவன் |

ஆரம்பம் 10.12.2008 புதன் பிற்பகல்3 மணி
* அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
NEW SCIENCE HALL
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்

SUBRA (14)கல்வி நிறுவனம்
கல்வி ஆண்டு 2009
ஆரம்பம் - 07.12.2008(ஞாயிறு)
சித்தன்கேணி -காலை 10
வட்டுக்கோட்டை காலை 11
* எமது தாரமும் தகுதியுமிக்க ஆசிரியகுழு
* நாம் இப் பிரதேசத்தவர் உங்களுக்கு நம்பிக்கையானவர்.
* கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இதுவே எமது வெளிப்பாடு
2007 இல் 10 A பெறுபேறு எஸ். சுகிர்தன்,ரி.லம்போதரன்
2007 இல் புலமைப்பரிசில் எஸ்.வத்சலா,ரி.திருமகள்
28 மாணவர்கள்

உள்நாட்டு வெளிநாட்டுகளிற்கான!
துரித தபால்கள் பொதிகள் சேவை
யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
FedEx Express
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள
வாடிக்கையாளரின் நலன்கருதி
லண்டன்,சுவிஸ்,பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா வீதமும்.
கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kgபொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.
WESTERN UNION மணி டிரான்ஸ்பர்
Money Master
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)

32 ஆவது வருட சேவை
கல்வியாண்டு 2009
கிளை 417, கே.கே.எஸ். வீதி
(யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில்)
தரம் 6, 7, 8, 9, 10,O/L Evening Class
ஆரம்பம்- 10.12.2008 காலை 9மணி
* யாழ்.நகரில் அனுபவமும் அதி திறமையும் உள்ள ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை.
* கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடன் நடத்தும் ஒரே நிறுவனம்.
* இன்று முதல் கிளை நிறுவனத்தில்3 மணி தொடக்கம் 5 மணி வரை அனுமதி களைப் பெற்றுக்கொள்ளலாம்.
விக்னா கல்வி நிறுவனம்
கிளை 417, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

SHAMROCK
இணைந்த கணிதம்
Sat., Sun. 4 -6 p.m.
Mr.K. B.Sc.
புதியகல்வி ஆண்டு2009
Gr.1 முதல் O/Lவரை

விக்னா
கணக்கீடு
B.B.A.(FM SPL)
A/L 2009
கிரயக்கணக்கீடு
Mon.,Wed.,Fri. 10-12
ஆரம்பம் 08.12.2008 Mon. 10 a.m.
A/L 2010
உற்பத்திக் கணக்கு
Tue.,Thu.- 11 - 12
ஆரம்பம் 09.12.2008 Tue 11 a.m.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses...
* Dip in Computerized Accounting
## MS Office ## DTP *V.B, VB.net
* Hardware * Web Designing
* Video Editing *AutoCAD *3D
International Courses...
*MCP *MCSE *MCTS,*CIW
*CISCO *A+ *N+,SUN JAVA
*ComTIA SECURITY+, HP, Adobe
Degree Course * BIT Semester 1,3 & 5
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP
www.mcsitacademy.com

ICT புதிய வகுப்புகள் ஆரம்பம் R.KUMARAN
Tamil/ English Medium Classes
Grade 10 - Fundamentals
Grade 11- Visual Basic(VB6)
BY: R.KUMARAN (B.Sc.)
தொ.பே.: 060 221 6083

BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்
கல்வியாண்டு 2009
தரம் 3முதல் O/L வரை
GRADE 6,7,8,9,10,11
ENGLISH MEDIUM CLASSES
எமது 'SUPER GRADE' ஆசிரிய குழுவினால் கற்பிக்கப்படுகின்றது.
ஆரம்பம் 10.12.2008 புதன் காலை 9 a.m.

"மழலைகள் அமுதம்"
இறுவட்டு வெளியீட்டு விழா
இன்று பி.ப 1மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில்
கவின் கலை மன்றம் - யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை
விவரங்கள் 16 ஆம் பக்கத்தில்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org